MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES No. 40

# அண்டகோள விலாசம்

[வேம்பத்தூர் முத்து வேங்கட சுப்பையன் இயற்றியது]

(உரையுடன்)

# AṆḌAGŌḶA VILĀSAM

BY

MUTTU VĒṄKAṬASUBBAIYAN OF VĒMBATTŪR

WITH

COMMENTARY

EDITED BY

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

*Curator, Government Oriental Manuscripts Library, Madras*

AND

THE STAFF OF THE LIBRARY

*(Prepared under the orders of the Government of Madras)*

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS
1954

*Price, Rs.* 2-6-0

MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES No. 40

# அண்டகோள விலாசம்

[வேம்பத்தூர் முத்து வேங்கட சுப்பையன் இயற்றியது]

(உரையுடன்)

# ANDAGOLA VILASAM

BY

MUTTU VEṄKAṬASUBBAIYAN OF VĒMBATTŪR

WITH

COMMENTARY

EDITED BY

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

*Curator, Government Oriental Manuscripts Library, Madras*

AND

THE STAFF OF THE LIBRARY

(*Prepared under the orders of the Government of Madras*)

PRINTED BY THE SUPERINTENDENT
GOVERNMENT PRESS
MADRAS
1954

# PREFACE

ANDAGŌḶA VILĀSAM is a treatise based on the Purāṇas, particularly Bhāgavata Purāṇam, Viṣṇu Purāṇam, Kūrma Purāṇam, Skanda Purāṇam and Āgnēya Purāṇam. It describes the magnitude of each of the Gōḷas of the Universe.

There are four chapters in this treatise. One deals with the Nether Region, the second deals about the terrestrial region we inhabit, the mountains, the several continents, etc., the third describes about the seven seas and islands in them and their inhabitants and the last describes about the regions of the sky, the nine planets, the Sapta-Riṣi-Maṇḍalam, etc.

The whole description is very gorgeous and beautiful, sweetended by a lucid poetic style. It consists of 252 stanzas on the whole, with commentary for each stanza.

The author, Sri Muttu Vēṅkata Subbaiyan, a descendant of Kavirāja Paṇḍitar, was a Brahmin belonging to Vēmbattūr village near Paramakkudi in Ramnad district. He had great devotion to his teacher "Sri Pālvaṇṇa Śāstriyār" whom, the author revered very much. The name of the commentator is not known.

The manuscript is described under Triennial Catalogue R. No. 495 (a) transcribed in 1921–22 from the original manuscript belonging to Sri L. Ramasubbier of Vembattur, Ramnad district.

My thanks are due to the Tamil Pandits of this Library for preparing the press-copy and correcting the proof.

T. CHANDRASEKHARAN,
*Curator.*

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
*Madras-5, 15th September 1954.*

# முன்னுரை.

"அண்டகோள விலாசம்" என்னும் இந்நூல், வடமொழியிலுள்ள பாகவத புராணம், கந்தபுராணம், கூர்ம புராணம், ஆக்கினேய புராணம், விஷ்ணு புராணம் முதலியவற்றில் கூறப்பட்ட அண்டகோளப் பிரமாணங்கள் பலவற்றைத் தொகுத்துத் தமிழில் கூறுகின்றது. செய்யுள் நடையாலாயது. ஒவ்வொரு செய்யுளுக்கும் பொழிப்புரையுமுள்ளது.

இவற்றை, நூலின் அவையடக்கமென்ற பகுதியில் கூறப்பெற்றுள்ள பின்வருஞ் செய்யுட்களால் நன்கு உணரலாம்.

" இருடிகள் பகரும் பதினென் புராணத்
    தியல்பண்ட கோளத்தின் மான
மொருமுனி சொற்போ லிலையெனப் பெரியோ
    ருரைத்திட வறிந்ததன் சுகரால்
அருளிய பாக வதமுடன் காந்த
    மாக்னேயங் கூருமம் பலநூல்
சுருதியு முணர்ந்த பராசர முனிவன்
    துதிக்குமைத் ரேயர்க்குச் சொல்லும் ; (5)

புரையறு விண்டு புராணத்தின் படியே
    புகன்றிடும் வடமொழி யதனைக்
குருவர னருளால் ஒருதொகைப் படுத்திக்
    கூறுமென் சிற்றறி வதனுல்
கருதிய நான்கத் தியாயமாய்த் தமிழாற்
    கழிறிடப் பாவினம் பலவாய்
உரைசெயு மென்புன் சொற்பிழை திருத்தி
    வுலகினிற் கொள்ளுவர் பெரியோர். (6)

முனிவர்கள் அருளிய பதினெண் புராணங்களிலும் கூறப்படுகின்ற அண்டகோளப் பிரமாணங்கள் ஒரு நூலில் கூறுவது போன்று இன்னொன்றில் இல்லை என்று பெரியோர்கள் சொல்லுவதை உணர்ந்து, பாகவதம் முதலிய பலநூல்களைக்கற்ற பராசரமுனிவர் மைத்திரேயர்க்கு உரைத்த விஷ்ணு புராணத்துள் கூறப்பட்ட அண்டகோளப் பிரமாணங்களை, குருநாதன் அருளால் தமிழ்ப்படுத்திச் செய்யுள் வடிவில் இவ்வரிய நூலாக ஆசிரியர் இயற்றினுர் என்பது இப் பாடல்களால் புலனுகின்றது. இது நான்கு அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது.

"கருதிய நான்கத்தியாயமாய்" (அவையடக்கம் : 6) என்பதனுல் இதனை யறியலாம். அவை : 1. பாதாள வருணனை யுரைத்த வத்தியாயம், 2. நவகண்ட முரைத்த வத்தியாயம், 3. எழுகட லறுதீ வுரைத்த வத்தியாயம். 4. மேலுலக முரைத்த வத்தியாயம் என்பன.

முதல் அத்தியாயத்தில் சுவர்ன பூமி, பாதாளம், நரகம் என்ற மூன்றின் இயல்புகள், அவற்றிலுள்ள விசேடங்கள், அவற்றின் அளவுகள், நரகத்தின் பல்வேறு பகுதிகள், இன்ன இன்ன குற்றஞ் செய்தவர்கள் அடைகின்ற இடங்கள் இவையிவை என்பன போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவதனுள், பூவுலகத்தில் இருக்கின்ற மேரு முதலான மலைகளின் அளவுகள், அஷ்டதிக்குப் பாலகர் இருப்பிடங்கள், பரதகண்டம், கிம்புருடகண்டம் முதலான நவகண்டங்களின் அளவுப் பிரமாணங்கள், மனுவமிச விவரங்கள், நவகண்டங்களிலும் வசிப்பவர்களின் உருவ அமைப்பு, நிறம், வயது முதலிய விவரங்கள், ஆகியவை சொல்லப்பட்டிருக்கின்றன. தவிரவும், பரதகண்டமே மிகச் சிறந்தது என்றும், பல புண்ணியத் தலங்களும் நதிகளும் இங்குள்ளன எனவும், இங்குப் பிறந்து வளர்ந்து ஞானமுணர்ந்து நதிகளில் நீராடி, தலயாத்திரை செய்து இறைவனைத் தியானித்து மோட்சமடைய விரும்புவர் பெரியோர் என்றும் இறுதியில் விளக்கப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது எழுகட லுறுதீ வுரைத்த அத்தியாயத்தில் ஏழு கடல்கள், அவற்றின் இடையில் இருக்கின்ற தீவுகள், அத் தீவுகளில் உள்ள ராசாக்கள், மலைகள், நதிகள் மற்றுமுள்ள பொருள்கள் ஆகிய விவரங்கள் கூறப் பெறுகின்றன.

நான்காம் அத்தியாயத்தில், சொர்க்கலோக முதலான ஏழு உலகங்கள், அவற்றுள் இருப்பவர்கள், நவமேகங்கள், நவக்கிரகங்கள், சப்தரிஷி மண்டலம், சிம்சுமார லட்சணம் முதலான பலவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

அவையடக்கமுட்பட இந்நூலுள் 252 பாடல்கள் உள்ளன. செய்யுட்கள் சொற்சுவையும் பொருட் சுவையும் பொருந்தியன. சந்தப் பாடல்களும் இடையிடையே உள்ளன. உரையும், பாடல்களுக்கு நல்லதொரு விளக்கமாக அமைந்திருக்கின்றது.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் "முத்து வேங்கடசுப்பையன்" என்பது. அவர் வேம்பத்தூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். அந்தண மரபினர். வேம்பத்தூர் என்பது இராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த பரமக்குடிக்கு அருகிலுளது. பல தமிழ் நூல்களை இயற்றிய கவி ராஜ பண்டிதர் என்பாரின் வமிசத்தினர். பின்வரும் பாடல் இவற்றைத் தெரிவிக்கின்றது.

"அத்தன் வெண்கம லத்தன் மாலுறு
மண்ட கோள விலாசமேர
கத்து வெண்டிரை யமுதெ னக்கவி
ராச பண்டித னனுவயன்
மெத்த வெண்டயி ருண்ட சுந்தர
ராசன் வேம்பத்தூர் வேதியன்
முத்து வேங்கட சுப்பை யன்சொலு
முத்த மிழ்களும் வாழியே. (அத் : 4. செ. 84.)

இவ்வாசிரியர் " பால்வண்ண ராம சாஸ்திரியார் " என்ற பேரறிஞரிடம் பயின்றவர் என்பதும், அவர்மீது மிகுந்த பக்தியுடையவர் என்பதும்,

" வேத வியாச ரனையவே தாங்கமு
மோது வேதாந்த சாஸ்திர முணர்ந்திடுங்
கோதில் பால்வண்ண ராம குருபதப்
போது சென்னியிற் சூட்டிப் புகலுவாம்.

(அவையட : 4.)

என்றது, வேதவியாசருக்குச் சமானமான, சடங்கத்துடனே கூடிய வேதமும் வேதாந்த சாஸ்திரங்களையு முணர்ந்த குருவாகிய பால்வண்ண ராம சாஸ்திரிகளுடைய பாதாரவிந்தத்தைச் சிரசின் மேற்கொண்டு அண்டகோளப் பிராமணத்தைச் சொல்லுவோம் என்றவாறு " என்பவற்றால் விளங்கும். உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. நூலாசிரியரே உரையும் இயற்றி யிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

இந் நூலினை, பில வங்க ஆண்டு வைகாசித் திங்கள் ஒன்பதாந் தேதி இவ்வாசிரியர் இயற்றினார் என்பது பின் காணும் பாடலையும் அதன் உரையினையும் நோக்குமிடத்து விளங்குகின்றது.

" . . . . . . பகலோன் றன்னூர்க்
கேகாமல் விலக்கினவ னூரெரித்த
வன்வருட மானே றிங்கன்
வாகான மணித்தேதி மாலண்ட
கோள மதை வகுத்தல் செய்தாம்.

[அத்.பு.செ 81

" . . . சூரியனைத் தன்னூரிற் போகவொட்டாமல் விலக்கின ராவணனுடைய இலங்காபுரியை எரித்தவன் (அநுமன்) பேரையுடைய வருஷம் (பிலவங்க), பரமேச்வரன் வாகனமாகிய மாசம் (விருஷபம் : வைகாசி), நவமணியான (ஒன்பது) தேதியில் பெருமை பொருந்திய அண்டகோளத்தை உரைத்தோம். "

இது, இந்நூல் நிலைய மூவருடக் காட்லாக் R. 495 (a) என்ற எண்ணின் கீழ் வருணிக்கப்பட்டுள்ள காகிதக் கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்படுகின்றது. அந்தப் பிரதி, வேம்பத்தூர் ஸ்ரீ. L. ராமசுப்பையர் என்பாரிடமிருந்த பிரதியைப் பார்த்து 1921-22-ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பட்டதாகும்.

இறுதியாக, இதனை மூலப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி, அச்சிடும் வகையில் அமைத்துக் கொடுத்த இந்நூல் நிலையத் தமிழ்ப் பண்டிதர்கட்கு என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

சென்னை,
1954-ஆம் ஆண்டு செப்டெம்பர் மீ 15உ. } தி. சந்திரசேகரன்.

# அண்டகோள விலாசம்

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அசுவினீ | 76 |
| அடர்திரைக் | 31 |
| அடர்ந்தா | 32 |
| அடியந்த | 24 |
| அடுத்தவர்க் | 13 |
| அண்டவுண் | 6 |
| அதலம் | 22 |
| அதலலோ | 21 |
| அதன்மேல் | 18 |
| அத்தன் | 83 |
| அத்தியன் | 69 |
| அத்திரி | 67 |
| அத்தீவி | 54 |
| அந்தமண் | 76 |
| அந்திய | 16 |
| அபசவியன் | 59 |
| அம்புலி | 70 |
| அயன்மனை | 30 |
| அரசன் | 14 |
| அரிதனு | 50 |
| அரியவெம் | 55 |
| அரியீன் | 39 |
| அருத்தங் | 77 |
| அருநகர் | 29 |
| அரு நிமைத்த | 42 |
| அருந்தவ | 75 |
| அலைகடல் | 46 |
| அவ்வாண் | 81 |
| அவ்வாற | 65 |
| அவ்வுலகு | 78 |
| அழலினன் | 70 |
| அழிவில் | 38 |
| அளிதுதை | 21 |
| அறைகின்ற | 25 |
| ஆச்சிய | 51 |
| ஆண்டினுக் | 58 |
| ஆதவன் | 60 |
| ஆயிரஞ் | 63 |
| ஆயிரமுப் | 60 |
| ஆரண | 1 |
| ஆரமா | 28 |
| ஆருமதன் | 71 |
| ஆரும் | 8 |
| இதம்பெற | 62 |
| இதவிக்கு | 48 |
| இந்தமண் | 59 |
| இப்பொழுதே | 82 |
| இரண்டா | 73 |
| இரதமதி | 64 |
| இருடிகள் | 2 |
| இருவா | 81 |
| இவனுடைய | 74 |
| இனியபே | 61 |
| இறைபா | 42 |
| ஈசனார் | 30 |
| உடுத்திடும் | 53 |
| உத்தர | 39 |
| உந்தராச | 9 |
| உரியதோர் | 76 |
| உரைசெயு | 83 |
| உரைத்திடும் | 57 |
| உலருறு | 80 |
| உலவுமெண் | 52 |
| உற்றவம் | 55 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| ஊருந்தேரோ | 72 |
| ஊற்றெழுங் | 54 |
| எண்ணூறு | 24 |
| எண்ணுமகர | 4 |
| எமனூர் | 72 |
| எம்மாற் | 29 |
| எரியை | 9 |
| ஏரதன் | 34 |
| ஏற்றமுள | 41 |
| ஐந்து | 13 |
| ஒக்கும்வண் | 61 |
| ஒருகலை | 70 |
| ஒளிதரு | 67 |
| கச்சப | 39 |
| கடலுங் | 56 |
| கணக்கனுங் | 75 |
| கண்டிலங்கு | 6 |
| கதிரினெழு | 58 |
| கதிர்க் | 43 |
| கமலயோனி | 77 |
| கருதுசில | 30 |
| கருதுபுவ | 80 |
| கள்ளருந் | 10 |
| கனியுடைந் | 19 |
| காசியு | 44 |
| காடார் | 66 |
| காலசக் | 63 |
| கிடக்கி | 40 |
| கிம்புருட | 39 |
| கீர்த்தி | 27 |
| கீர்த்திசேர் | 28 |
| குக்குடக் | 5 |
| குணக்கின் | 47 |
| குணக்குச் | 25 |
| கும்பமதின் | 70 |
| குருவைப் | 16 |
| குரைச்சிலம் | 52 |
| குரைத்தெறி | 54 |
| குலமேரு | 32 |
| குவடெனுங் | 50 |
| குற்றமன் | 12 |

| செம்யுள். | பக்கம். |
|---|---|
| கூடசாட் | 15 |
| கொடியதீ | 9 |
| கொந்துறு | 4 |
| கோடிக்கோர் | 3 |
| கோடிமேல் | 12 |
| சக்கரத்தி | 61 |
| சக்கிரமேல் | 75 |
| சங்கடந்தா | 11 |
| சண்டன் | 64 |
| சந்திரமண் | 74 |
| சந்திரமா | 8 |
| சரவணத் | 1 |
| சனகாதி | 77 |
| சாதிவணிக | 71 |
| சாத்திர | 45 |
| சாருமதன் | 77 |
| சித்தவித் | 19 |
| சிலைப்பு | 81 |
| சீலவையர் | 3 |
| சுரக்கு | 51 |
| சுரரிருக் | 20 |
| சுப்பிர | 13 |
| செம்பொன் | 36 |
| செயமுனி | 59 |
| செறிபவ | 50 |
| சேரும் | 5 |
| சேரும் ராச | 10 |
| சொல்லரிய | 21 |
| சொன்னு | 56 |
| சோருந் | 5 |
| தருசாக | 53 |
| தருமொரு | 15 |
| தலையிர | 25 |
| தாதாபுலத் | 66 |
| தாதை சுதை | 65 |
| தாமதன் | 29 |
| தாமரைப் | 38 |
| தாயர் | 8 |
| தாலஞ்சவு | 73 |
| தாழுமோர் | 8 |
| தாணுயிரத் | 32 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| தானையன் .. .. .. | 14 | பாருறு .. .. .. | 47 |
| திங்களுக் .. .. .. | 69 | பானுவின் .. .. .. | 5 |
| திலச்செக் .. .. .. | 60 | பின்னெம .. .. .. | 29 |
| துஞ்சுகார் .. .. .. | 55 | புடவியின் .. .. .. | 49 |
| தூவுமக .. .. .. | 29 | புரையுறு .. .. .. | 2 |
| தேன் குல .. .. .. | 53 | புல்லர் .. .. .. | 22 |
| நகமார் .. .. .. | 31 | பூரணமாகி .. .. .. | 4 |
| நகமேழ் .. .. .. | 48 | பூவுலகி .. .. .. | 28 |
| நம்பினோர் .. .. .. | 17 | பெருகுநா .. .. .. | 57 |
| நளிராரு .. .. .. | 40 | பெற்றச் .. .. .. | 60 |
| நளினிபா .. .. .. | 44 | பேசுபூரு .. .. .. | 68 |
| நறவுகொப் .. .. .. | 43 | பொன்மலைக் .. .. .. | 35 |
| நறைகமழ்ந் .. .. .. | 19 | பொன்னங் .. .. .. | 24 |
| நற்றலத் .. .. .. | 56 | பொன்னார் .. .. .. | 33 |
| நித்தியப் .. .. .. | 82 | பொன்னியா .. .. .. | 44 |
| நியுதமேழு .. .. .. | 9 | மகம்புரி .. .. .. | 62 |
| நிருதிக்கு .. .. .. | 29 | மகியினிறக் .. .. .. | 7 |
| நீடும்வஞ் .. .. .. | 11 | மணிமலை .. .. .. | 58 |
| நீலநிட .. .. .. | 34 | மண்டல .. .. .. | 57 |
| நீலவரை .. .. .. | 35 | மதனஞ் .. .. .. | 66 |
| நேருறும் .. .. .. | 36 | மதிபோல் .. .. .. | 18 |
| பசும்பொன் .. .. .. | 31 | மறையவர்க் .. .. .. | 51 |
| பஞ்சமா .. .. .. | 14 | மற்றதன் .. .. .. | 31 |
| பண்டுநா .. .. .. | 12 | மனுக்க .. .. .. | 37 |
| பதினொரு .. .. .. | 49 | மனைசண்ட .. .. .. | 13 |
| பயில்பின் .. .. .. | 52 | மன்னிரை .. .. .. | 10 |
| பரதகண் .. .. .. | 42 | மன்னும் .. .. .. | 12 |
| பரதமொன் .. .. .. | 36 | மாசறுங் .. .. .. | 27 |
| பரிகடும் .. .. .. | 26 | மாவியா .. .. .. | 1 |
| பரிவர்த் .. .. .. | 6 | மானமோர் .. .. .. | 15 |
| பரிவின் .. .. .. | 26 | மிகநெடிய .. .. .. | 22 |
| பருதியஞ் .. .. .. | 41 | மிகு நாவ .. .. .. | 33 |
| பனிமொழி .. .. .. | 68 | மீகாக்கு .. .. .. | 83 |
| பன்னிரு .. .. .. | 69 | மித்திரக் .. .. .. | 17 |
| பாசகஸ் .. .. .. | 27 | மீறுமனத் .. .. .. | 77 |
| பாண்டு நிற .. .. .. | 73 | முகைவிரிந் .. .. .. | 20 |
| பாதலம் .. .. .. | 23 | முதலைவாய் .. .. .. | 62 |
| பாரதவரு .. .. .. | 40 | மேருநடு .. .. .. | 47 |
| பாரநெல் .. .. .. | 5 | மேவுமுன் .. .. .. | 34 |
| பாரவண் .. .. .. | 3 | வசந்தங் .. .. .. | 64 |
| பாரினுங் .. .. .. | 23 | | |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|
| வச்சிரப் .. .. .. | 55 | விண்ணுரும் .. .. .. | 35 |
| வஞ்சரார் .. .. .. | 11 | விதியுலகீ .. .. .. | 28 |
| வஞ்சி .. .. .. | 9 | விரிவா .. .. .. | 80 |
| வடபாலி .. .. .. | 63 | விற்பிடித் .. .. .. | 76 |
| வடவரை .. .. .. | 23 | வீசுவிசு .. .. .. | 68 |
| வண்டார் .. .. .. | 32 | வெச்சென் .. .. .. | 38 |
| வம்பலர் .. .. .. | 23 | வெப்பமகா .. .. .. | 16 |
| வளைந்திடும் .. .. .. | 81 | வெருக்கொ .. .. .. | 26 |
| வயதும .. .. .. | 38 | வெருபயோற் .. .. | 7 |
| வாசவ .. .. .. | 28 | வேங்கடந் .. .. .. | 45 |
| வாரிவ .. .. .. | 48 | வேதவிக் .. .. .. | 17 |
| வாவுமே .. .. .. | 33 | வேதவி .. .. .. | 2 |

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள். | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை (ஆங்கிலம்) .. .. .. .. .. | i |
| 2. | முகவுரை (தமிழ்) .. .. .. .. .. | iii |
| 3. | செய்யுள் முதற்குறிப் பகராதி .. .. .. .. | vii |
| 4. | அவையடக்கம் .. .. .. .. .. | 1 |
| 5. | பாதாள வருணனை யுரைத்த வத்தியாயம் .. .. | 5 |
| 6. | நவகண்ட முரைத்த வத்தியாயம் .. .. .. | 23 |
| 7. | எழுகடலறுதீ வுரைத்த வத்தியாயம் .. .. .. | 47 |
| 8. | மேலுலக முரைத்த வத்தியாயம் .. .. .. | 57 |


---

# அண்டகோள விலாசம்

(உரையுடன்)

## அவையடக்கம்

1. ஆரண வடிவா யொற்றை யணிமருப் பிருகால் முக்கட்
காரண நால்வா யைந்து கையுனே வேம்பத் தூரின்
ஏரணி யிருச கத்ரத் தெண்கண பதியைப் போற்றிச்
சீரணி யண்ட கோளத் தியல்பினைச் செப்ப லுற்றும்.

[இதன் பொருள்] :—என்றது, வேதசொரூபமாகி யொருகொம்பு மிரண்டு பாதமும் மூன்று கண்ணுந் தொங்காநின்ற வாயும் ஐந்து கையையு முடைத்தாய் அழகு பொருந்திய வேம்பத்தூரில் மேவும் இரண்டாயிரத்தெட்டு விநாயகனைத் தோத்திரஞ் செய்து, பெருமை பொருந்திய அண்ட கோளப் பிரமாணங்களைச் சொல்லுவோ மென்றவாறு.

2. சரவணத் துதித்துப் பாரிற் சண்முகக் குழவி யாகிப்
பரமனைச் சிறையில் வைத்துப் பிஞ்ஞகர்க் குபதே சித்துச்
சுரபதி யுலக டைந்த சூரனை வெல்வே லோனைப்
பரவியே யண்ட கோளப் பான்மையை யுரைக்க லுற்றும்.

என்றது, சரவணத்தில் பிறந்து, பூமியின் கண்ணே ஆறுமுகத்தை யுடைய குழந்தையாகிப் பிரமதேவனைச் சிறையில் வைத்து, ஈசனுக்கு உபதேசஞ் செய்து, தேவலோகத்துக்கு இடுக்கஞ் செய்த ஞான முதலாகிய அசுரரைச் சங்கரித்த வேலையுடைய சுப்பிரமணியக் கடவுளை வணக்கஞ் செய்து, அண்ட கோளப் பிரமாணத்தைச் சொல்லுவோ மென்றவாறு.

3. மாவியா கரணி தந்தை வாதுதார்க் கியனே பிராதா
சோவின்மீ மாஞ்சன் சண்டன் சுருதியர் மைந்த னென்றுங்
காவிய மலங்கா ரங்கள் கற்றவன் காந்த னாக
மேவுநா மகளைப் போற்றி விளம்புவா மண்ட மானம்.

என்றது, பெருமையை யுடைய வியாகரண சாஸ்திரங் கற்றவன் பிதாவாகவும், தர்க்க சாஸ்திரங் கற்றவர் தமையனாகவும், மீமாம்சை யென்னும் வேதாந்தங் கற்றவர் சேடியாகவும், வேதாத்தியாபகர் புத்திரனாகவும் காவியமலங்காரங் கற்றவர் கணவனாகவும் நினைத்து, வாசம் பண்ணாநின்ற சரசுவதியைத் தோத்திரஞ் செய்து, அண்டகோளப் பிரமாணத்தைச் சொல்லுவோ மென்றவாறு.

## நூலாசிரியர் குரு வணக்கம்

(வேறு.)

4. வேத வியாச ரனையவே தாங்கமு
மோது வேதாந்த சாத்ர முணர்ந்திடுங்
கோதில் பால்வண்ண ராம குருபதப்
போது சென்னியிற் சூட்டிப் புகலுவாம்.

என்றது, வேதவியாசருக்குச் சமானமான சடங்கத்துடனே கூடிய வேதமும் வேதாந்த சாஸ்திரங்களையும் உணர்ந்த குருவாகிய பால்வண்ணராம சாஸ்திரியாருடைய பாதார விந்தத்தைச் சிரமேற்கொண்டு அண்ட கோளப் பிரமாணத்தைச் சொல்லுவோ மென்றவாறு.

## நூல் வந்த வழி

(வேறு.)

5. இருடிகள் பகரும் பதினெண் புராணத்
தியல்பண்ட கோளத்தின் மானம்
ஒருமுனி சொற்போ லிலையெனப் பெரியோ
ருரைத்திட வறிந்ததின் சுகரால்
அருளிய பாக வதமுடன் காந்த
மாக்னேயங் கூருமம் பலநூல்
சுருதியு முணர்ந்த பராசர முனிவன்
றுதிக்குமைத் ரேயர்க்குச் சொல்லும்.

என்றது, முனீசுவரர்களாற் சொல்லப்பட்ட பதினெண் புராணத்திலுஞ் சொல்லிய அண்ட கோளப் பிரமாணம், ஒரு முனிவர் சொன்ன பிரகாரம் ஒரு முனிவர் சொல்லவில்லையென்று, பெரியோர்கள் சொல்லவறிந்து, சுகப்பிரம்ம முனிவரால் அருளப்பட்ட பாகவதமும், பின்னுங் காந்தமும், கூர்மமும், ஆக்கினேயமும் இவை முதலாய மற்றநூல்களிலுஞ் சொல்லியதைப் பார்த்து, வேதங்களை யுணர்ந்த பராசர முனிவரை வாழ்த்தாநின்ற மைத்திரேயர்க்குச் சொல்லுவோ மென்றவாறு.

6. புரையுறு விண்டு புராணத்தின் படியே
புகன்றிடும் வடமொழி யதனைக்
குருபர னருளா லொருதொகைப் படுத்திக்
கூறுமென் சிற்றறி வதனல்
கருதிய நான்கத் யாயமாய்த் தமிழாற்
கழறிடப் பாவினம் பலவாய்
உரைசெயு மென்புன் சொற்பிழை திருத்தி
யுலகினிற் கொள்ளுவர் பெரியோர்.

என்றது, குற்றமில்லாத விஷ்ணு புராணத்தின்படியே சொல்லப்பட்ட வட மொழியை எனது குருவாகிய பால்வண்ணராம சாஸ்திரிகள் சகல அளவையு மொன்றாய்த் திரட்டித் தமிழால் உரைக்கச் சொல்லப்பட்ட உலகத்திலே

என்னுடைய சிறிய அறிவினால் நினைத்து, நான்கு அத்தியாயங்களாகத் தமிழில், பல பாவினங்களிற் சொல்லிய குற்றம் யாவையுந் திருத்தி அங்கீகரித்துக் கொள்ளுவர் பெரியோர் என்றவாறு.

(வேறு.)

7. சீல வையர் வடமொழி யாற்செப்புங்
கோலமா லண்ட கோளத் தியல்பினைப்
போல யானுந் தமிழிற் புகன்றது
[1] மாலி னைச்சுமப் பான்முன்வ லூறெக்கும்.

என்றது, மகரிஷிகளாற் சொல்லப்பட்ட அழகு பொருந்திய அண்ட கோளப் பிரமாணங்களை, யான் தமிழினாற் சொல்வது எப்படியென்னில், மகாவிஷ்ணுவைத் தாங்கப்படாநின்ற கருடன் முன்பாகக் கொ(து) [க்] கு பரந்தது போலா மென்றவாறு.

(வேறு.)

8. பாரவண்டத் தோடுகனங் கோடியுமேற்
பொன்பதியுங் கோடி யாமுட்
சேருமங்கி யுருத்திரன்மேற் கனற்சுவாலை
பதின்கோடி செப்புந் தூம
மேருருமைந்து கோ்டியின்மே னிரைய முப்பான்
கோடியுட னிரண்டி லக்க
மாருமதன் மேல்வெளிமூ வயுதமுமேற்
கூர்மாண்டத் தளவு சொல்லும்.

என்றது, பெரிதாயிருக்கின்ற அண்டத்தினுடைய கனம் கோடி. அதன்மேற் சுவா்ன பூமி யுன்னதம் கோடி. அதிதுளி யுதிராநின்ற காலாக்னி ருத்திரனென்று வகத்திலிருந்து எழும்பிய அக்கினி ஜுவாலை பத்துகோடி. அதன் மேற் புகை ஐந்து கோடி. அதன்மேல் இராசநிரைய முள்பட முப்பது கோடியே இரண்டிலக்கம். அதன் மேல்வெளி முப்பதினாயிரம். அதன்மேலான கூர்மாண்டத்தளவு சொல்லுவோ மென்றவாறு.

9. கோடிக்கோர் குறையிலக்க மேல்வெளியொன்
பானிலக்கங் கூறு மேலே
சாடதல. . . . . . . .யென்ப லக்கத்
தெழுவ தாஞ்ச கத்திர
மாடகனூர் புரமுமொன் பானிலக்க
மரிதாங்கு மவனி கோடி
யோடுமைம்பான் கோடியுமேல் புவர்லோகஞ்
சுவர்லோக மொன்றுங் கோடி.

என்றது, முன்சொன்ன கூர்மாண்டத்தினுடைய அளவு தொண்ணூற்றென்பது இலக்கம். அதன் மேல்வெளி ஒன்பதிலக்கம். அதன்மேல்

---
[1] கருடன்

ஆதிசேடனால் தாங்கப்பட்ட பூமி கோடி. கனமான அண்டத்தினுடைய கீழ்த் தோடு முதல் பூமி வரைக்கும் ஐம்பது கோடி. அதன்மேல் புவர்லோகம் சுவர்லோகங் கோடியாம் என்றவாறு.

10. எண்ணுமகர லோகமிரு கோடியின்மேற்
சனலோக மிருநாற் கோடி
பண்ணுதவ லோகம்பன் னிருகோடி
யயனுலகு பதினா றுகுங்
கண்ணனுறை லோகமிரு நாற்கோடி
கந்தபுரங் கவுரி பாக
வண்ணல்புர மறுகோடி கோடியண்ட
முகடுவரைச் சதமாங் கோடி.

என்றது, அளவை யுடைத்தாகிய மகர லோகம் இரண்டுகோடி. அதன்மேற் சனலோகம் எட்டுக்கோடி. அதன்மேற் தபோலோகம் பன்னிருகோடி. அதன் மேற் சத்திய லோகம் பதினாறு கோடி. அதன்மேல் விஷ்ணு லோகம் நான்கு கோடி. அதன்மேற் கந்தபுரம் இரண்டு கோடி. அதன்மேற் கவுரி புர மிரண்டு கோடி. அதன்மேல் மகா சிவலோகம் இரண்டு கோடி. அதன் மேல் அண்ட முகடு கனங்கோடியாகப் புவர்லோக முதல் அண்டமுகடு வரையில் ஐம்பது கோடி. ஆக அண்டம் நூறுகோடி யுன்னதமாம் என்ற வாறு.

(வேறு.)

11. கொந்துறு மாலண்ட கோளத்த மிழ்தனைத்
தந்துவிற் கோவைசெய் தரளம் போலவே
முந்துறச் சுருக்க மாய்மொழிந் தனமதன்
உய்ந்திடும் வகைதொகை உரைசெய் வாமரோ.

என்றது, முன்சொன்ன அண்ட கோளப் பிரமாணங்களைப் பட்டு நூலில் முத்துக் கோத்ததுபோலச் சுருக்கமாய்ச் சொன்னோம். இனிமேல் விஸ்தார மாகச் சொல்லுவோ மென்றவாறு.

அவையடக்க முற்றும்

---

நூல்.

# முதலாவது
## பாதாள வருணனை யுரைத்த வத்தியாயம்

1. பூரண மாகி யெங்கும் பொருந்துமால் வடிவ மான
காரண வாரி தன்னிற் கலந்தபல் லண்ட நாப்பண்
ஏரணி யண்ட கோளத் தியல்வட மொழியின் மானத்
தாரணி யோர்கட் கெல்லாந் தமிழினுற் சாற்று வோமே.

என்றது, எங்கும் நிறைந்து வியாபித்திருக்கின்ற மகாவிஷ்ணு ஸ்வரூப மான காரண ஸமுத்திரத்தில் மிதவா நின்ற பல்லாயிரங் கோடி அண்ட மத்தியிலிருக்கின்ற அழகு பொருந்திய இந்த அண்டத்தினியைந்த வட மொழியின் பிரமாணங்களைச் சகலமான சனங்களுக்குந் தெரியும்படிக்குத் தமிழினுற் சொல்லுவோம் என்றவாறு. (1)

2. [1] குக்குடக் குடம்பை போலக் கூறுவாங் கீழ்மே லாக
நிற்குமே நூறு கோடி நிகழ்த்திடுங் கீழ்மேற் றீர்க்கந்
தக்கது நூறு கோடி சாற்றுதென் வடல்வி சால
மிக்கது நூறு கோடி விளம்பும்யோ சனையைச் சொல்வாம்.

என்றது, கோழிமுட்டை வடிவமாயிருக்கின்ற அண்டத்தினுடைய உன்னதம் நூறுகோடி. கீழ்மேலுன்னதம் நூறு கோடியாகச் சொல்லும். தென்வடல் விசாலம் நூறுகோடியாய்ச் சொல்லும் யோசனைப் பிரமாணமாம் என்றவாறு. (2)

(வேறு.)

3. பானு வின்கதிர் தூள்பர மாணுவா
மான தூளிரண் டோரணு வவ்வணுத்
தானே மும்மடி சாற்றுந் திரேணுவா
மான மிரண்டுகொண் டாலோர் மயிர்நுனி.

என்றது, ஒரு சாளரத்தில் கிரணம்போமளவில் எழுந் தூள் பரமாணுவாம். அந்தப் பரமாணு இரண்டு கொண்டது அணு. அவ்வணு மூன்று கொண்டது திரேணு. திரேணு விரண்டு கொண்டது மயிர் நுனியாம் என்றவாறு. (3)

4. சேரும் ரோம நுனியெட்டுச் சேர்ந்தது
பார மான விலாகை பகர்ந்திடுஞ்
சேரு மாமவ் விலாகையெண் சார்ந்தது
ஊரும் பேனந்தப் பேனெட்டோர் நெல்லதாம்.

என்றது, முன்சொன்ன மயிர்நுனி யெட்டுக்கொண்டது பெரிதான விலாகை. விலாகை எட்டுக்கொண்டது ஊராநின்ற பேன். அந்தப் பேன் எட்டுக் கொண்டது நெல்லாம் என்றவாறு. (4)

5. பார நெல்லெண் பரப்புமோ ரங்குலம்
ஆறு மங்குல மாறுநான் கோர்முழம்
ஒரு மம்முழ நான்கொரு வில்லதாய்
நேரு மவ்வி லிரண்டோர் நெடுந்தண்டே.

---

[1] கோழிமுட்டை

என்றது, பெரிதான நெல்லெட்டுக் கொண்டது ஒரு அங்குலம். அங்குலம் இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம். முழம் நான்கு கொண்டது விற்கிடை. விற்கிடை யிரண்டு கொண்டது ஒரு தண்டாம் என்றவாறு. (5)

6. சோருந் தண்டிரு வாயிரங் கொண்டதே
சாரு மேலொரு குரோசமக் குரோசமே
சேரு நான்மடங் குற்றதைச் செப்பிடிற்
பாரின் மேலொரு யோசனைப் பண்பிதே.

என்றது, எடாநின்ற தண்டு இரண்டாயிரங் கொண்டது குரோசம். குரோசம் நானூறு கொண்டது பூமியில் ஒரு யோசனையாம் என்றவாறு. (6)

(வேறு.)

7. அண்ட வுன்னத நூறு கோடியாம்
அதன டிக்கனங் கோடி யாகுமேற்
கொண்ட பொற்பதி கோடி யுன்னதங்
கூறு மத்தியின் வேதி கைக்கனம்
விண்ட வுன்னத நூறு பத்தென
விசால மோவிரண் டாயிர மாமே
தொண்டெ னப்பர வுருத்திர பூதருஞ்
சூழ நிற்ப வரியணை யின்மேல்;

என்றது, அண்டத்தினுடைய உன்னதம் நூறு கோடி. அதனுடைய அடித் தொட்டுக் கனம் கோடி. அதன்மேற் பொற்பதி உயரம் கோடி. அதன் மத்தியிலிருக்கின்ற வேதிகை யுயரம் ஆயிரம் யோசனை. அதனுடைய அகலம் இரண்டாயிரம் யோசனை. அந்த வேதிகையி லிராநின்ற பூத கணங்க ளோடுங் கூடி சிம்மாசனத்தில் இருக்கின்றவர் என்றவாறு. (7)

(வேறு.)

8. கண்டி லங்குகா லாக்னி ருத்திரன்
காய மோபுதி ணுயிரம்
கொண்ட மூர்த்தமேற் கனல்சு வாலையோ
கோடி பத்தெனக் கூறுமேல்
மண்டு தூமமைங் கோடி மேனிரைய
மாகு மேயெழு நான்கின்பேர்
ஒண்டு மாயையுந் தீர்க்கை யட்டபுமை
உரைசெய் சத்தபுமை யெண்ணுமேல்.

என்றது, முன்சொன்ன சிம்மாசனத்திலிருக்கின்ற காலாக்கினி ருத்திர னுடைய தேகத்திலிருந்து எழும்புகின்ற அக்கினிச் சுவாலை பத்துக்கோடி உயரம்; அதன் மேலிருந்து எழும்பாநின்ற புகை ஐந்துகோடி உயரம்; அதன்மேல் நிரையம் இருபத்தெட்டுக் கோடி; அதனுடைய நாம தேயம் ஒரு கோடி நரகத்துக்கு ஒன்றாக மாயை—1, தீர்க்கை—2, அட்ட புமை—3, சத்தபுமை—4 ஆமென்றவாறு. (8)

(வேறு.)

9\. பரிவர்த் துளைசுதிர்க் கையின்மேற்
பஞ்ச கோணை திரிகோணை
உருவச் சிரையும் விகராளம்
உடன்க ராளம் வீடணையும்
அருகும் வீமம் பதுமபதி
யாகும் பதுமை பிரசண்டந்
தருகுஞ் சண்டகோ லாகலையுந்
தமகா சண்டஞ் சண்டதரம்.

என்றது, பரிவர்த்துளை—5, சுதீர்க்கை—6, பஞ்சகோணை—7, திரிகோணை—8, உயர்ந்த வச்சிரை—9, விக்ராளம்—10, கராளம்—11, வீடணை—12, வீமம்—13 ,பதுமை—14, பதுமபதி—15, பிரசண்டம்—16, சண்ட கோலா கலை—17, இருள்ாயிருக்கின்ற மகாசண்டம்—18, சண்டதரம்—19 ; என்ற வாறு. (9)

10\. வெருப யோற்க டங்கான
விடராத் திரிம யானகமுந்
தரள தாரங் கோரரூபை
தழலார் கோரை யதிகோரை
குருசு கோரை கோரையெல்லைக்
கோடி யிருபத் தெட்டடுக்காய்
இருக்கு மண்டச் சுவரளவாய்
எய்துங் குழியா ழமுமிலக்கம்.

என்றது, மிகவுங் குரூரமாயிருக்கின்ற பயோற்கடம்—20 ; கறுப்பாகிய விட ராத்திரி—21 , மயானகம்—22 ; தாளதாரம்—23 ; கோரரூபை—24 ; நெருப்புமயமான கோரை—25 ; அதி கோரை—26 ; பெரிதான கோரை—27 ; கோரை—28 ; இப்படி ஒன்றுக்கு ஒவ்வொரு கோடி வீதம் இருபத் தெட்டுக் கோடி நிரையமும் அடுக்கடுக்காய் அண்டச் சுவரளவாய், நான்கு திக்கிலு முட்டியிருக்கும். அந்த நரகத்தினுடைய குழியாழம் இலக்கம் என்றவாறு. (10)

11\. மகியி னிறக்கும் பாவியர்க்கு
வதியோ யெண்பத் தாறென்னப்
பகருஞ் சகஸ்திர யோசனையின்
பாச கானுற் றுங்குழிவாய்
சகஸ்ரப் பரப்பாய் விருத்தமதாய்ச்
சாரு நிரையத் திடையிடையே
..........ம் ராச நிரையங்களோ
எழுபா னிரட்டி யெழுநான்கின் ;

என்றது, பூமியிலிறக்கின்ற மானிடருக்கு எமலோகம் எண்பத் தாறுயிரம் யோசனை பிரமாணமென்று சொல்லாநின்ற எமபுரத்திலிருந்து நரகத்துக்குப்

போகாநின்ற மார்க்கத்தினுடைய துவுவ நாதாரம்? ஆயிரம் யோசனை விஸ்தாரமாயிருக்கும். முன்சொன்ன நரகத்தினுடைய இடையிடையே யிருக்கும் ராச நிரையங்கள் நூற்றுநாற்பதையும், இருபத்தெட்டில் ஒரு ராச நிரையமொன்றுக்கு ஐந்துவீதம் பிரித்து அடுக்காய் இருக்கும் என்ற வாறு. (11)

**முன்சொன்ன நரகத்தின்கண்ணே பூமியிற்செய்த பாபிகளுடைய அனுபவம் மேற்கவிகளில் தனித்தனியாயுங் குளகமாயுங் கூறப்படுகின்றது.**

**(வேறு.)**

12. தாயர் தந்தை குருமொழி தப்பினோர்
மாயை யின்னர கெய்துவர் கோடிமேல்
ஆய ராச நிரையமா லாகலம்
தீய வேக பதந்திரி பாதமே.

என்றது, மாதா, பிதா, குருவினுடைய வார்த்தைகளைத் தப்பி நடந்தவர்கள், கோடி யுன்னதமாயிருக்கின்ற மாயை என்கின்ற நரகமடைவார்கள். அதன்மே லிருக்கின்ற ராச நிரையம், ஆலகாலம், கொடிதான ஏக பாதம், திரிபதம் என்றவாறு. (12)

13. தாழு மோர்சும லஞ்சம லமைந்தும்
ஏழு லக்கத் திருபத்தோ ராயிரம்
நீழல் மேலுறு தீர்க்கை நிரயத்தின்
வாழு வாரொரு கோடி வகுக்குமால்.

என்றது, தணிவாகிய சுமலம் சமலம் ஐந்தும் அ(தனுடைய) [வற்றினுடைய] உன்னதம் ஏழுலட்சத் திருபத்தோராயிரம்; அதன்மேலாயிருக்கின்ற தீர்க்கை யென்கின்ற நிரயத்தில் பாபிகளிருப்பார்கள். அதனுன்னதம் கோடி யோசனையாம் என்றவாறு. (13)

14. ஆரும் ராச நிரையம திபங்கங்
காரயக் கட்டி பஃறுயர் காக்கையும்
ஈருங் கோரரூ பையைந் திலக்கமேழ்
சாருமே வேழு மூன்று சகத்திரம்.

என்றது, முன்சொன்ன நிரையத்தின் மேலாயிருக்கின்ற ராச நிரையம், அதிபங்கம், கருமையாயிருக்கின்ற இருப்புக் கட்டி, மிகுந்த துன்பம், வாயசங் கொல்லாநின்ற கோர ரூபை இந்த ஐந்தும் ஏழிலக்கத் திருபத்தோராயிரமாம் என்றவாறு. (14)

15. சத்திர மாடகந் தக்கரன் சார்ந்திடும்
சத்த பூமி நிரையந்தன் கோடிமேல்
உத்த ராச நிரைய முயர்வண்டில்
உத்த சம்மோக னங்கலப் பையுறும்.

என்றது, அதன்மேல் அஸ்திரம் ஆயுதங்களையும் சுவர்னங்களையும் திருடினவர்கள் இருக்கின்ற சத்தபூமி நிரையம் உன்னதம் கோடி; அதன் மேலான ராச நிரையம் உயர்ந்த சகடம் சம்மோகனம், கலப்பையுடன் என்றவாறு. (15)

16. கொடிய தீவிர மோடு குறளைந்தும்
இடையெழு லக்கத் தேழ்முச் சகத்ரமேல்
அடையும் பாதகர் சேரட்ட பௌமையோ
படியு மானமோர் கோடி பகருமேல்.

என்றது, அதன்மேற் கொடிதான தீவிரம் குறளைந்தும் எழுலட்சத் திருவத்தோ ராயிர முன்னதம். அதன்மேல் பாபிகள் சேரா நின்ற அட்ட பௌமை யென்கின்ற நிரைய உன்னதம் கோடியாய்ப் புகலும் என்ற வாறு. (16)

17. உந்த ராச நிரையமு லக்கையும்
அந்த காரமு ரல்அம்மி யாரழல்
சிந்துமைந் துஞ்செறி யிலக்க மேழுடன்
வந்தமூ வேழ்ச கத்ரம் வகுக்குமேல்.

என்றது, முன் சொன்ன நிரயத்தின் மேலாயிருக்கின்ற ராசநிரையம்; முசலம், இருள், உரல், அம்மி, பொறிசிந்தாநின்ற அழல் இந்த ஐந்தும் நெருங்கியிருக்கின்ற உன்னதம் எழுலட்சத்திருபத்தோ ராயிரமாம் என்ற வாறு. (17)

18. எரியை யிட்டு எழுங்குடி செற்றவன்
பரிவ ருத்துளே பூமிபண் கோடிமேல்
உரிய மன்னிரை யத்துயிர்த் தூண்டின்மூத்
திரம லஞ்சிறு கல்லெரி சேரைந்தும்.

என்றது, நகரத்தில் தீயைக் கொளுத்திக் குடிகளைக் கெடுத்தவன் சேராநின்ற பரிவருத்துளே நிரயம் கோடி உன்னதம். மேலுற்ற இராச நிரையம்; உயிர்த் தூண்டில், மலசலம், சிறுகல், நெருப்பு இந்த ஐந்தும் என்றவாறு. (18)

19. நியுத மேழுநேர் மூவேழ் சகத்ரமோ
தயவு மீதல் தடுத்தவர் சார்ந்திடும்
வியசு தீர்க்கை நிரயம்வின் கோடிமேல்
இயபி ராச நிரய மிருப்பழல்.

என்றது, முன்சொன்ன ராசநிரயம் எழிலக்கத்திருபத்தோராயிரம். அதன்மேல் தயவற்றவன், ஈதல் மறுத்தவன் சேராநின்ற சுதீர்க்கை நிரயம் கோடி உன்னதம். அதன்மேல் ராச நிரயம் இருப்பழல் என்றவாறு. (19)

20. வஞ்சி சுல்லி சிறுசில்லி மர்த்தனம்
அஞ்சு மேழ்லக்கத் தேழ்மூ சகத்ரமேல்
மிஞ்சு மாபஞ்ச பாதகர் மேவிடும்
பஞ்ச கோணை நிரையம்பண் கோடிமேல்.

என்றது, முன்சொன்ன ராசநிரையத்திற் சேராநின்ற வஞ்சிக்கொடி, அடுப்பு, சித்தடுப்பு, மர்த்தனம் ஐந்தும் உன்னதம் எழுலக்கத் திருபத் தோராயிரம். அதன்மேல் மிகுதியான பஞ்சமாபாதகர் சேராநின்ற பஞ்ச கோணை நிரையம் கோடியுன்னதம் என்றவாறு. (20)

21. சேரும் ராச நிரையந்தி லச்செக்குக்
கோர முங்கரும் பாலே கொசுகுடன்
சோரு மெந்திர மைந்துமேழ் லக்கமுஞ்
சாரு மூவேழ் சகத்திரஞ் சாற்றுமேல்.

என்றது, முன்சொன்னது மேற்சேராநின்ற ராசநிரையைந்தில் செக்கு, கோரம், கரும்பாலே, கொசுகு, எந்திரம் ஐந்தும் ஏழிலக்கத் திருபத்தோரா யிரமாம் என்றவாறு. (21)

(வேறு.)

22. கள்ளருந்து வோர்சென்மக் காணிதிரி
கோணைநர கங்கோ டிமேல்
வள்ளநிரை யங்கோடி யதீவிரம்
விக்கிரகந் தாலவனம் விரூபம்
அள்ளல்வை தரிணியைந்து மேழ்லக்கத்
திருபத்தோர் சகத்திர மேலே
உள்ளமுதி னச்சிடுவோர்க் குரியவச்
சிரைநிரைய மோர்கோடி மேல்.

என்றது, மதுபானஞ் செய்கின்ற பேர்களுக்குச் சன்மக்காணியாகிய திரிகோணை நிரையம் உன்னதம் கோடி; அதன்மேல் ராச நிரையம், கொடிய தீவிரம், விக்கிரகம், தாலவனம், விரூபம், அக்கினிமயமாகிய வைதரணிநதி ஐந்தும் ஏழுலட்சத் திருபத்தோராயிரத்துக்கு மேல், பிறர்பொருளுக் கிச்சித்துத் தன்னுடைய எசமானுண்கின்ற அன்னத்தில் நஞ்சு கலந்திடும் பாவியர்க்குரித்தான வச்சிரை யென்கிற நிரையங் கோடியுன்னதமாம் என்றவாறு. (22)

23. மன்னிரையங் கோழையங்கி வீமம்விக
டம்பூதம் வழுத்து மைந்தின்
உன்னிலக்க மேழுடனே யிருபத்தோ
ராயிரமா வுரைக்கு மேலே
கன்னிவிகா ரத்தழுந்துங் காளையர்சேர்
விகராள நரகங் கோடி
உன்னதமேன் மன்னிரையந் தன்னைத்தான்
தின்றலுடன் சோரி மூளை;

என்றது, அதன்மேல் நாரநிரையங் கோழை, நெருப்பு, வீமம், விகடம், பூதமென்னும் ஐந்தனுடைய உன்னதம் எழுலக்கத் திருபத்தோ ராயிரஞ் சொல்லும். அதன்மேல், பெண்களிடத்தில் மிகவும் மோகியாநின்ற ஆடவர்கள் சேராநின்ற விகராள நரகங் கோடியுன்னதம். [வெளி] அதன் மேல் ராசநிரையந் தன்னைத்தான் தின்றலுஞ் சோரி மூளையும் என்ற வாறு. (23)

24. சங்கடந்தா ருணமைந்து மேழிலக்கத்
திருபத்தோர் சகத்திர மேலே
மங்கையர்க்கோ லஞ்சமைவோர்க் குரியகரா
ளப்பூதி மானங் கோடி
அங்கதன்மேல் மன்னிரையம் பிரதிகாரம்
புழுத்தசைய மேத்தியம் வாய்நீர்
பொங்குமைந்து மேழிலக்கத் திருபத்தோ
ராயிரமாய்ப் புகனு மேலே.

என்றது, முன்சொன்ன ராச நிரையத்தில் சேர்ந்த சங்கடம், தருணம் ஐந்தும் ஏழிலக்கத் திருபத்தோ ராயிரம்; அதன்மேல், பெண்வேஷம் போடுகின்றவனுக் குரித்தான கராள நிரையத்தின் உன்னதங் கோடி; அதன் மேல் ராச நிரையம், பிரதிகாரம், புழு, தசை, அமேத்தியம், வாய்நீர் ஐந்தனுடைய உன்னதம் ஏழிலக்கத் திருபத்தோ ராயிரமாம் என்ற வாறு. (24)

(வேறு.)

25. நீடும் வஞ்சகர் கூடும் வீடணை
நிரையங் கோடிமே லரசன் சோரிசீ
யோடு மண்டசை தூம மைந்துமோ
ரேழு லக்கமூ வேழ்ச கத்திரம்
நாடு மன்பிலார் சேரும் வீமமா
நரகங் கோடிமேல் மன்னட் டைபுலி
ஈடி னண்டுகு ரங்கு முள்ளையைந்
தேழு லக்கமோ டெழுமூ வாயிரம்.

என்றது, நெடுங்காலம் கெடுதல் செய்தவர்கள் கூடியிருக்கின்ற வீடணை நிரையங் கோடி உன்னதமாம். அதன்மேல் ராச நிரையம் இரத்தம், சீழ், மண், மாமிசம், இந்திரியம் இந்த ஐந்தனுடைய உன்னதம் ஏழுலக்கத் திருபத்தோராயிரம் யோசனை. அதன்மேல் நாட்டமும் ஆதரவு மில்லாத பேர் சேருகின்ற வீமமாகிய நரகங் கோடி யோசனை உன்னதம். அதன்மேல், ராச நிரையம் அட்டை, புலி, இணையில்லா நண்டு, குரங்கு, முள் இந்த ஐந்தினுடைய உன்னதம் ஏழுலட்சத் திருபத் தோராயிரமாம் என்றவாறு. (25)

26. வஞ்ச ரார்பதுமை பதியி னிரையமோ
மானங் கோடிமேல் ராச ஞமையுங்
கஞ்சு கீகழுகு கூகை காக்கையைந்
தாகுமே ழிலக்க மெழுமூ வாயிரம்
மிஞ்சு பதுமையி னிரையங் கோடிமேல்
மின்மிரு கானனன் முதலே யுங்கிடாத்
துஞ்சு மதிகிரக மாடைந் தாகும்பின்
ஏழி லக்கமூ வேழ்ச கத்திரம்.

என்றது, வஞ்சகமாய்க் கெடுதல் செய்தவர்கள் சேராநின்ற பதுமைபதி நிரையம் உன்னதம் கோடியின்மேல் ராச நிரையம், ஆமை, கஞ்சுகீ, பாம்பு, கழுகு, கூகை, காக்கை ஐந்தும் உன்னதம் ஏழுலட்சத் திருபத்

தோராயிரம். அதன்மேல் மிகுந்த பதுமை நிரையங் கோடி யுன்னதம். மேல் [1] ராச நிரையம்; மிருகான்னமாகிய சிங்கம், கரா, மகிடம், அதிகிரகம், [2] அசம், இந்த ஐந்தும் ஏழுலட்சத் திருபத்தோ ராயிரமாம் என்றவாறு. (26)

(வேறு.)

27. பண்டுநா யகனைத் தள்ளும் பாவையர்
கொண்ட பாரியைத் தள்ளியோர் கோதையைக்
கண்டு மோகக் கடலி லமிழ்ந்தவர்
சண்ட கோலா கலைதருங் கோடிமேல்.

என்றது, தன்னுடைய சொந்தமான நாயகனைத் தள்ளிப் பரபுருஷனைச் சேருகின்றவளும், தன்னுடைய சொந்த ஸ்திரீயைத் தள்ளிப் பரஸ்திரீயின் பேரில் மோகித்துச் சேருபவனும் சண்ட கோலாகலை நரகஞ் சேருவர்; அது கோடியுன்னதம் என்றவாறு. (27)

28. மன்னும் பூதிமுட் பன்றிபுல் வாயுடன்
துன்னுஞ் சிங்க மிடபஞ்[2]சார்த் தூலமாம்
என்னு மைந்துமே ழிலக்கமு மூவெழு
சொன்ன வாயிரஞ் சொல்மேற் பிரசண்டமே.

என்றது, அதன்மேல் ராச நிரையம், முட்பன்றி, புல்வாய், சிங்கம், காளை, புலி இந்த ஐந்தும் எழிலக்கத் திருபத்தோ ராயிரத்துக்குமேல் பிரசண்ட நிரையமாம் என்றவாறு. (28)

29. கோடி மேல்மன் னிரையநாய் கோலமோ
டாடு ஏறு எருமையைந் தாகுமேல்
நாடு மேயெழு லக்கம் நவிலும்பின்
சாடு மூவேழ் சகத்திரஞ் சாற்றுமே.

என்றது, முன்சொன்ன பிரசண்ட நிரைய முன்னதம் கோடி. அதன்மேல் ராச நிரையம், நாய், பன்றி, ஆடு, இடபம், எருமை ஐந்து[ம்] ஏழு லட்சத் திருபத்தோ ராயிரம் என்றவாறு. (29)

30. குற்ற மன்றிக் கொலைசெயும் பாதகர்
வைத்தி டும்பொருள் மாற்றிக் கறுத்தவர்
நத்து வார்மக சண்ட நரகத்தே
உற்ற கோடிமேல் மன்னுறும் பூதியே.

என்றது, ஒருவன் (தன்) பேரில் யாதொரு குற்றமுமில்லா திருக்கின்றவனைக் கொலைசெய்யும் பாதகருக்கும் அடைக்கலமாக வைத்த பொருளை எடுத்துக் கொண்டவன் பொருளில்லாமல் மற்றொரு பொருளை வைத்து, இதே உன் பொருளென்று கோபிக்கின்றவன் சேருகின்ற மகாசண்ட நரக முன்னதங் கோடி. அதன்மேல் ராச நிரையமாம் என்றவாறு. (30)

[1] ஆடு. [2] புலி.

(வேறு.)

31. சப்பிர பாகம் யானை சொலித்திடு மழற்கா லும்வே
கப்பிர பாக முங்கு குதமைந்துங் கழறேழு லக்கத்
தப்பிர மிருபத்தொன்று மாயிர மேலே கூறும்
விப்பிரர் வஞ்சர் மூர்க்கர் வெஞ்சினத் துரோகி யர்க்கும் ;

என்றது, முன்சொன்ன ராச நிரையம், சப்பிரபாகம், யானை, சொலியா நின்ற நெருப்பு, வேகப்பிரவாகம், குகுதம் இந்த ஐந்தும் ஏழிலக்க மிருபத்தோராயிர முன்னதத்துக்குமேல், பிராமணத் துரோகியர், மூர்க்கர், வெகுசனத் துரோகியர்க்கும் என்றவாறு. (31)

32. மணிசண்ட தரமோர் கோடி மேல்மன் னிரைய மோர்கூர்
முனைமுள் ளிலவ ரிட்ட முற்றிய சுழல்வா யங்கி
அணையதோர் நிருச்சு வாச மாஞ்சுடர்த் தீப மைந்தும்
புணையுமே ழிலக்கத் தோடு புகலுமூ வேழா யிரமேல்.

என்றது, முன்சொன்னவர்கள் மணியாகிய சண்டதரம் கோடி உன்னதம். மேல் ராச நிரையம், கூர்மையான முள்ளிலவு, அரிட்டம், சுழல் காற் றோடுங் கூடிய நெருப்பு, சுடர்த் தீபம், நிருச்சுவாசம் இந்த ஐந்தும் ஏழு லட்சத் திருபத்தோராயிரம் என்றவாறு. (32)

33. அடுத்தவர்க் கிடைஞ்சல் செய்வோர்க் கான்கன்றுக் கூண்மு [லைப்பால்
விடுத்திடா தெடுக்கும் பாவி மேவுப யோற்க டந்தான்
கொடுத்திடு முயரங் கோடி மேலுங்கோ தப்த சங்கம்
தடத்துநீர் துண்ட சங்கு இருதகம் நிர்ம தம்பின்.

என்றது, நம்பினவனுக்கு இடர் செய்வோனும், கன்றுக்குப் பாலைவிடாமற் கறந்தவனும், சேராநின்ற பயோற்கட நரகம் கோடி உன்னதம். அதன் மேல் ராச நிரையம் தப்த சங்கம், [சடத்துநீர்] வேர்வை, துண்ட சங்கு, இருதகம், நிர்மதம் பின்சொல்லும் என்றவாறு. (33)

(வேறு.)

34. ஐந்துமோ ரேழிலக்கத் திருபத்தோ
ராயிரமா யறைய மேலே
ஐந்துமுக னைப்பணியா ருறுகாள
விடராத்திரி யலகு கோடி
யுந்துமன் னழற்செங்கல் திரிபுதசை
புழுக்குழியு முட்சு வாச
முந்துறுகை யேழிலக்கத் திருபத்தோ
ராயிரமா யுரைக்கு மேலே.

என்றது; முன்சொன்ன ராச நிரைய மைந்தும் ஏழுலட்சத் திருபத்தோரா யிரத்துக்குமேல், ஈசுவரனை வணங்காதவர் சேராநின்ற காளவிட ராத்திரி

நரகம் உன்னதம் கோடி. அதன்மேல் ராச நிரையம், நெருப்பு, செங்கல், திரிபு, தசை, புழுக்குழி, உட்சுவாசம், இந்த ஐந்தும் எழு லட்சத் திருபத் தோராயிரம் என்றவாறு. (34)

35. பஞ்சமா பாதகர் வாழ்மனையா
மயானகமோ பகருங் கோடி
வஞ்சரா சன்னிரைய மங்கார
கஞ்சமா வர்த்தஞ் சோரி
மிஞ்சுகுழி யிருப்புத்தூண் சீக்குழியு
மேழிலக்கத் திருமூன் றேயா
குஞ்சகஸ்திர நன்றிமறந் தவனுமிடைஞ்
சல்செய்யுங் குருத்து ரோகி.

என்றது, பஞ்சமகா பாதகர் சேராநின்ற மயான நரகங் கோடி; அதன்மேல் ராச நிரையம்,நெருப்பு, சுழல் காற்று, ரத்தக்குழி, இருப்புத்தூண், சீக்குழி இந்த ஐந்தும் எழு லட்சத்து இருபத்தோராயிரத்துக்கு மேல் செய்த நன்றி மறந்தவனுக்குங் குருவுக்கு இடைஞ்சல் செய்தவனுக்கும் என்றவாறு. (35)

36. தானையன்றிப் புனலாடு வோன்பிறவிக்
காணியெனுந் தாள தாரம்
வானுயரங் கோடியின்மேல் மன்னிரைய
மதிபாக மறுகு வீமம்
பானசங்கி ரகமதிதா ருணங்கும்பி
பாகமுடன் பகரு மைந்து
மானதொகை யேழிலக்கத் திருபத்தோ
ராயிரமாய்ச் சாற்று மேலே.

என்றது, ஆடையில்லாமல் ஸ்நானஞ் செய்கின்றவனுக்கும் சென்மக் காணியாகிய தாளதார நரகங் கோடியின்மேல் அதிபானம், பானசங்கிரகம், வீமம், அதிதாருணம், கும்பீபாகம் இந்த ஐந்தும் எழு லட்சத் திருபத்தோ ராயிரம் என்றவாறு. (36)

37. அரசன்சோ றுண்டமரின் விட்டோடும்
படர்க்காகுங் கோர ரூபை
நிரையமொரு கோடியின்மேல் மன்னிரையஞ்
சூசிமுக நிகழ்சு நேமி
கிருமிபாசம் பிறர்தர்ச னனங்கா
தகமைந்துங் களரேழ் லக்கம்
தருமத ஞேடிரு பத்தோ ராயிரமாய்ச்
சாற்றும்பெரி யோர்கள் மேலே.

என்றது, ராசாக்களைச் சேவித்து, அன்னம் வாங்கிச் சாப்பிட்டவர்கள் உயுத்த களத்திலே அந்த ராசாவை விட்டு ஓடிப் போனவர்கள் சேருகின்ற கோரரூபை நரகங் கோடி யுன்னதம். அதன்மேல் இராச நிரையம், சூசீமுகம், சக்கிரம், புழுநிரையம், பிரதர்சனனம், காதகம் இந்த ஐந்து (ம்) எழு லட்சத்திருபத்தோராயிரம் என்றவாறு. (37)

38. தருமொருவன் சோறுண்ட் பின்னவனுக்
இடர்செய்தார் தழலார் கோரை
மருவுமொரு கோடியின்மேல் மன்னிரையம்
விகராளம் வரைபிர கம்பம்
அரிகரா ளம்வீறு முகமகா
பதுமமைந்து மேழி லக்கம்
உரைபின்னு மறுபத்தோ ராயிரமாய்
வகுத்ததென வோது மேலே.

என்றது, ஒருவனிடஞ் சேர்ந்து அன்னமுண்டு அவனுக்குத் துரோகஞ் செய்தவர்கள் சேராநின்ற நிரையம் நெருப்பு மயமாயிருக்கின்ற கோரை நிரைய உன்னதங் கோடி. அதன்மேல் ராச நிரையம் ; விகராளம், பிரகம்பம், அரிகராளம், விகிருதி முகம், மகாபதுமை இந்த ஐந்தும் ஏழுலட்சத் திருபத்தோராயிரம் என்றவாறு. (38)

39. கூடசாட் சிகள்புகலும் பாதகத்தோர்
மேவுமதி கோரை கோடி
மூடுமென மன்னிரையந் தீவிரம்வே
கத்துடனே முதிய வீமம்
நீடுசட் மாயையுஞ்சங் கடமுடன்வி
லோமமைந்தும் நிகழ்த்தேழ் லக்கத்
தோடுமூ வேழ்சகத்ர மாகுமேல்
அசத்தியனே வுறுசு கோரை.

என்றது. கட்டுச் சாட்சிகள் சொல்லுகின்ற பாவிகள் சேராநின்ற அதிகோரை நிரைய முன்னதங் கோடி. அதன்மேல் ராச நிரையம் ; தீவிரம், வீமம், மாயை, சங்கடம், விலோமம் இந்த ஐந்தும் ஏழுலட்சத்திருபத்தோ ராயிரத்துக்கு மேல் அசத்தியஞ் சொல்லுகின்றவன் சேராநின்ற சுகோரை நரகம் என்றவாறு. (39)

40. மானமோர் கோடியின்மேன் மன்னிரைய
மதிகோரை வன்பு லாலும்
ஈனமுறு விருளக்கினி கணமுஞ்சஞ்
சீவமைந்தா யியம்பேழ் லக்கம்
தானிருபத் தோர்சகத்திர மேற்சவுசா
திகள்கருமந் தருமஞ் செய்யார்க்
கூனமுறு கோரையொரு கோடியின்மேன்
மன்னிரைய முரைக்குஞ் சீதம்.

என்றது, முன்சொன்ன கோரை நிரையம் கோடி; அதன்மேல் ராச நிரையம் ; அதிகோரை, புலால், இருட்டு, நெருப்பு, ஸஞ்சீவம் இந்த ஐந்தும் ஏழிலக்கத்திருபத்தோ ராயிரத்துக்குமேல். சவுசாதி நித்திய கருமஞ் செய்யாதவர்கள் சேராநின்ற கோரை நிரையம் கோடி, அதன்மேல் ராச நிரையம் ; சொல்லும் சீதம் ; என்றவாறு. (40)

41. வெய்யமகா ரவுரவமு மதிதமமும்
ரவுரவமும் விளம்பு மைந்தும்
செய்யுமே ழிலக்கமுடன் முப்பத்து
மூசகத்ரஞ் சிறக்கு மானந்
தம்பிவிரண் டாங்கோடி ரெண்டிலக்க
மன்னிரைய நிரையம் ரெண்டும்
ஒப்புறுமுப் பான்கோடி யுடனிரண்
டிலக்கமுள்ளார்ந் துறுவோர் செய்கை.

என்றது, உஷ்ணம், மகாரவுரவம், அதிதமம். ரவுரவம் இந்த ஐந்தும் ஏழுலட்சத்து முப்பத்து மூவாயிரம்; ஆக ராச நிரையம் இரண்டு கோடியே இரண்டு லட்சம்; ஆக, நிரையவகை ரெண்டுக்கும் முப்பது கோடியே இரண்டு லட்சத்தில் சேர்ந்திருக்கின்ற பேர்கள் செய்கை என்றவாறு. (41)

(வேறு.)

42. குருவைப் பசுவைக் கருப்பத்தைக்
கோறு வோர்கட் குச்சுவாசம்
வரும்பொய் கூட சாட்சிபக்க
வாத முரைப்போர் ரவுரவமுஞ்
சுருதி யோரை யரிந்தவர்க்குஞ்
சுவர்ன ஸ்தேயன் குருதல்பன்
அரசன் வசியன் றனைச்சிதைத்தோர்க்
காகும் பன்றி நிரையமன்றே.

என்றது, குருபுருஷர்களையும், பசுக்களையும் கர்ப்பத்தையுங் கொன்றவர்கள் உச்சுவாச நிரையஞ் சேருவர். பொய்ச் சாட்சி சொன்னவர்கள் பட்சபாத முரைப்பவர்கள் ரவுரவ நரகஞ் சேருவார்கள். சுருதி மறையோரைக் கொன்றவர்களுக்கும் தங்கத்தைத் திருடினவர்களுக்கும் குருஸ்திரீயிடம் அபகாரஞ் செய்தவர்களுக்கும், வைசியனைக் கொன்றவனுக்கும் பன்றி நிரையம் என்றவாறு. (42)

(வேறு.)

43. அந்திய சாதியை அணைந்த வர்க்கணை
வரமு ருக்கிய வுலோக நிரையமாய்
பெந்து தங்கைகனி கற்பு மாதரைப்
பெண்டெனக் கொள்வர் துண்ட சங்கமே
சந்தி பருவகா லந்தி வாவிலே
தழுவு வோர்தமக் குழியின் மேவுவார்
முந்து வயதுளோர் தம்மைச் சேர்ந்தவர்
மோது தால்வன மீதி லாருவார்.

என்றது, நீசஸ்திரீ ஸங்கமம் பண்ணுகின்றவனுக்கு இரும்பை உருக்கிய உலோக நிரையமாம். பந்துக்களுடைய ஸ்திரீகளையும், தங்கை, தமக்கை, ருதுவாகாத பெண்களையும் கற்புமாதரையும் அணைந்தவர்

களுக்குத் துண்ட சங்க நிரையம். அந்தி சந்தியிலும் பருவகாலத்திலும் திவாவிலும் அணைந்தவர்கள் அந்தகார நிரையஞ் சேருவார்கள். தனக்கு மூப்புடைய பெண்களைச் சேர்ந்தால் தாலவன மென்கின்ற பனங்கருக்கு நிரையஞ் சேருவார்கள் என்றவாறு. (43)

44. வேத விக்கிர விரத்தின தூஷகன்
சோரன் மோகநீள் . . .
கோது ரைப்பவன் தந்தை தாயரைக்
குருவை யந்தணர் தேவர் கோயிலைத்
தீது ரைத்திடும் பாவி யர்க்கெழுச்
செக்கு யிர்க்கழுப் புக்கு வார்மிக
வாதிர தாகியா யேகி யுண்பவர்க்
காம்பு முத்தமா மிசக ருத்தமே.

என்றது, வேதத்தைப் பரீட்சை கொடுத்துத் திரவியம் வாங்குகிறவனும், நவரத்தின தூஷகனும், வேததூஷகனும் திருடனும் மோகனும், ஒருத்தன்பேரில் சதாகாலமுங் குற்றஞ் சொல்லுகிறவனும், தாயர் தந்தையர் குரு அந்தணர் முதலானவரையும் தேவதைகள் ஆலயங்களையும் பழித்த மகாபாபிகளும் திலச்செக்கும் உயிர்க்கழு நரகமு மடைவார்கள் என்றவாறு. (44)

45. நம்பி ஞேர்பசுத் தன்பி தாவையும்
ஞாலத் தோரையு மேனுற் றோரையும்
வெம்பி வாடச்சோ றுண்ப வர்க்குமுன்
வெண்பு முக்குழிக் கும்பி பாகமே
அம்பொன் கோழியெள் பன்றி யுப்பெணே
யாடு வேதியன் தேடி நிற்பவன்
றுன்ப ராக்குழி யின்பொ ருந்துவார்
ரோம விக்கிரயக் காம்வை தரணியே.

என்றது, அடுத்தவர்களையும் பசுக்களையும் பிதாவையும் அதிதியையும் பெரியவர்களையும் உபவாசமாக வைத்துத் தாம் மாத்திரம் போசனம் பண்ணுகிறவர்கள் புழுத்த கும்பிபாக நரகஞ் சேருவார்கள். திரவியத்தையும் கோழியையும் எள்ளையும் பன்றியையும் உப்பையும் நல்லெண்ணெயையும் ஆட்டையும் வாங்கி விக்கிரயஞ் செய்கின்ற பிராமணன் சர்ப்பக் குழியில் வீழ்வான். யாகம் பண்ணுகிறபோது சீந்திக்கொடியை விலைக்கு விற்கிறவன் வைதரணி நதி சேருவான் என்றவாறு. (45)

46. மித்தி ரக்கினன் மத்திய பானியும்
மேவு வானுதிரக் கூப மீதிலே
மத்தன் வஞ்சகன் சத்திய வீனனும்
மாத ராட்டுவா ஞரை வீட்டுவான்
பெற்றி டுமசி பத்திர வன்முதற்
பேசும் பிரனருக் கேச மைத்தவர்க்
குற்ற நிரையமோ பெற்ற ரெண்டின்மேல்
கூறும் லோகத்தின் மானஞ் சொல்லுவாம்.

என்றது, மித்திர பேதஞ் செய்கின்றவனும், மது பானஞ் செய்கின்றவனும் இரத்தக் குழி நரகம் சேருவார். உன்மத்தன், லுஞ்சகன், புரட்டன், நட்டுவன், தீயைக் கொளுத்துகின்றவன் ஆகியோர்க்கு அசிபத்திரை நரகமாம். இதன் மேல் இருக்கின்ற லோகத்தின் மானஞ் சொல்லுவோம் என்றவாறு. (46)

(வேறு.)

**கூர்மாண்டம்**

47. அதன்மேல் வெளியு மூவயுதம்
அதன்மேற் கூர்மாண டங்கோடி
அதனே ரிலக்கங் குறையதன்மூன்
றுருகுங் கண்ட மதனடுவின்
அதிலே பயங்கொள் முகில்போல
ஆகங் கறுப்பாய்த் தோணுன்காய்
அதிலே மழுமான் வில்லம்பு
அபைய வரதஞ் சேர்ந்திலங்க;

என்றது, அதன்மேல் வெளி முப்பதினுயிரம் யோசனை உயரத்துக்குமேல கூர்மாண்டம் தொண்ணுற்றெரு லட்சம்; அது மூன்று கண்டமாயிருக்கும். அதன் மத்தியில் பயங்கொள் முகில்போலத் தேகங் கறுப்பாய் நான்கு புயத்துடனே மழுவும் மானும் வில்லும் அபயவரதமும் சேர்ந்திலங்க என்றவாறு. (47)

48. மதிபோல் முகமும் பிறையெயிறு
மாறு வருள்கூர் முக்கணுடன்
முதியா நிரையத் ததிபதியாய்
முயலுங் கூர்ம நாயகனுர்
பதிமேல் வெளியொன் பானிலக்கம்
பகரு மட்ட கயந்தாங்கும்
அதல மீரு வுலகேழும்
அமரு மிலக்க மறைகுவமால்.

என்றது, சந்திரவிம்பம் போல முகமும், பிறைபோன்ற எயிறும் பக்தர்களுக்கு மாறுமற் கொடுக்கின்ற இருபையும், மூன்று கண்ணுடனே நெடு நாட்களாய் நரகத்துக் கதிபதியாயிருக்கின்ற கூர்மாண்ட நாயகனுர் அதிபதியாயிருப்பார். அதன் மேல்வெளி ஒன்பது லட்சம். அதனுள் அட்டகயந் தாங்கா நின்ற பாதல முதலாக அதல மீருக ஏழுலோகத்தினுடைய பிரமாணங்களையும் சொல்லுவோம் என்றவாறு. (48)

## சத்த லோகம்

### 1. பாதாளம்

(வேறு)

49. கனியு டைந்தொழுகு நறவு பொங்குசினை
கற்பகத் தமர ருலகினும்
இனிது பங்கின தெக்கக னிருளை
ஈரும் நவமணிகள் பூருவந்
தனில மர்ந்தமா பலிபிர தீசியின்
தங்கு பிங்கலன் றசவிலக்கமாம்
பனக னுந்துபா தாள மேல்வெளி
பத்தி லக்கமுட னயுதமே.

என்றது, கனிகளுடைந்து சரம்பெருகா நின்ற, கொப்புக்களையுடைத்தாகிய கற்பகத் தருவையுடைய தேவலோகத்துக்குச் சமானமாகிய பாதாள லோகம் பத்து லட்சம் உன்னதம், அது மூன்று கண்டமாக இருக்கும். நடுக் கண்டத்தில் தட்சகனும், கீழ்க்கண்டத்தில் மகாபலியும் மேற்கண்டத்தில் பிங்கலனும் இருப்பார்கள். அதன் மேல்வெளி பத்து லட்சத்துப் பதினா யிரம் யோசனை உன்னதம் என்றவாறு. (49)

### 2. ரசாதலம்

50. சித்த வித்தியா தரரி யக்கருஞ்
சேருமா லளகை யூரென்ப
பத்து லக்கமுன் னதம்ர சாதலம்
பங்கு மூன்றினடு சதவிடத்
துத்த சன்குண திசைவி கற்பனுஞ்
சொல்கு டக்கினி குகாதனும்
நித்தி லத்தினொளி விளக்குமத் தலமும்
நீடுமே லயுதம் வெளியதே.

என்றது, சித்தர்கள் வித்தியாதரர்கள், யட்சர்கள் சேர்ந்திருக்கப் படாநின்ற குபேர பட்டணத்துக்குத் துல்லியமான ரசாதலலோக உன்னதம் பத்து லட்சம்; அது மூன்று கண்டமாயிருக்கும். மத்தியில் சதவிடத்துத் தசனென்கிற பாம்பும், குணக்காகிய கீழ்த் திசையில் விகற்பனும், மேற்குத் திசையில் குகாதனும் இருப்பார்கள். அந்த லோகம் தரள ஒளியினாலே பிர காசிக்கும். அதன் மேல் வெளி பதினாயிரம் யோசனை என்றவாறு. (50)

### 3. மகாதலம்

51. நறைக மழ்ந்தொழு கிருல்பொ ருந்துசினை
நகமுறு மிமைய வரைமகள்
கறைமி டற்றனகர் நிகர்ந டுப்பதியிற்
காள ரங்கன்மேல் வீமனும்
அறைவர் கீட்டிசை விராக னுறயுதம்
ஆகுமே வுயரம் வெள்ளியாற்
றறைவி ளக்கமுக் கண்ட மென்மகா
தலமதேவயு தம்வெளி யுமேல்.

என்றது, தேன்பெருகாநின்ற தேனடைகள் பொருந்திய கொப்புக் களை யுடைய விருட்சங்களை யுடைத்தான இமோற்பர்வத ராசனுடைய குமாரியாகிய பார்வதி சமேதரான பரம்சிவன் இராநின்ற கயிலாயத்துக்குச் சமானமாகிய மகாதலம் பத்துலட்ச முன்னதம். அது மூன்று கண்டமா யிருக்கும். நடுக்கண்டத்தில் காளரங்கனும், மேற்கண்டத்தில் வீமனும், கீழ்க்கண்டத்தில் விராகனும் இருப்பர். அந்த உலகம் வெள்ளியினுலே விளங்கும். அதன் மேல்வெளி உன்னதம் பதினுயிரம் யோசனையாம் என்றவாறு. (51)

## 4. சுதலம்

52. சுரரி ருக்குநகர் பகரு தற்கரிய
சுதல நூறயுத முன்னதத்
துரிய தங்குமுக் கண்ட மத்தியி
னுரக ராசனெனு முதயனுங்
கருணை முற்றுகற் கந்தங் கீட்டிசை
கராளன் பச்சிம மிருளெலாம்
பருகி மிக்கொளிசெய் புட்ப ரர்கமாய்ப்
பகரு மேல்வெளியு மயுதமே.

என்றது, தேவலோகத்துக்குச் சமானமாய்ச் சொல்லுதற் கரிதாயிருக்கின்ற சுதல லோகம் பத்துலட்சமுன்னதம். அந்த லோகம் மூன்று கண்டமா யிருக்கும். மத்திய கண்டத்தில், சர்ப்பங்களுக்கு எசமானுகிய உதயனும், கீழ்த்திசையில் தயவோடுங் கூடியிருக்கின்ற கற்கந்தனும், மேற்றிசையில் கராளனும் இருப்பர். அந்த லோகம் புட்பராகத்தினுலே பிரகாசமாயிருக்கும். அதன் மேல்வெளி பதினுயிரம் யோசனை உன்னதமாகும். (52)

## 5. நிதலம்

53. முகைவி ரிந்தமலர் நகைக மழ்ந்தசெம்
முளரி மங்கைவள ருலகினோர்
அகியி னெந்தைநடு வுரக கம்பலநூ
றயுத மேற்றிசையின் விகடனும்
இகல்செ றிந்தசிசு பாலன் பூருவம்
இந்த்ர நீலவொளி யாருமேற்
றங்கபொ ருந்தயுத வெளிசொ லுன்னதஞ்
சார்முக் கண்டமா நிதலமே.

என்றது, மொட்டு விரிந்த மலரினுடைய வாசனை கமழாநின்ற செந்தா மரைக்கண் இருக்கின்ற, லட்சுமீ சமேதரான [திருமால் வசிக்கின்ற] வைகுண் டத்துக்குச் சமானமாகிய நிதலலோகம் பத்துலட்ச முன்னதம்; அது மூன்று கண்டமாயிருக்கும். சர்ப்பங்களுக்கு ரர்சாவாயிருக்கின்ற உரககம்பலன் மத்தியிலிருப்பான். மேற்றிசையில் விகடனிருப்பான். அந்த லோகம் இந்திரநீலக் கல்லினுலே பிரகாசிக்கும். அதன் மேல்வெளி பதினுயிரம் யோசனை என்றவாறு. (53)

## 6. விதலம்

54. அளிது தைந்துமது வொழுகு வெண்கமல
வரிவை முண்டகன் றலமதின்
களியு றும்விதல மயுத நூறுமுக்
கண்ட மத்தியின் வாசுகி
யிவிரு றும்பிரக லாதன் கீட்டிசையின்
மேற்கின் வாழிமைய ராக்கதன்
ஒளிசெ யும்பதும ராக மேல்வெளியு
முரைசெய் வாம்விரைவி னயுதமே.

என்றது, வண்டுகள் தாமே துதைந்து, மதுப்பெருக்காநின்ற வெண்டாமரையிலிருக்கும் சரசுவதிசமேதரான பிரமனின் லோகத்துக்குச் சமானமாகிய விதல லோகம் பத்துலட்ச முன்னதம். அது மூன்று கண்டமாயிருக்கும். மத்திய கண்டத்தில் வாசுகி என்கிற சர்ப்பமும், கீழ்க்கண்டத்தில் பிரகலாதனென்னும் அசுரனும், மேற்கண்டத்தில் இமையராட்சதனும் இருப்பார்கள். அந்த லோகம் பதுமராக ஒளியினாலே பிரகாசிக்கும். அதன் மேல் வெளி பதினாயிர மென்றவாறு. (54)

## 7. அதலம்

55. அதல லோகமுக் கண்ட மாமதின்
அமரு லக்கமுந் தசமேயுன்
னதம்வி ளங்குபொற் பிரபை யாலதி
னடுவி னிற்குளிக ராசனும்
திதிபெ றுஞ்சுருதி யசுர னுங்குண
திசையின் மேற்றிசையி னுறுமுலோ
கிதனு மேல்வெளியு மயுத மாஞ்சதக்
கிருது லோகமு மானுமே.

என்றது, அதல லோகம் உன்னதம் பத்துலட்சம். அது மூன்று கண்டமாயிருக்கும். அந்த லோகஞ் சுவர்னப்ரபையினாலே பிரகாசிக்கும். மத்திய கண்டத்தில் குளிகராசனும், கீழ்த்திசையில் சுருதியென்கின்ற அசுரனும், மேற்கண்டத்தில் உலோகிதனென்கிற ராட்சதனும் இருப்பர். அதன் மேல் வெளி வொன்பதினாயிரம் யோசனை உன்னதம். அந்தலோகம் தேவலோகத்துக்குச் சமானமாம் என்றவாறு. (55)

## ஆடகேசுரபுரம்

(வேறு.)

56. சொல்லரிய பாதலமே லாடகே
சுரபுரஞ்சொல் விலக்க மொன்பான்
சொல்லுகொலு மண்டபவி சாலமீ
ரைஞ்ஞூறுட் சுடர்முக் கண்ணும்

புல்லர்மனம் போற்கறுத்த விடமிடறும்
புரிசடையுங் கரங்கள் நான்கும்
புல்லுமுமை யாளுடன்சிங் காசனத்தி
லுடகஞும் புனிதன் பின்னும்.

என்றது, சொல்லுதற் கரிதான அதல லோகத்தின் மேலான ஆடகேசுவர புரம் ஒன்பதுலட்சம் யோசனை உன்னதம். அதன் மத்தியில் அவருடைய கொலுமண்டப விசாலம் ஆயிரம் யோசனை விஸ்தாரமாயிருக்கும். பிரகாசியாநின்ற சூரிய சந்திராக்கினி முக்கண்ணும், புல்லர் மனம் போலக் கறுப்பாகிய விஷத்தையுடைய கண்டமும் நான்குகைகளுடனே சேரா நின்ற உமைசமேதராகிய ஆடகேசுவரன் சிம்மாசனத்தில் இருப்பார் என்றவாறு. (56)

57. அதலம்வரை யேழுலகுக் கதிபரா
யெமனுலக மாதி யாக
அதினிரைய மீருன பிலமதற்கு
நாயகரா யமர்ந்து மூழி
யதினுலகு பொடிபடுத்தி நீறணிந்தோன்
சேடமென வரிமா லாக
மதுவெளுப்பாய்த் துயில்கறுப்பா யலமூன்றித்
தலைவெடித்தா யிரங்கம் மானேன்.

என்றது, முன்சொன்ன ஆடகேசுவரர் அதல லோகம் வரை ஏழுலோகத்துக் கதிபதியாக எமலோக மாதியாக நிரயமீருன பிலத்துவாரத்துக்கு நாயகராக இருந்து, ஊழிக்காலத்தில் சகல லோகங்களையும் பொடிபடுத்தி அணிந்தோன் சேடமென, மகாவிஷ்ணுவானவர் மயங்கித் தேகம் வெளுப்பாய், ஆடைகறுப்பாய், கலப்பையை ஆயுதமாகக் கொண்டு, சிரசு ஆயிரமான சர்ப்பவுரு வெடுத்திருந்து பின்னும் என்றவாறு. (57)

58. மிகநெடிய வுடல்வளைந்து வுணர்வின்றிக்
காலருந்தி மெலிந்து வாடி
இகமுமிலைப் பரமுமிலை யெங்ஙனயா
மிருப்பதென வேங்கி வாடிச்
சுகமுதவு பாலத்திற் சென்றுமைதா
ளெணிந்த துருகிண நாக்குஞ்
செகமுழுது மோர்தலையாற் றங்குபுவி
கோடிகனஞ் செப்பு மன்னே.

என்றது, நெடிதான தேகம் வளைந்து, ஆகாரமில்லாமல் வாயுவைப் புசித்து மிகவுமெலிந்து வாடி, இகமுமில்லை பரமுமில்லை எங்ஙனம் யாமிருப்பதெனச் சிந்தித்து விசாரத்தையடைந்து, சுகமுதவா நின்றிருக்கின்ற பாதாளத்திற் சென்று, ஈசுவரனுடைய பாததூளியினாலே பிரமதேவரால் சிருட்டிக்கப்பட்ட சகமுழுவதும் ஒருசிரசினாலே தரிக்கப்பட்ட பூமியினுடைய கனம் கோடி என்றவாறு. (58)

முதலாவது
பாதாள வருணனை யுரைத்த வத்தியாய முற்றும்.

# இரண்டாவது
# நவகண்ட முரைத்த வத்தியாயம்.

59. பாதலம் பொன்பதி நிரையத் தெண்ணிணை
ஓதினம் பின்னுல கத்தின் மேவிய
பூதர நவகண்டப் புரவின் மேருவின்
கோதர வலகிணைக் கூறு வாமரோ.

என்றது, சுவர்னபூமி, பாதாளம், நிரையம் இவைகளினுடைய சங்கியை களைச் சொன்னோம். இனிமேலாகப், பூமியின் கண்ணே இருக்கின்ற மேரு முதலான மலைகளையும், நவகண்டத்தினுடைய பிரமாணங்களையும் குறை வின்றி மேற்சொல்லுவோம் என்றவாறு. (1)

60. வம்பலர் தாரென வசிக்கு மோர்கம்மால்
அம்புவி தாங்கிய ஆதி சேடன்கால்
பம்புநெட் டுயிர்ப்பினிற் பாகிக்கும் பார்பூ
கம்பமுண் டாமெனக் கழறு வாமரோ.

என்றது, ஒரு வாசமுடைய புட்பத்தைச் சிரசின்மேல் ஒருவன் தரித்ததுபோல, ஆயிரந் தலையொடுங்கூடிய ஆதிசேடனானவன் பூமியை ஒரு தலையால் தாங் கிக்கொண்டு வாயுவை ஆகாரமாகப் புசித்துப் பெருமூச்சு விடுகையில் பூமி யானது அசையும்; அதுவே பூகம்பம் என்று சொல்லுவர் என்றவாறு. (2)

(வேறு.)

61. வடவரை மானம் பாக வதப்பிர காரஞ் செப்பும்
அடர்திரைக் கடலுங் குவவு மகண்டமா யிருத்த லாலே
படியுமுட் சுற்று மானம் பகர்ந்திடுங் கதிரோன் றேரிற்
றெடுத்திடு மாழி யண்டத் தொகைப்புறச் சுற்று மன்றே.

என்றது, மகாமேருவினுடைய பிரமாணம் பாகவத புராணப் பிரகாரமாக வும் மிகுந்த அலைகளோடுங் கூடிய சமுத்திரமும் பூமியும் ஒன்றாயிருப்ப தனாலே உள் சுற்றுப் பிராகாரத் தொகையாய்ச் சொல்க. சூரியனுடைய ரதத்தில் சேர்ந்திருக்கிற வண்டிலுக்கும் இந்த அண்டத்துக்கும் புறச் சுற்றளவுத் தொகை சொல்வோம் என்றவாறு. (3)

(வேறு.)

62. பாரினுங் கீழ்மே லிலக்கம்யோ சனையாய்ப்
புகர்ந்திடுந் தென்வட லஃதே
வாரிசூழ் புவியோர் வட்டமா யதற்கு
மானமு மூன்றிலக் கமதாய்
ஆரும்யோ சனைகள் சூழ்பல நிறமா
வதனுறுங் கண்டமொன் பதுவாய்
வேரியார் கமலப் பொகுட்டென வுலகின்
நடுவுறை மேருமால் வரையே.

என்றது, சமுத்திரஞ் சூழாநின்ற பூமியானது கீழ்மேல் லட்சம் யோசனை; தென்வடல் லட்சம் யோசனையாயிருக்கும், அந்தப் பூமி வட்டமாயிருக்கும். அதன் சுற்றளவு மூன்றிலக்கம் யோசனை உட்பட்ட பூமி பல நிறத்துடனே

கூடிய ஒன்பது கண்டமாயிருக்கும். அது எப்படியென்னில் வர்சம் பொருந்திய (தாமரை) கமலத்தின் மத்தியில் கர்னிகையாகிய மொட்டிருப்பது போல, பூழி மத்தியில் மகாமேரு விருக்கும் என்றவாறு. (4)

## மேருப் பிரமாணம்.

(வேறு.)

63\. பொன்னங்கிரி மானந்தனைப் புகல்வார்புவி மேலாய்
மன்னெண்பதி நாலாயிர மகியின்புதை மானம்
துன்னும்பதி னாறுயிரந் தூர்கொண்டிட மஃதே
என்னுந்தலை விபுலம்பெறும் எண்ணான்கு சகத்ரம்.

என்றது, மகாமேருவினுடைய உன்னதம் பூமிக்கு மேலே எண்பத்து நாலாயிரம் யோசனையாகவும், பூமியின் கீழே பதினாறுயிரம் யோசனையாகவும் அதன் தூர அகலம் கீழ்மேல் பதினாறுயிரம் யோசனையாகவும், தென்வடல் பதினாறுயிரம் யோசனையாகவும், (அந்த மேருவினுடைய) சிரசகலம் கீழ்மேல் முப்பத்திரண்டாயிரம் யோசனையாகவும் இருக்கும் என்றவாறு. (5)

64\. எண்ணாறு சகத்ரத்தொகை யெய்துமடிச் சுற்றே
தொண்ணூறுட னாறுந்தலைச் சுற்றாகவே சொல்லும்
விண்ணோர்பல முனிவிஞ்ஞையர் மேவும்வட வரையின்
பண்ணார்ந்த ராளத்தொகை பகர்மேகலைத் தொகைகேள்.

என்றது, முன் சொல்லிய மகாமேரு பூமியின் கீழே புதைமானமாயிருக்கிற தூரினுடைய அடிச்சுற்று நாற்பதாயிரமும், தலைச்சுற்று தொண்ணூற்றாறாமும் இருக்கும். அதனுள், தேவதைகள், முனிவர்கள், இயக்கர் இவர்களிருப்பார்கள். அழகு பொருந்திய மேருவினுடைய அந்தராளத் தொகையும் மேகலைத் தொகையும் மேற்கவிதையிற் சொல்லுவோம் என்றவாறு. (6)

(வேறு.)

65\. அடியந்த ராளமோ விருபத்தை யாயிர
மறையுயர மேல்மேகலை
படிகின்ற வுன்னதமூ வாயிரம்வி சாலமோ
பதினா யிரமதினுறு
நடிகொண்ட ரம்பையர்கள் சித்தர்விஞ் ஞையர்பூதர்
நண்ணுவர்க ளதன்மேலதாய்
இடையந்த ராளமோ விருபத்தை யாயிர
மெய்துமிதன் மேகலையெனே.

என்றது, முன்சொன்ன மேருவினுடைய அந்தராள மூன்று. தன் அடியந்தராளம் இருபத்தையாயிரம் உன்னதம். அதன் மேகலையாகிய சுற்றுவிளிம்பு உன்னதம் மூவாயிரம். அதன் விசாலம் பதினாயிரம். அதில் அரம்பையர்கள், சித்தர் விஞ்ஞையர், பூதர் இருப்பார்கள். அதன்மேல் இடையந்தராளம் இருபத்தையாயிரம் யோசனை உன்னதம். அதன் மேகலை உன்னதம் மேற் கவியிற் சொல்லுவாம் என்றவாறு. (7)

66. அறைகின்ற வுயரமூ வாயிரம் விசாலமோ
வயுதமுட ணலாயிரத்
துருகந்த ருவர்சித்தர் கடையந்த ராளமோ
வோதுமை யைந்தாயிரம்
பெறுமந்த மேகலையி னுயரமூ வாயிரம்
பேசுமிரு நவவிலாசம்
நிறைகின்ற வாயிரத் தெண்ணனன்கொ டுமுடியின்
நிலைகொண் டிருப்பவாதின்.

என்றது, முன்சொன்ன அந்தராளச் சுற்றுவிளிம்பு உயரம் மூவாயிரம். விசாலம் பதினாலாயிரம். அதனுள் கந்தருவர், சித்தர் இருப்பார்கள். அதன்மேல் மூன்றும் அந்தராளம் உன்னதம் இருபத்தையாயிரம். அதன் மேல், மேகலையாகிய சுற்றுவிளிம்பு உன்னதம் (உயரம்) மூவாயிரம். அதன் விசாலம் பதினெட்டாயிரம். சொல்லாநின்ற மேகலைச் சுற்று விளிம்பில் ஆயிரத்தெட்டுக் கொடுமுடியிருக்கும் என்றவாறு. (8)

## அட்டதிக்குப் பாலகர்கள் இருப்பிடங் கூறியது.

(வேறு.)

67. குணக்குச் சிகரந் தனிலமரா
பதியிற் குலிசப் படையேந்தி
வணக்கங் குசமா ருமயிரா
வதவா கனமா யிரங்கண்ணும்
பணைக்குந் தேம லிளமுலையாள்
பாரி யென்னுஞ் சசியொடரி
யணைக்கு ளிருக்கும் புருகூதன்
அமர்வான் பின்றென் கீட்டிசையில்.

என்றது, முன்சொன்ன ஆயிரத்தெட்டுக் கொடுமுடிமேலே கீழ்ப்புறத்துக் கொடுமுடிமேலே அமராவதிப் பட்டணத்தில் வச்சிராயுதத்தையும், தோறட்டியையும், அயிராவதமென்கின்ற யானையையும் ஆயிரம் கண்களையும் இரண்டாகப் பணைத்த தேமலையும் இளமுலையையுடைய இந்திராணி யென்கிற பாரியையும் உடைய தேவேந்திரன் சிம்மாசனத்திலிருப்பான். அதன்பின் தென் கீழ்த்திசையில் சொல்வாம் என்றவாறு. (9)

(வேறு.)

68. தலையி ரண்டு கால்கள் மூன்று
கொம்பு நான்கு [1]சலிலம்போல்
இலகு மாறு கண்க ளேழு
கைக[2]டாலு வேழ்புவி
உலவு மூர்த்தி யாடு தேவி
சுதைசு வாகா வுடனுமே
துலையில் தேசோ வதியின் மேவு
தூம கேது வனலனே.

---

[1] தாமரை மலர். [2] நாக்கு.

என்றது, இரண்டு தலையும், மூன்று கால்களும், நான்கு கொம்பும் செந்தாமரைப் பூப்போல் சிவந்த ஆறு கண்களும், ஏழு நாக்கும், ஏழு கைகளும் உடைத்தாகி, [1] அசவாகனமும் சுதை சுவாகா என்கிற பாரியையு முடைத்தாய்ப் புகையைத்தானே கொடியாகக் கொண்டு அக்கினி பகவானிருப்பார் என்றவாறு. (10)

69. வெருக்கொ ளும்பு கைக்க ணார்மி
ருத்த பமி ருத்துவால்
வருத்தி வீயு மவனி யோர்கள்
மருவு பாவ புண்ணிய
முரைத்த சித்திர குத்த ரானு
ரைத்தி டுங்க ணக்கின்மேற்
றுரத்து வெய்ய கால தூதர்
சூழ வேசம் யமனியில்.

என்றது, பயங்கரமாயிருக்கின்ற புகைக் கண்களையுடைய மிருத்து அபமிருத்து இவர்களாலே மரணத்தையடைந்தவர்களுடைய பாவ புண்ணியத்தைச் சொல்லாநின்ற சித்திர புத்திரர் சொற்படிக்கு அதட்டி விரட்டி அடிக்கின்ற கால தூதர்கள் சூழ் சம்யமனியாகிய எமபுரத்தில்; என்றவாறு. (11)

70. பரிக டும்ப கடுக ளூர்தி
பகழி கால தண்டம்வேல்
எரிம முக்கை வாண்மு சுண்டி
யிலகு சக்க ரம்வசி
உரிய பிண்டி பாலம் வில்லு
லக்கை யங்கு சங்கைவேல்
அரிய சூல நீடு வச்சி
ராயு தங்க தையுடன்.

என்றது, வாகனம் எருமைக்கிடா; ஆயுதவகை அம்பு—1, கால தண்டம்—2, வேல்—3, எறியாநின்ற மழு—4, வாள்—5. முசண்டி—6, இலங்கா நின்ற சக்கரம்—7, கத்தி—8, பிண்டிபாலம்—9, வில்—10, உலக்கை—11, அங்குசமாகிய தொறட்டி—12, கைவேல்—13, அரிதான சூலம்—14, நீண்ட வச்சிராயுதம்—15, கதை—16 உடன் என்றவாறு. (12)

71. பரிவின் மக்க ளைக்க வர்ந்த
பாச முஞ்செங் கோல்புனை
கரமட் டாத சம்நெ ருப்பு
கண்ணி ரத்த கோசிகம்
இருட்செ றிந்த காள கன்னி
இலகு நீலி யும்மணி
அரிய ணைக்குள் மேவு சண்ட
ருந் தென்றி சையனே

[1] ஆடு.

என்றது, லோகத்திலிருக்கும் சகல ஜீவன்களையும் கட்டா நின்ற பாசம்—17, செங்கோல்—18, ஆக பதினெட்டாயுதத்தையுடைய பதினெட்டுக் கைகளும், அக்கினிப் பொறி சிந்திய கண்ணும், அழகு பொருந்த யாத்த வஸ்திரமும், மிகவும் இருட்போலக் கருப்பாகிய காள கன்னி, நீலியென்கின்ற இரண்டு பாரீயைகளையும் உடையவராகி சிம்மாசனத்திலே தரும ராசா வீற்றிருப்பார் என்றவாறு. (13)

## கீழ் மூன்று கவிகளும் ஒரு தொடர்.

(வேறு.)

72. மாச றுங்கலை மனுட வாகனங்கோ ராவதி
ஈசன் மேனி சாமமா மிரத்தவா ளரித்தவன்
பேசு வாய்மு கங்கறுப் பெயிற்பிறை யரக்கர்கோன்
கேசினி சதாயி மாது கேள்வனுகி நிருதியே.

என்றது, குற்றமில்லாத கலையையும், மனுஷ்யர்களை வாகனமாகவும் சத்துருக்களைச் சம்ஹரித்த இரத்தம் பூசிய வாளை ஆயுதமாகவும், வாயுமுகமுங் கறுத்துப் பிறை போன்ற பல்லையுமுடையவனுய், அரக்கருக்கு ராசாவாகவும், கேசினி, சதாயி இரண்டு பாரியுடனே கோராவதி என்கின்ற பட்டணத்தில் நிருதியிருப்பான் என்றவாறு. (14)

73. பாச கஸ்தன மகரவூர்தி பட்டணம் பிரபாவதி
நேசமார் கிலாத னிப்பெண் மருஷணிப்பெண் மருவுவ
மாசில் கந்த வதியினூர்தி மானிறங் கறுத்தகண்
பேசு மயிடி யங்கதாயி பெண்கணவ னனிலனே.

என்றது, கையினில் பாசியாகிய பாசமும், மகர மச்சம் வாகனமாகவும் அத்தியாந்தம் இட்டமாகிய கிலாதனியும் மருஷணியும் (ஆகிய) இரண்டு ஸ்திரீகள் ஸமேதராக பிரபாவதி யென்கிற பட்டிணத்தில் வருணன் இருப்பான். அதன் வடபாலின் மிகவுங் கறுத்த தேகத்துடனே மானை வாகனமாகவும், மயிடி அங்கதாயி என்று சொல்லா நின்ற இரண்டு ஸ்திரீ ஸமேதராக, கந்தவதிப் பட்டணத்தில் வாயு பகவான் இருப்பான் என்றவாறு. (15)

(வேறு.)

74. கீர்த்திமதி நகர்தனிலே வெண்குதிரை
வாகனத்தின் கிளர்வெண் டேகப்
பார்த்திபனை யணைநிவிர்த்தி யிருத்தியுடன்
வடபாலின் சோம னண்ணும்
ஆர்த்தகறைக் கண்டனசோ வதியின்முக்க
ணன்குபுய ஞனே றூர்தி
காத்திரமா ருமிரத தாயினிசு
ரூபினியுங் கலந்த வீசன்.

என்றது, கீர்த்திமதி என்கிற பட்டணத்திலே வெள்ளைக் குதிரையை வாகனமாகவும், அதிவெண்மையான தேகத்தையுடைய ராசாவாய், நிவிர்த்தி இருத்தி யென்கிற ஸ்திரீகளுடனே வடபாலில் சோமனிருப்பான். அதன்

கீழ்ப்பாற் சிகரத்தின் அசோவதிப் பட்டணத்தில், விஷத்தையுடைய கழுத்தும், முக்கண்ணும் நான்கு புயத்துடனே இடபத்தை வாகனமாகவும், இரததாயினி சுரூபி யென்கிற இரண்டு ஸ்திரீகளுடனே ரிஷபாரூடராகப் பரமேசுரர் இருப்பார் என்றவாறு. (16)

## பதினாறு கோணத்திலிருக்கிற தேவர்களைக் கூறியது.

(வேறு.)

75. வாசவ னகர்க்குத் தென்பால் மன்னிய சிகரந் தன்னில்
தேசுறு மேரு வென்னுஞ் செழுநகர் தன்னில் தோட்டிப்
பாசமும் புனைந்து வொற்றைப் பருமருப் பிருகால் முக்கண்
பேசுநால் வாயை யத்தம் பெறும்விநா யகனி ருப்பான்.

என்றது, மேருவுக்குக் கீழ்பால் சிகரத்தின் வாசவன் நகரத்துக்குத் தென்பால் இருக்கின்ற சிகரத்தின் மேருவென்கிற பட்டணத்தில், பாசம் அங்குசம் புனைந்து, ஏகமாய்ப் பெரிதாயிருக்கின்ற கொம்பு, மிரண்டுகாலும், மூன்று கண்ணும், நான்கு வாயும், ஐந்து கையும் உடையனாகிய விநாயகன் இருப்பான் என்றவாறு. (17)

76. மற்றதன் றென்பாற் காம வதிநகர் தனில ரம்பை
நற்றிலோத் தமைக ளாதி நடிப்பவ ரிருப்பார் தேயு
வுற்றிடுந் திசைக்கு மேற்கா வுறுமிரே வதிபு ரத்தில்
குற்றமில் விசுவ கன்மன் குழாத்தொடு மிருப்பன் மாதோ.

என்றது, அதன் தென்பாற் சிகரத்தின் காமவதிப் பட்டணத்தில் அரம்பை, உருவசி, திலோத்தமை ஆகிய தேவ கன்னிகள் நடனஞ் செய்து கொண்டிருப்பார்கள். இதன் தெற்கு அக்கினி பகவானிருக்கின்ற தேசோவதிப் பட்டணத்துக்கு மேல்பால் இருக்கின்ற சிகரத்தின் ரேவதிபுரம் என்னும் பட்டணத்தில் விசுவகர்மன் முதலான பேர்கள் இருப்பார்கள் என்றவாறு. (18)

77. சீர்த்திசேர் நகர்க்குத் தென்பாற் றிருநந்தா புரியின் மேவிக்
கூற்றெனப் பாய்வ ராகிக் கொடியசா முண்டி தேவர்
போற்றுமிந் திராணி மாகே சுரிபுகழ் பிரமி யேத்
மாற்றுகௌ மாரி வைண வியுமேழு மாதர் காப்பார்.

என்றது, இதன் மேல்புறத்தின், சீர்த்தியுடைத்தாகிய திருநந்தாபுரத்தில், எமசொரூபமாயிருக்கிறவராகிய, கொடிதான சாமுண்டியும், தேவர்களாற் றுதிக்கப்பட்ட இந்திராணியும், மகேசுவரியும், புகழுடைய பிராமணியும், துக்கங்களைப் போக்கா நின்ற கௌமாரியும், வைஷ்ணவியும் ஆக ஏழு மாதர்கள் இருப்பார்கள் என்றவாறு. (19)

78. பின்னெம னகர்க்கு மேல்பால் வருசுரோ சிதைந கர்க்குள்
துன்னுருத் திரக ணங்கள் சூழ்நக ரதன்மேல் பாலிற்
பொன்னக ரனைய செய்ய புகழ்குண பதிந கர்க்குள்
மின்னுமுக் கவர்சூ லம்வில் வேற்சத்தி கணங்க ளாவார்.

என்றது, எமதர்மராசாவினுடைய சம்யமனி பட்டணத்துக்கு மேல்பால் இருக்கின்ற சிகரத்தில், சுரோசிதை யென்கிற பட்டணத்தில் கூட்டத்தோடு கூடி ருத்திர கணங்களிலிருப்பார்கள் என்றவாறு. (20)

79. நிருதிக்கு வடபா லாய நீடுபொற் பதியின் வீமன்
றுரையிலீ சான னீல லோகிதன் றேவ தேவன்
நரனுருத் திரன்மா தேவ னும்பவோற் பவன்கா பாலி
கருதிய விசய னேசங் கரன்பதி னொருவு ருத்ரன்.

என்றது, நிருதிக்கு வடபாற் சிகரத்தின் நீண்ட பொற்பதி யென்கிற பட்டணத்தில் வீமன், நரைதிரையில்லாத ஈசானன், நீல லோகிதன், தேவ தேவன், அரன், உருத்திரன், மாதேவன், பவோற்பவன், காபாலி, விசயன், சங்கரன் என்கிற ஏகாதசவுருத்திரர்கள் இருப்பார்கள் என்றவாறு. (21)

80. அருநகர் வடபாற் கிருஷ்ணு புரியினி லலகை கூளி
வருணர்க்கு வடபாற் சித்த வதியோவித் யாத ரர்க்காம்
பொருமதின் வடபாற் கைமா புரியிற்கின் னரர்க ளுய்ப்பார்
கருதுகாற் றின்கீழ் பாலீற் காந்தாரி புரங்கந் திருவர்.

என்றது, அதன் வடபாற் சிகரத்தின் கிருஷ்ணுபுரி யென்கிற பட்டணத்தில் அலகை கூளிகள் இருப்பார்கள். இதன் வடபால் முன் சொன்ன வருணன், பிரபாவதியென்கிற பட்டணத்துக்கு வடபாற் சிகரத்தில், காந்தாரிபுரத்திற் கந்தருவர் இருப்பார்கள் என்றவாறு. (22)

81. தாமதன் கீழ்பா னிர்ம தாபுரி குய்ய கர்க்காம்
சோமனூர் பதிக்குக் கீழ்பாற் சொலுஞ்சித்த வதியா மென்னு
நாமமா ரளகை யக்கர் நாதனுந் தனதன் கீழ்பால்
ஏமமார் குசையின் சித்தர் தேவர்க ளிருப்பர் மன்னோ.

என்றது, இதன் கீழ்பாற் சிகரத்தின் நிர்மதாபுரிப் பட்டணத்தில் குய்யகர்களிருப்பார்கள். இதன் கீழ்பால் முன்சொன்ன குபேரன் இருப்பான். இதன் கீழ்பாற் சிகரத்தின் சித்தவதி யென்னும் அளகாபுரிப் பட்டணத்தில் இயக்கருக்கு ராசாவான குபேரனிருப்பான். இதன் கீழ்பாற் சிகரத்தின் சுவர்னமயமான குசை யென்கிற பட்டணத்தில் சித்தர் தேவர்களிருப்பார்கள் என்றவாறு. (23)

82. ஈசனுர் பதிக்குத் தென்பா லிருப்பது மாபு ரத்தில்
வாசநா ரதன்றென் பாலில் வானட ருப்ப ரிக்கை
யார்சிசு வதியி னற்கிற் நாசத்திய னிருப்பர் தாமே
பேசுமச் சுவினி தேவர் பின்மற்றச் சிகரந் தோறும்.

என்றது, இதன் கீழ்பான் முன் சொன்ன ஈசனுர் பதிக்குத் தென்பாற் சிகரத்தின் பெருமை பொருந்திய பதுமாபுரத்தில் நாரதன் இருப்பான். இதன் தென்பாலின் இருக்கின்ற சிகரத்தின் ஆகாசத்தை யளாவியிருக் கின்ற உப்பரிகையை உடைத்தான சிசுவதி யென்னும் பட்டணத்தில் தசான னர் சத்தியன் இவர்கள்தாமே அசுவினி தேவதைகளாகவிருப்பவர். பின் னும், மற்றச் சிகரந்தோறும் இருக்கின்ற தேவதைகளை மேற்கவியிற் சொல்லு வோம் என்றவாறு, (24)

(வேறு.)

83. கருதுசில சிகரமதி னமரர்நந்தி
கணமுரகர் தாக்க ராதி
தரனனலன் சோமன்பிரத்யூ டனனிலன்
பிரபா சனனே யாபன்
றுருவனுட னட்டவசு விருடியர்கள்
தொழுதுபுடை சூழ நிற்பச்
சரசுவதி யுடன்மனோ வதியினீரே
ழாயிரம்யோ சனையின் வேதன்;

என்றது, மற்றச் சிகரங்கள் தோறும் அமரர்கள், நந்தி கணங்கள், பதஞ் சலி, வியாக்கிரபாதர் முதலான பேரிருப்பார்கள். மத்திய வெளியில் தரன், அனலன், சோமன், பிரத்தியூஷன். அனிலன், பிரபாசனன், ஆபன் துருவனுடன் அட்டவசுக்கள் தொழுது, சமீபத்திலிருக்கச் சரசுவதி சமேதரா கப் பதினாலாயிரம் யோசனை உன்னதமான மனோவதிப் பட்டணத்தில் பிரம தேவன் இருப்பான் என்றவாறு. (25)

(வேறு.)

84. அயன்மனைக் குட்பா னண்ணு மாயிரம் பன்னேந் தாக
உயரசோ வதியின் சித்த ருரகர்கந் தருவ ரேற்ற
கயின்மழு மானு முக்கட் கடவுளாஞ் சீகண் டேசன்
மயல்புரி யுமையா ளோடு மணியரி யணையின் மேவும்.

என்றது, பிரமதேவன் அரண்மனைக்கு மேல்பாலான பதினையாயிரம் யோசனை உன்னதமான அசோவதிப் பட்டணத்தில் சித்தர், உரகர், கந்தருவர் இவர் கள் ஸ்தோத்திரம் செய்கையில், மழுமானணிந்த நான்கு புயத்துடனே மூன்று கண்ணையுடைய ஸ்ரீகண்டேசர் ஆசையைக் கொடாநின்ற உமையாளோடு நவரத்தின சிம்மாசனத்தில் இருப்பார் என்றவாறு. (26)

85. மற்றதன் மேல்பா லாரும் வைகுந்த நகரின் கீழ்மேல்
பெற்றத னுயர மீரே ழாயிரம் பேசும் வாரி
சத்திடை வருபி ராட்டித் தரைமக ளுடன்சிம் மாச
னத்திடை மேவு மாலார் நாரண னிருப்பான் மன்னோ.

என்றது, ஈசுவரனுடைய அரண்மனைக்கு மேல்புறமான வைகுந்த நகரத்தினுடைய உன்னதம் பதினாலாயிரம் யோசனை. அதனுள் தாமரைக் கமலத்தில் உண்டாயிருக்கிற லட்சுமி, பூமிதேவி சமேதராய் சிம்மாசனத்தில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியிருப்பார் என்றவாறு. (27)

## மேருவின் கீழும், பூமியின் கீழும், பூமியின் கண்ணும் இருக்கின்ற பருவதங்கள், விருட்சங்கள் முதலியவைகளின் எண்ணிக்கை.

86. அடர்திரைக் கடல்சூழ் பூமிக் காதர வான செம்பொன்
துடவரைக் கூன்று கோல்போல் சாத்திய வரையின் சின்னம்
படர்தரு நான்கின் மற்றப் பருப்பதம் வருட மானம்
மடுவுட னுய்யா னங்கள் வகைதனைச் சாற்று மன்னோ.

என்றது, அலைபொருந்திய கடல் சூழ்ந்த பூமிக்கு ஆதரவான செம்பொன் மேருவரை அசங்காமல் ஊன்றுகால் போல, நான்கு பக்கத்திலுமிருக்கிற மலையினுடைய பிரமாணமும், அடையாளமும், படர்ந்திருக்கின்ற நான்கு விருட்சங்களுடைய சங்கியையும், மற்ற உப பருவதத்தினுடைய அளவும் நவகண்டத்தினுடைய பிரமாணமும், மடு உய்யானங்களுடைய பிரமாணங்களையும் சொல்லுவோம் என்றவாறு. (28)

(வேறு,)

87. பசும்பொன்வரைக் குடபாலின் பார்சுவம்மலை நீலம்
வசுதைப்புதை யெண்ணுயிர மகிமேலுயர் மானந்
தச்நாலுடன் இருவாயிரஞ் சாற்றுமலை மேலே
அசையாக்கடம் புயர்மானமீ ரைஞ்ஞூறுட னூறே.

என்றது, மேருவினுடைய மேல்பாலின் இருக்கின்ற சுபார்சுவமலை நீல நிறம். அந்தமலை பூமியில் புதைமானம் எண்ணாயிரம் யோசனை. பூமிக்கு மேல் உயரம் நாற்பத்திரண்டாயிரம் யோசனை. அந்த மலைமேலே அசையாமலிருக்கிற கடப்ப மரம் உயரம் ஆயிரத்து நூறு யோசனையாம் என்றவாறு. (29)

88. நகமார்பணை சதயோசனை நறைப்பூமது வுண்போர்
முகவாசனை சதயோசனை மோதிப்பரி மளிக்கும்
மகிழாரின விரதத்தினுண் மடுவிக்குநீர்க் காவைப்
பகர்வார்கள்வைப் பிரசமெனு முயர்பாவல ருரைக்கும்.

என்றது, அந்தக் கடப்ப மரத்தினுடைய கொப்புக்கள் நீளம் நூறு யோசனை அதன் வாசம் பொருந்திய புட்பத்தின் மதுக்களையுண்டோருடைய முகவாசனை

நூறு யோசனை தூரம் பரிமளிக்கும். அதன் கீழான தாழ்வரையில் கருப்பஞ் சாறறு மடுவும். வைப்பிராச மென்கின்ற உத்தியானமும் இளாவிரத கண்டத் தினுள் இருக்கும் என்றவாறு. (30)

89. குலமேருவின் வடபாலுறு குமுதாசல நிறமோ
சொலுதாடிம விதைபோன்றதன் றூரின்புதை மானம்
பிலமாமிரு நான்காயிரம் பேசுமகி மேலே
நிலையாமெழு வாறுயிர நிற்குமலை மீதே.

என்றது, சிரேட்டமான மேருவுக்கு வடபாரிசத்திலிருக்கிற குமுதாசல பருவ தத்தின் [நிடத] நிறம் மாதுளை விதைபோல இருக்கும். அந்த மலையினு டைய புதைமானம் எண்ணாயிரம் யோசனை. பூமிக்கு மேலே நாற்பத்திரண்டா யிரம் யோசனை உன்னதமாம் என்றவாறு. (31)

90. அடர்ந்தாயிரத் தொருநூறதன் பணைநூறுயோ சனையார்
வடவாலினின் றுதிருங்கனி வழங்கும்புகழ் சன்ம
படமாபர ணம்வாகனம் பலவாய்த்தரு மதனுல்
செடமார்நரை திரைமாறிடுஞ் செழுமாச்சுனை மன்னும்.

என்றது, முன்சொன்ன குமுதாசலத்தின் மேலேயிருக்கின்ற வடவிருட்சத்தி னுடைய உயரம் ஆயிரத்து நூறு யோசனை. அந்த மரத்தினுடைய கொப்பு கள் நீளம் நூறு யோசனை. அதன் கனியருந்திஞேர்களுக்கு, புகழ், அசனம், வஸ்திரம், ஆபரணம், வாகனம் பலபொருள்களையுங் கொடுக்கும். பின்னும், நரைதிரையும் மாற்றிவைக்கும். அந்தமலையின்கீழ் நீர்ச்சுனை யும் இருக்கும் என்றவாறு. (32)

91. வண்டார்சரு வதோபத்திர வனமுங்குண திசையின்
உண்டாகிய மேருக்குவ டுறுமேநிறம் வெள்ளைத்
தண்டூரிரு நான்காயிரஞ் சாற்றுமகி மேலே
விண்டாரெழு வாறுயிர மேலமாம்ர வுயரம்.

என்றது, சொன்னமலையின் கீழே, நீர்ச்சுனையும் சருவதோபத்திரக்காவும் இருக்கும். மேருவின் கீழ்ப்பாரிசத்திலிருக்கிற மேருபருவதத்தின் நிறம் வெள்ளை. அந்தமலை புதை மானம், எண்ணாயிரம். பூமிக்கு மேல் உயரம் நாற்பத்திரண்டாயிரம் யோசனை. அதன்மேல் நிற்கின்ற மாமரத்தின் உய ரத்தை மேற்கவியிற் சொல்லுவோம் என்றவாறு. (33)

92. தாணுயிரத் தொருநூறதன் சினைநீளமுஞ் சதமாம்
வானுருமக் கனிதேனரு ணோதாநதி வசிப்போர்
மேனுதிடுந் தசயோசனை விண்ணந்தன வனமும்
பானீர்நறை நடுவாம்நடுப் பால்மேருமந் திரமே.

என்றது, தாணுயிரமாவது, முன்சொன்ன மாமரத்தின் உயரம் ஆயிரத்து நூறு யோசனை உன்னதம். அதன் கொப்புநீளம் நூறு யோசனை. அந்த மரங்கனியுதிர்ந்துடைந்து வழிந்தோடிய ரசம் மேற்காக ஓடினதாலே அருணோதா நதம் என்று பெயர். அந்த நதிக்கரையிலிருக்கிற பேர்களு

டைய முகவாசனை பத்து யோசனை தூரம் வரைக்கும் வாசிக்கும், அந்த மலையின் கீழ்பால் மருவும் நந்தனவனமு மிருக்கும். மேருவுக்குத் தென் புறத்தில் மேரு மந்திர மலையிருக்கும் என்றவாறு. (34)

93. பொன்னார்நிறம் புவிமீதினில் புதையாயிர மெட்டாம்
மன்னோமகி மேலுன்னத மாறேமு சகத்ரம்
சொன்னகத்தின் மீதேகனி சொரிநாவலி னுயரம்
மன்னாயிரத் தொருநூறு சினைநீளமுஞ் சதமே.

என்றது, முன்சொன்ன மேருபருவதத்தின் நிறம் பொன். அதன் புதை மானம் எண்ணாயிரம். பூமிக்கு மேலே நாற்பத்திரண்டாயிரம் யோசனை. அதன் கொப்பு நீளம் நூறு யோசனையாம் என்றவாறு. (35)

94. மிருநாவலின் சினையோர்கனி விண்மாகரி யளவாய்த்
தகுமோர்கனி பதினெங்கலச் சாறோடிய கரைமண்
ககமாதர்கள் பூண்டேமருக் காச்சைத்திர ரதமாம்
பகர்நாவலர் தீவுக்கதி பதியக்கினித் துருவன்.

என்றது, முன்சொன்ன நாவற்கொப்புக்களிலிருக்கிற கனிகள் தேவலோக த்திலிருக்கிற ஒரு மகாகச (யானை)ப் பிரமாணம். ஒரு கனி பதினெங்கலச் சாறு வீதம் மற்றைக் கனிகளுடைய சாறுகளெல்லாம் பெருகி மேற்கு முகமாக ஓடாநின்ற நதக்கரை மண்களை தேவஸ்திரீகள் எடுத்துப் பலவிதமான ஆபரணங்களாகச் செய்து, பூண்டு கொள்வார்கள். அதன் சமீபத்தில் தேன் மடுவும் சயித்திரரத வனமும் இருக்கும். அந்தச் சம்புத் தீவுக்கு அதிபதி அக்கினித் துருவனாகும் என்றவாறு. (36)

## இனி, உபபருவதமும் அட்டதிக்குப் பருவதமும் அதனுடைய பிரமாணமும் சொல்லுவார்.

(வேறு.)

95. வாவு மேருவி னாற்றிசை சிறுசிலை வனசப்
பூவின் கேசரம் போன்றன சடரம்பொன் னரலி
தேவ கூடமு மகரமுங் கயிலையுஞ் சிருங்கம்
பாவ கம்பாரி யாத்திரந் தனித்தனி பகரும்.

என்றது, முன்னே சொன்ன மேருவி னாற்றிசையிற் சூழ்ந்திருக்கின்ற சிருங்க மலைகள் தாமரைப் பூவின் பொகுட்டைச் சுற்றியிருக்கின்ற கேசரம் போலவும், அதைச் சுற்றியிருக்கிற அட்டகுல பருவத்தின் பேர் சடரம், பொன்னரலி, தேவகூடம், மகரம், கயிலை, சிருங்கம், பாவனம், பாரியாத்திரம். இந்த எட்டு மலைகளுடைய பிரமாணங்களைத் தனித்தனி சொல்லுவோம் என்றவாறு. (37)

96. மேவு முன்னதப் பரப்பிரண் டாயிரம் விளம்பும்
பூவி னீளமட் டாதச வாயிரம் பொருத்தும்
காவ லானவெண் குலவரை சூழ்வது கனலும்
பாவ கன்றனைப் பரவிசைக் குசைபரித் தரணம்.

என்றது, மேவும் அந்த மலைகளினுடைய உன்னதம் தனித்தனியிரண்டாயிரம். அகலமும் இரண்டாயிரம் யோசனை. இந்த மலையினுடைய நீளம் தனித்தனி பதினெண்ணாயிரம் யோசனை. அந்த அட்டகுல பருவதம் மேருவுக்குக் காவலாக இருக்கும். அது எப்படி யென்றால் சொலிக்கின்ற அக்கினி பகவானுக்குத் தருப்பையினாலே பரிஸ்தானம் போட்டது போலாம் என்றவாறு. (38)

(வேறு.)

97. ஏரதன் கீழ்பால் மாலிய வானும்
இயம்பிடுந் தெற்கினின் றிமயம்
பாருறு மேம கூடமும் நிடதம்
பச்சிமங் கந்தமா தனமாம்
சீருறும் வடபால் நீலமொண் சுவேதஞ்
சிருங்கமா மெண்வரை யதற்கு
ஆருமே வுயரத் தனித்தனி யகல
மாயிர மிரண்டுயோ சனையே.

என்றது, முன்சொன்ன அட்டகுலபருவதத்தையுடைய இளாவிருத கண்டத்தின் கீழ்பால் தெற்குவடக்கான மாலியவானும், இளாவிருத கண்டத்தின் தென்பால், தெற்குநின்று இமய பருவதமும், அதன் வடக்கு ஏமகூட பருவதமும், அதன் வடக்கு நிடத பருவதமும் என்று மலையுங் கீழ்மேலாக விருக்கும். இளாவிருத கண்டத்தின் மேல்பால் கந்தமாதன பருவதமுந், தெற்குவடக்காயிருக்கிற இளாவிருத கண்டத்தின் வடபாலில் அழகுபொருந்திய நீலபருவதமும், அதன் வடபால் சுவேதமும், அதன் வடபால் சிருங்கபருவதமென்றும் மூன்று மலையுங் கீழ்மேலாயிருக்கும். இந்த எட்டு மலைகளின் உயரங்கள் தனித்தனி யிரண்டாயிரம் யோசனையாம். அகலமுந் தனித்தனி யிரண்டாயிரம் யோசனையாம் என்றவாறு. (39)

(வேறு.)

98. நீல நிடதங் கீழ்மேலாய்
நிகழ்த்து மிலக்கம் யோசனையாந்
தூல மேம கூடவரை
சுவேதந் தொண்ணூ றுயிரமாம்
ஏனு மிமயஞ் சிருங்கவரை
யெட்டே யயுத மாங்கேது
மாலங் கீழ்மேற் பத்திராச்வம்
வழுத்து முப்பா னென்றேயாம்.

என்றது, நீலபருவதமும் நிடதபருவதமும் கீழ்மேல் லட்சம் நீளமாம். பெரிதான ஏமகூட வரையும், சுவேதவரையுந் தொண்ணூறுயிரம்

யோசனையாம். இமயம், சிருங்கவரை எண்பதினுயிரம் யோசனையாம் கேதுமால்கண்டமும், பத்திராவ கண்டமும் கீழ்மேல் எழுபத்தோராயிரம் யோசனையாம் என்றவாறு. (40)

99. நீல வரையு மாலியவா
னீல வரைபோ லாகுநிறம்
பாலின் வடிவா மிமையவரை
பகருஞ் சுவேத வரையஃதே
கோலுஞ் சிருங்க நவமணியாங்
குளிரு நிடத வரைபடிகம்
சீல மேம கூடம்பொன்
சிவப்பாங் கந்த மாதனமே.

என்றது, நீலபருவதமும், மாலியவான் பருவதமும் நீலமணிபோல் இருக்கும். இமய பருவதமும் சுவேத பருவதமும் பால்நிறமாயிருக்கும். சிருங்க பருவதம் ஒன்றும் நவமணி நிறமாக விருக்கும். நிடதம் படிக நிறமாகவிருக்கும். ஏமகூடவரை பொன்னிறமாயிருக்கும். கந்தமாதன பருவதஞ் சிவப்பாம் என்றவாறு. (41)

(வேறு.)

100. பொன்மலைக்கு மேற்காய்ப் பொருந்துகந்த மாதனமும்
அம்பொன்மலைக் கீழ்பால் அமைமாலிய வானுந்
தென்வடலி ரண்டுஞ் செப்புந் தனித்தனியே
நன்முப்பா னுன்கா யிரமாய் நவிற்றுவரே.

என்றது, மகாமேரு பருவதத்துக்கு மேல்பால் இருக்கின்ற கந்தமாதனமும், மகாமேருவுக்குக் கீழ்பாலிருக்கிற மாலியவானும் இரண்டு மலையுந் தென்வடல் முப்பத்து நாலாயிர நீளம் யோசனையாயிருக்கும் என்றவாறு. (42)

(வேறு.)

101. விண்ணுரும்பொன் வரைசூழிள விருதம்பத்தி ராச்வம்
பண்ணுர்கேது மாலப்பெயர் பகர்கண்டங்கள் மூன்றுந்
தண்ணுர்கடல் வரைமூன்றினுட் சார்தென்வடல் விபுலம்
எண்ணுன்குட னிருவாயிரம் இயம்புந்தனித் தனியே.

என்றது, ஆகாசத்தையளாவிய மகாமேருவைச் சூழ்ந்த இளாவிருத கண்டந் தென்வடல் முப்பத்து நாலாயிரம் யோசனை. கீழ்மேல் முப்பத்து நாலாயிரம் யோசனை. இதன்மேல்பால், கந்தமாதன பருவதத்துக்கு மேற்கு, நிடதபருவதத்துக்கு வடக்கு, மேலைச் சமுத்திரத்துக்குக் கிழக்கு, கீழ்ச் சமுத்திரத்துக்கு மேற்கு, இதனுட் கேது மால் கண்டம் கீழ்மேல் முப்பத் தோராயிரம் யோசனை. தென்வடல் முப்பத்து நாலாயிரம் யோசனையாம் என்றவாறு. (43)

(வேறு.)

102. செம்பொன் மால்வரை வடதிசை நீலமுஞ் சுவேதங்
கொம்பு மூன்றிடை யரமிய மிரண்மயங் குருவும்
பம்பு கண்டத்தின் மானமுந் தனித்தனி பகரும்
ஒன்ப தாயிரம் யோசனை தென்வட லுகந்தே.

என்றது, செழுமை பொருந்திய மகாமேருவைச் சூழ்ந்த இளாவிருத கண்டத்துக்கு வடபாலில் கீழ்மேலிலக்கம் யோசனை நீளமுள்ள நீலபருவதத்துக்கு வடபா லரம்மியகண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் வடபால், கீழ்மேல் தொண்ணூறாயிரம் யோசனை நீளமுள்ள சுவேத பருவதத்துக்கு வடபால் இரண்மய கண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் வடபால், கீழ்மேல், எண்பதினாயிரம் யோசனை நீளமுள்ள சிருங்க பருவதத்துக்கு வடக்கு, வடக்குச் சமுத்திரத்துக்குத் தெற்கு குருகண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனையாம் என்றவாறு. (44)

103. நேரும் பொன்மலைத் தெற்குறு நிடதம்பொன் கூடம்
ஆரு மேயிம வரையிடை யிடையரி வருடம்
சேரு மானகிம் புருடமும் பரதந்தென் வடக்காய்ப்
பாரி னொன்பதி னாயிரம் யோசனை பகரும்.

என்றது, நேராகிய மகாமேருவைச் சூழ்ந்த இளாவிருத கண்டத்துக்குத் தென்பால், கீழ்மேலிலக்கம் யோசனை நீளமுள்ள நிடத பருவதத்துக்குத் தெற்கு அரிகண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் தென்பால், கீழ்மேல் தொண்ணூறாயிரம் யோசனை நீளமுள்ள ஏமகூட பருவதத்துக்குத் தெற்கு, கிம்புருட கண்டந் தென்வட லொன்பதினாயிரம் யோசனை. இதன் தென்பால், கீழ்மேல் எண்பதினாயிரம் யோசனை நீளமுள்ள, இமோற் பருவதத்துக்குத் தெற்கு, தெற்கு சமுத்திரத்துக்கு வடக்கு, பரதகண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனையாம் என்றவாறு. (45)

## நவகண்டப் பிரமாணம்.

(வேறு.)

104. பரதமொன்ப தினையம்ரண்டு கிம்புருட
மொன்பதுபொன் கூடம் ரெண்டு
அரியொன்ப தாநிடதம் ரெண்டிளா
விரதமுப்பா னூ மாகுந்
தருநீல மிரண்டுரம் மியமுமூன்று
சுவேத மிரண்டு சகத்ரமாகும்
இரண்மயமொன் பான்கொம்பு ரெண்டுகுரு
வொன்பதென வியம்ப லாமே.

என்றது, தென்சமுத்திரத்துக்கு வடக்கு பரதகண்டந் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் வடக்கு இமோற் பருவதந் தென்வடல் இரண்டாயிரம் யோசனை. கீழ்மேல் எண்பதினாயிரம் யோசனை. உன்னதம்

இரண்டாயிரம் யோசனை. இதன் வடக்கு கிம்புருட கண்டம், தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் வடக்கு ஏமகூட பருவதம் கீழ்மேல் தொண்ணூறாயிரம் யோசனை. உன்னதம் இரண்டாயிரம் யோசனை. தென்வடல் இரண்டாயிரம் யோசனை. இதன் வடக்கு அரிகண்டம் தென்வடல் அகலம் ஒன்பதினாயிரம் யோசனை. இதன் வடக்கு நிடத பருவதம் கீழ்மேல் லட்சம் யோசனை. உன்னதம் இரண்டாயிரம் யோசனை. தென்வடல் இரண்டாயிரம் யோசனை. இதன் வடக்கு இளாவிருத கண்டம் தென்வடல் முப்பத்து நாலாயிரம் யோசனை. இதன் வடக்கு நீலபருவதம் கீழ்மேல் லட்சம் யோசனை. உன்னதம் இரண்டாயிரம் யோசனை. தென் வடல் இரண்டாயிரம் யோசனை. இதன் வடக்கு சுவேதபருவதம் கீழ்மேல் ஒன்பதினாயிரம் யோசனை. உன்னதம் இரண்டாயிரம் யோசனை. தென் வடல் இரண்டாயிரம் யோசனை. இதன் வடக்கு குரு கண்டம் தென்வடல் ஒன்பதினாயிரம் யோசனை. ஆக, வடகடல் முதல் தென்கடல் வரைக்கும் லட்சம் யோசனையாம் என்றவாறு. (46)

## மனுவமிசம்.

(வேறு.)

105. மனுக்களிற் சுவயம்பு மனுவளித்த
பிரியவரதன் மக்க ளாமக்
கினித்துருவன் முதற்பதின்மர் தனில்மூவர்
கான்புகுதக் கிளர்த்து மேழ்பேர்
தனிற்பிலக்க முதலாறு தீவுமறு
பேர்க்களித்தான் சம்புத் தீவை
அனத்துருவன் மகவொன்பான் பேரமைத்த
நவகண்டத் தமரு வோர்க்கே.

என்றது, சுவயம்பு மனுவினுடைய புத்திரன் பிரியவிருதன், அக்கினித் துருவன் முதலான பத்துப் பிள்ளைகள் பெற்றான். அவருள் அக்கினி (1), மேதை (2), வாகு (3), இந்த மூன்று பேரும் தவசிகளாய்ப் போனார்கள் ; மற்றை யெழுவரும் மேருவைச் சூழ்ந்த பூமி முதல், சொர்னபூமி வரைக்கு மிருக்கிற பூமியை ஏழு பங்காகப் பண்ணி, முன்சொன்ன ஏழுபேரில் 2-வது புத்திரன் மேதாதிக்கு பிலக்கத் தீவும், மூன்றாவது, வபுஷ்மானாகிய வனுக்கு இலவந்தீவாகிய சன்மலித் தீவும், நான்காவது, ஜோதிஷ்மந்த னுக்கு குசத்தீவும், ஐந்தாவது, துதிமந்தனுக்குக் கிரவுஞ்சத் தீவும், ஆறாவது, அவ்வியனுக்குச் சாகத் தீவும், ஏழாவது, சவனனுக்குப் புட்கரத் தீவுமாகக் கொடுத்தான். நாபி முதல் ; முதலாவது புத்திரன் அக்கினித் துருவனுக்குச் சம்புத் தீவைக் கொடுத்தான். அந்த அக்கினித் துருவனுக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்குத் தான் ஆண்ட சம்புத் தீவை ஒன்பது பாகமாகச் செய்து, முதலாவது பிள்ளை நாபி நிற்க, இரண் டாவது புத்திரன்-கிம்புருடன்,* மூன்றாவது புத்திரன்-அரி, நான்காவது பத்திராசுவன், ஐந்தாவது இளாவிருதன், ஆறாவது கேதுமாலன், ஏழாவது

ரம்மியன், எட்டாவது இரண்மயன், ஒன்பதாவது குரு; இந்த ஒன்பது பேருக்கும், சம்புத் தீவை ஒன்பது பாகமாகச் செய்துகொடுத்தான். நாபியை யின்றி மற்ற எட்டுப் பேருக்கும் கொடுத்த பூமி, அவரவர்கள் பேரால்தானே அந்தந்தக் கண்டத்துக்குப் பேராயிற்று. முதலாவது பாகம் கனு—நாபி. அவன் புத்திரன் இடபன்; அவன் புத்திரன் பரதன்; அவன் முதலாவது கண்டத்தை யாண்டதனுலே பரதகண்டமென்று பேராயிற்று. அந்த நவகண்டத்தில் இருக்கிறவர்களுடைய நிறம், வயது, அவர்கள் போஜனம், அவர்கள் குலதெய்வம் ஆகிய இவ்வளவும், மேற்கவிதையிற் சொல்லுவோம் என்றவாறு. (47)

(வேறு.)

106. தாமரைப் பூநிற மூண்சம் புக்கனி
ஆமனந் தன்பதம் வழுத்து மாயுளோ
தோமறப் பதின்மூ வாயிரந் தொகுத்திடும்
காமரு வுமிளா விரத கண்டமே.

என்றது, சோலை சூழ்ந்திருக்கின்ற இளாவிரத கண்டத்தில் இருக்கின்ற பேர்கள் நிறம், தாமரைப்பூ; ஊணுகிய போஜனம்—சம்புக்கனி; வயது : பதின்மூன்றுயிரம், ; தெய்வம் அநந்தனும் என்றவாறு. (48)

107. வயது மயுத்ததோர் வணங்குந் தெய்வமோ
அயமு கத்துமா லசனங் குவளைப்பூ
உயரு மதியைப்போ லொளிரு மேனியோர்
பயிலும் விஞ்சையர் பத்தி ராசுவமே.

என்றது, பத்திராசுவ கண்டத்திலிருக்கின்றோர் தேகம், சந்திரனைப்போல, வெண்மையாகவிருக்கும். ஊணுகிய போசனம் நீலோற்பலம். அவர்களுக்கு வயது பதினோராயிரம். தெய்வம், அயக்கிரீவனை வணங்குவார்கள் என்றவாறு. (49)

108. அழிவில் வருக்கையூண் ஆம்பல் மேனியோர்க்
கிழிவி லாவய தீரைந் தாயிரங்
கழறுந் தெய்வமோ காம தேவனுங்
கெழுமி யார்தரு கேது மாலமே.

என்றது, கேதுமால கண்டத்தில் இருக்கின்றபேர்களுடைய நிறம், நீலோற்பலம் போல இருக்கும். ஊண், பலாக்கனி; வயது பதினுயிரம். இருப்பவர்கள் காமதேவனைத் தெய்வமாகப் பணிவார்கள் என்றவாறு. (50)

109. வெச்சென் மேனியோர் வெள்ளை யாகுமூண்
பச்சின் வடக்கனி பன்னீ ராயிரம்
நிச்சய வயதுளோர் நினைக்குந் தெய்வமோ
மச்சிய மூர்த்தியை வணங்குந் தெய்வமே.

என்றது, ரம்மிய கண்டத்தில் இருக்கிறவர்களுடைய தேகம் உஷ்ணித்து வெள்ளை நிறமாக இருக்கும். அவர்களுக்கு அசனம்; பசுமை பொருந்திச்

சிவப்பாய் இனிமையாயிருக்கிற ஆலங்கனியைப் புசித்துப் பன்னீராயிரம் வருஷம் இருப்பார்கள். மச்சமூர்த்தியைத் தெய்வமாக வணங்குவார்கள் என்றவாறு. (51)

110. கச்சப மூர்த்தியைக் கருதி யூணெனு
மிச்செனுங் கனிநிறம் விதுவே யயுதமும்
சொச்சமோ ராயிரம் சொல்லும் வயதுளோர்
இச்சையின் வணங்குவார் இரண்ம யத்திலே.

என்றது, இரண்மய கண்டத்தில் இருக்கிறபேர்கள் தேகஞ் சந்திரனைப்போல வெள்ளையாயிருப்பார்கள். எலுமிச்சங் கனியைப் புசித்துப் பதினோராயிரம் வயதிருப்பார்கள். ஆமையுருவெடுத்தவரை வணங்குவார்கள் என்றவாறு. (52)

111. உத்தர குருவினி லுறைகு வோருடல்
ஒத்திடு மரகதம் ஊணும் பல்கனி
பற்றிய வயதுமோர் பதின்மூ வாயிரம்
பெற்றவர் வணங்குவார் பெருவ ராகமே.

என்றது, வடபக்கமாயிருக்கிற, குரு கண்டத்தில் இருக்கிறவர்களுடைய தேகம் மரகதம்போல் பச்சையாயிருக்கும். பல கனிகளைப் புசித்துப் பதின் மூவாயிரம் வயதிருப்பார்கள். அவர்கள் வராக மூர்த்தியைப் பணிவார்கள் என்றவாறு. (53)

112. அரியின் வருடத்தோர்க் காயு ளயுதஞ்சந்
திரனை யொத்திடுந் தேக மூணிக்கு
விரத மாகுந் தயித்திய மன்னைவெல்
நரசிங் கந்தனை நவிற்று வாரரோ.

என்றது, அரிவருடத்திலிருக்கிற பேர்களுடைய தேகம் சந்திரனைப்போல வெண்மையாகவிருக்கும். கரும்பின் ரசத்தைப் புசித்து வயது பதினாயிர மிருப்பார்கள். அசுர ராசாவான இரணியனைச் சங்காரஞ் செய்த நரசிங்க மூர்த்தியைத் தெய்வமாக வணங்குவார்கள் என்றவாறு. (54)

113. கிம்புருட வருடத்திற் கேளத் திக்கினி
அன்புட னுகருவோர்க் காயு ளயுதமாம்
செம்பொனை நிகர்த்திடுந் தேகத் தோர்நிதம்
கும்பிடுந் தெய்வங்கா குத்த ராமனே.

என்றது, கிம்புருட வருடத்தில் இருக்கிறவர்களுடைய தேகம் சொர்ணச சாயையா யிருக்கும். பசுமை பொருந்திய அத்திக் கனியைக் கொண்டு புசிப்பார்கள். காகுஸ்த ராமனைத் தெய்வமாக வணங்குவார்கள் என்றவாறு. (55)

114 பாரத வருடத்திற் பலநி றங்களாய்
மாரியின் விளைந்திடும் வரகு நெல்முதல்
ஆருவ தூண்வய தற்ப மாநர
நாரண மூர்த்தியை நவிற்று வாரரோ.

என்றது, பரதகண்டத்தில் இருக்கிற ஜனங்களுடைய சரீரங்கள் பல நிறமாயிருக்கும். அவர்களுக்கு அசனம் மழையில் விளைவாகின்ற வரகு, நெல் முதல் பல்தானிய மருந்தி (அல்பங்) கொஞ்ச வயதாயிருந்து, நரநாராயணராகிய கிருஷ்ணமூர்த்தியைத் தெய்வமாக வணங்குவார்கள் என்றவாறு. (56)

(வேறு)

115. நளிரா ருததி யுடுத்தவனி
தனிலே நறவுண் மதுகரங்கள்
அளியார் திசைக்கு மலர்த்தடஞ்சூழ்
அலர்கோ டகிலுஞ் செண்பகமும்
வெளியா ரிமயத் தீசான
மீதி லிருக்குஞ் சடிலவரன்
களிகூர்ந் திமைய வரைமகளோ
டிருக்குங் கயிலைப் பொருப்பாகும்.

என்றது, குளிர்ச்சி பொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியின் கண்ணே மதுவை யுண்ணுநின்ற வண்டுகள் அன்போடுங்கூட கானஞ் செய்யாநின்ற மலர் பொருந்திய தடாகத்தைச் சூழ்ந்திருக்கின்ற, புட்பத்தோடுங்கூடிய கொம்புகளையுடைய, அகில் விருட்சங்களையுஞ் சண்பக விருட்சங்களையுமுடைய, ஆகாசமளாவி யிராநின்ற இமோற்பருவத்தினுடைய ஈசானியத்திலிருக்கும் சடாமகுடத்தையுடைய ஈசுவரரானவர் சந்தோஷித்து, இமோற்பருவதராசன் குமாரியாகிய பார்வதி சமேதராயிராநின்ற கயிலையங்கிரிக்கும் என்றவாறு. (57)

116. குடக்கி னேம முறுமிடபக்
குவடா மதற்கு நாப்பண்மிசை
அடுக்குஞ் சிகர நான்கதனில்
அமரு மிருதசஞ் சீவினி
விடுக்கும் விசல்லிய கரணியுடல்
விளங்குஞ் சவுவா ணியகரணி
யுடன்சந் தான கரணியுட
னுறையு மருத்து மாமலையே.

என்றது, முன்சொன்ன கயிலாசகிரிக்கு மேல் பாரிசத்தில் இருக்கின்ற பொன்னிறமான இடபகிரிக்கு மத்தியிலே யிருக்கும் மருத்துமாமலையின் நான்கு சிகரங்களில், ஒரு சிகரத்தில் மரணமாய்ப்போன சீவாத்துமாக்களைப் பிழைப்புண்டாக்குகின்ற அமிர்த சஞ்சீவினி—1; அஸ்த்ர சஸ்த்ரங்களாலே காயப்பட்ட ரணங்களை ஆற்றுநின்ற விசல்லிய கரணி—2; சஸ்திர ஆயுத

விசேஷங்களினாலே அறுபட்டுப் பிரத்யேகம் பிரத்யேகமாய்க் கிடக்கிற சரீரங்களை ஒன்றுபடுத்தி, முன் ரூபத்துக்கு அதிகமான காந்தியைக் கொடா நின்ற சவுவானிய கரணி—3, அபுத்திரர்களாக விருக்கிறபேர்களுக்குப் புத்திரனுண்டாகநின்ற சந்தான கரணி—4. இந்த நான்கு மருந்தும் இருக்கப்படாநின்ற நான்கு கொடுமுடியையுடைய மருத்துமாமலை என்ற வாறு. (58)

(வேறு.)

117\. பருதி யஞ்சுழலு மலையி னின்றுவட
பாலி னண்டமதி னணைவினுள்
புரிசை யுங்கனக மண்ட பங்கள்கோ
புரமி லங்குமந் திரமதன்
பெருகு நந்திகண முரக னும்புலி
பிதாம கன்சசி யெமன்றெழ
அரியெ னுந்தவசி னுமையொ டும்பவன
மரனி ருக்குமா கயிலையே.

என்றது, சந்திர சூரியர் பிரதட்சிணம் வாராநின்ற மகா மேருவுக்கு வட பாரிசத்தில் இருக்கிற அண்டச் சுவரினுள்ளான கோட்டையும், அதனுள்ளான சொர்னமயமான மண்டபங்கள், கோபுரங்கள் பிரகாசியாநின்ற அரண்மனையில் மிகுந்த நந்திகணங்களும், பதஞ்சலி வியாக்கிர பாதர், மற்ற ரிஷிகள், பிரமன், சந்திரன், எமன் மற்றைத் தேவர்களும் தோத்திரஞ்செய்யச் சிம்மாசனத்தில் உமாதேவியோடு கூடிப் பவழநிறம் போன்ற ஈசுவரன் இருக்கும் மகாகைலாசம் என்றவாறு. (59)

(வேறு.)

118\. ஏற்றமுள வனற்றுருவன் மகனாபி
னாபிமக னிடப னீன்ற
நூற்றுவரி லொன்பதுகா ணெண்பதொன்பான்
வேதியராய் நுவல்வார் பத்தின்
மூத்தமகன் பரதனுக்குக் கனிட்டரொன்பா
னேவல்செய முடியே சூடிப்
பார்த்திபனாய்ப் பரதகண்டத் தவனி முழு
தோர் குடைக்கீழ்ப் பாலித் தானே.

என்றது, சிரேட்டமான அக்கினித் துருவனுக்குப் பூருவசித்தியிடம் நாபி பிறந்தான். நாபிக்கு மேருதேவியிடத்தில் இடபன் பிறந்தான். இடபன் இந்திரன் மகள் சயந்தியிடத்தில் கூடிப் பரதன் முதலான நூறு பிள்ளைகளைப் பெற்றான். அவர்களில் ஒன்பதுபேர் தவசிகளாய்ப் போனார்கள். எண்பத்தொரு பேர்கள் வேதியர்களாகப் போனார்கள். மற்றைப் பத்து பேரில் மூத்த புத்திரனாகிய பரதன், கனிஷ்டராகிய ஒன்பது பேர்களுடனே தன் பேருடைய பரத கண்டத்தை ஏகசத்திராதிபதியாகச் சனங்களை ரட்சித்தான் என்றவாறு. (60)

119\. இறைபரதன் பெறுசுதர்க ளிருநான்கு
குமரியொன்று மிவர்க ளுமஞ்
செறிவருண னிந்திரன்காந் தருவனு
கனன்சேட்டு மன்ச வுமிய
னுறுகபத்தி மான்றாமிர னெண்சகஸ்திர
முறுங்குமரி யொன்பான் பங்கின்
குறைவருசி லாநதித்தென் பாற்றிசையின்
றலநதிகள் கூறு மன்றே.

என்றது, முன்சொன்ன பரதமகாராசன் விசுவரூபன் புத்திரியான பாஞ்ச சன்னியை விவாகம் பண்ணி, அவளிடத்தில் எட்டுப் பிள்ளையும் ஒரு பெண் ணையும் பெற்றான். அவர்களுடைய நாமதேயம், பெருமையையுடைய வருணன் 1, இந்திரன் 2, காந்தருவன் 3, நாகன் 4, நலம் பொருந் திய சேட்டுமன் 5, சவுமியன் 6, கபஸ்திமான் 7, தாம்பிரன் 8, குமரி 9. இதில் பரதகண்டம் ஒன்பதினாயிரம் யோசனை. தென் வடலில், எட்டுப் பிள்ளை களுக்கும் எண்ணாயிரங் கொடுத்தான். குமரியாகிய பகவதிக்குத் தென்திசை யில் ஆயிரம் யோசனையைக் கொடுத்தான். அந்தக் குமரிக் கண்டத்தில் சிலா நதிக்குத் தெற்கிலிருக்கிற பூமியில் உள்ள தல நதிகளைக் கூறுவாம் என்றவாறு. (61)

120\. அருநிமைத்த லீரொன்ப தாங்காட்டை
யக்காட்டை யையாறு கொண்டால்
உரியகலை யஃது முப்பதோர்
முகூர்த்த மெண்மூன் றோர்நாள்
வரின்முப்ப தோர்திங்க ளஃதாறு
வோரயனம் பன்னி ரண்டு
பொருதியொரு வருடமென நூறுகு
நரற்காயுள் புகலு மன்றே.

என்றது, மானிடர்க்கு வயதுப் பிரமாணம் கூறுதல். அருநிமைத்தல் என் றது கண்மூடி விழித்தல், 18 கொண்டது காட்டை; காட்டை முப்பது கொண்டது கலை. கலை முப்பது கொண்டது முகூர்த்தம். முகூர்த்தம் இரு பத்து நான்கு கொண்டது ஒரு நாள்; நாள் முப்பது கொண்டது ஒரு மாதம்; மாதம் ஆறு கொண்டது ஒரு அயனம். அயனமிரண்டு கொண்டது ஒரு வருஷம்; வருஷம் நூறு கொண்டது மனிதர்களுக்கு ஆயுளாம் என்றவாறு. (62)

121\. பரதகண்ட மானிடர்க்கு வாயுள்சதம்
சதமல்ல பாதி யல்போம்
துரிதமுறு மூப்பிளமை முப்பதுபோ
மிருபதினிற் றுயில்நோய் சோம்பற்
பெரிததினுஞ் சிலர்தெளிந்து தேசிகர்சொல்
லுபதேசம் பெற்று நாளுஞ்
சரியைகிரியை யோகத்தால் ஞானத்தால்
வீடடைவர் தாமே திண்ணம்.

என்றது, பரத கண்டத்தில் இருக்கின்ற மனிதர்களுக்கு வயது நூறு. அது நிச்சயமன்று. அந்த நூறு வயதிற் பாதி இராத்திரி போம்; மிச்சம் ஐம்பது வயதில் மூப்பிளமை முப்பது போம். மீதம் இருபது நித்திரை சோம்பல் பெரிதாயிருக்கும். அதனுள், சில புத்திமான் தெளிந்து, குருவினுடைய உபதேசம் பெற்றுச் சரியை கிரியை யோகத்திலே ஞான மார்க்கங்களை யறிந்து, மோட்சம் அடைவார்கள் என்றவாறு. (63)

(வேறு.)

122. நறவுகொப் பளிக்கு முல்லையந் தாம
நாரணன் சிறுமக வாகிக்
கறைகெழு வேற்கைப் பலிமக மாற்றக்
கண்டுமண் ணிரந்தொரு காலை
யுறவுல கூன்றி மீமிசை யொருகால்
சாற்றிட முகடிருந் தொழுகி
யறைதிரைப் புனலைக் கங்கையென் றெவரு
மாற்றிட விதியுல கடைந்து;

என்றது, தேன் பெருகாநின்ற துளசிமாலையையுடைய நாராயணமூர்த்தி வாமனவதாரஞ் செய்து, சத்துருக்களைச் சம்மாரஞ் செய்து, இரத்தம் பூசாநின்ற ஆயுதத்தையுடைய மகாபலிச்சக்கரவர்த்தி யாகஞ் செய்கையில் மூன்றடி மண் இரந்து, உடனே விராட்டு சொரூபமாகிப் பூமி ஒரு அடியும் ஆகாசம் ஒரு அடியுமாக அளக்கையில் சுவாமியினுடைய பெருவிரல் அண்ட கடாகத்தில் பட்டு, அண்ட கடாகத்திலிருந்து ஒழுகிய திரைகளோடு கூடி வாராநின்ற புனல் கங்கையென்று யாவருஞ் சொல்லப் பிரம லோகத்தை யடைந்தது என்றவாறு. (64)

123. கதிர்க்குலத் தொருவ னருந்தவம் புரியக்
கண்டுளங் கசிந்துபி னெழுந்து
மதிச்சடை யமலன் றலைமிசைப் புகுந்து
வானுல கடைந்துபின் றுருவன்
பதிப்புலத் தடைந்து வடகரை முகட்டிற்
படிந்தெழு வகையெனப் பிரிந்து
குதித்திடு சுசகு சீதையுஞ் சிந்து
குடதிசை யுததியிற் சேரும்.

என்றது, சூரிய குலத்துதித்த பகீரத மகாராசாவானவன் சகரர்களைக் கரையேற்றும் பொருட்டாகக் கங்கையை நோக்கித் தவஞ் செய்ய, அதுகண்டு கங்கை சந்தோஷித்து, அந்தப் பிரமலோகத்தை விட்டுச் சந்திரசூடராகிய ஈசுவரனுடைய சடாமகுடத்திற் புகுந்து, அப்பால் தேவலோகத்தில் வந்து, அப்பால் துருவ மண்டலத்தில் வந்து, அப்பால் மகா மேருவில் விழுந்து, ஏழு வகையாகப் பிரிந்து, அது, சுசகு, சீதை, சிந்து என்று சொல்லாநின்ற மூன்று நதிகளும் மேல்கடலிற்போய் சேர்ந்தன என்றவாறு. (65)

124. நளினி பாவனி சிலாதனி மூன்று
நண்ணிடுங் குணதிசைக் கடலுட்
டெளிபுன லளகை நந்தையென் றொருத்தி
தென்திசை நோக்கிமெய் வருந்திக்
களிகொளுந் தவப்ப கீரதன் பின்செலக்
கனைகடற் றிரையெனப் பொங்கி
யளியுழும் பதுமங் குமுதமுஞ் செறியு
மறைதிரைப் புனலுறு தண்ணீர்.

என்றது, நளினி பாவினி சிலாதனி யென்று மூன்று பேருங் கீழ்ச்சமுத்தி ரத்தைச் சேர்ந்து, மீதம் அளகையென் றொருத்தி தென்திசையை நோக்கித் தவஞ் செய்யாநின்ற பகீரதமகாராசா பின்னுடனே சென்று, ஒலியா நின்ற கடல்போலப் பொங்கி வண்டுகள் 'உழுது சப்தியாநின்ற தாமரை மலரும் நீலோற்பலமும் நெருங்கிய தெளியாநின்ற புனல் ரூபமான கங்கை என்றவாறு. (66)

125. பொன்னியா யமுனை துங்கபத் திரையும்
பொருனையுங் கோமதி சரயூ
கன்னதி பம்பை கவுசிகை வேத்திரை
கவுரிசித் ராநதி வைகை
துன்னிய கோதா விரிசந்திர பாகை
சோணைபத் திரைகிருத மாலை
இந்நதி முதலாய்ப் பாரத வருடத்
திருக்குமைஞ் ஞூறென்னு நதியும்.

என்றது, நதிகளுடைய நாமதேயம் : காவேரி, யமுனை, துங்கபத்திரை முத லான ஐஞ்ஞூறு நதிகளும் பாரதவருடத்தி னல்லது வேறொரு கண்டத்தில் இல்லை என்றவாறு. (67)

126. காசியு மருணை சலங்கழுக் குன்றங்
காளத்தி சுழிகைநெல் வேலி
மாசிலா விருத்தா சலம்புலி யூரு
மதுரைதென் காஞ்சிகுற் றாலம்
தேசுறு காஞ்சி பூவண மருதூர்
திருப்பரங் குன்றமே டகம்ரா
மேசுர முதலா வாயிரத் தெண்சி
வாலய மேதினி சிறக்கும்.

என்றது, இக்கவியில் (கூறிய காசி) முதலான சிவதலங்கள் பாரதவருடத் தில் அல்லாது வேறொரு கண்டத்தில் இல்லை என்றவாறு. (68)

## திருப்பதி முதலாவுள்ளன.

127. வேங்கடந் தோதாத் திரிசக ளுதம்
மிக்கபுல் லாணியுங் குருகூர்
பாங்குறு மாளூர் திருமெய்யங் கோட்டி
பகரும கோபில முதலா
வோங்கிய நூற்றெண் திருப்பதி யுளவா
முயருமகேந்திரம் பொதிகை
கோங்கமர் சோலே மலைதிரி கூடம்
கொல்லியம் வரைமுதன் மிகவே.

என்றது, வேங்கட முதலாகவுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளும் உயர்ச்சியான மகேந்திரம், பொதிகைமலை இவை முதலாகிய சிலாக்யெமானவை பாரத வருஷத்தில் அல்லது வேறொரு கண்டத்தில் இல்லை என்றவாறு. (69)

(வேறு).

128. சாத்திரமா றுபவேத நான்குசைவம்
பன்னுறு சாற்றுந் தீட்சை
போற்றுபன்னி ரண்டுமண மெட்டாகுஞ்
சண்மதமும் புகலுந் தேசம்
ஏற்றமைம்பத் தாறுடனே சமயமோ
பனிரண்டு மியம்பு மைந்தாங்
கோத்திரைமின் பரதகண்டத் தல்லாது
மற்றென்றில் கூறு மோசொல்.

என்றது, சாத்திரம் ஆறு ஆவன:—வியாகரணம்—1, தர்க்கம்–2, மீமாஞ்சை —3, மனுநீதி—4, சோதிடம்—5, வைத்தியம்—6, ஆக ஆறு. உப வேத நாலாவன :—விப்பிரர்க்கு ஆயுள்வேதம்; சத்திரியர்க்கு தனுர்வேதம்; வைசியர்க்கு அர்த்த வேதம்; சூத்திரர்க்குக் காந்தருவ வேதம்; ஆக உபவேதம்—4.

சைவமாவன.—ஊர்த்துவசைவம்—1; ஆதிசைவம்—2; அந்தர சைவம்—3, மகாசைவம்—4, சுத்தசைவம்—5, சதுர்த்த பாத சைவம்—6, அனுச்சைவம்—7, கிரியாசைவம்—8, குணசைவம்—9, அபேதசைவம்—10, பேதசைவம்—11, நிர்க்குணசைவம்—12, யோகசைவம்—13, ஞான சைவம்—14, அத்துவாசைவம்—15, அந்தரசைவம்—16, ஆகப் பதினாறு. தீட்சையாவன.—சமயதீட்சை—1, விசேஷதீட்சை—2, நிருவாணதீட்சை—3, நயனதீட்சை—4, பரிசதீட்சை—5, வாகுதீட்சை—6, மானததீட்சை—7, யோகதீட்சை—8, அ....த்தரியதீட்சை—9, சபிசதீட்சை—10, நிர்ப்பிச தீட்சை—11, சாஸ்திரதீட்சை—12; ஆக தீட்சை 12.

மணம் எட்டாவன.—ஒருவன் தன்னுடைய கன்னிகையை அலங்கரித்துத் தூய பிரமசாரிக்குக் கொடுப்பது பிரம விவாகம் (1). சொந்தமென்றும் வல்லாயமென்றும் பெண்ணைக் கொடுப்பது பிராசாபத்திய விவாகம் (2). இரண்டு பசு வாங்கிக்கொண்டு பெண்ணைக் கொடுப்பது முனி விவாகம் (3). யாக தட்சிணைக்காகப் பெண் கொடுப்பது தெய்வ விவாஹம் (4). மிருந்த

பொருள் வாங்கிப் பெண் கொடுப்பது **அசுர** விவாஹம் (5). பெண்ணும் ஆணும் இச்சையாய்க் கொடுப்பது **காந்தருவ** விவாஹம் (6). பலாத்கார மாய்ப் பெண்ணை எடுத்துக்கொண்டு போய் விவாஹஞ் செய்வது **ராட்சத** விவாஹம் (7). பெண்ணை நித்திரையில் எடுத்துக்கொண்டு போய் விவாகம் செய்வது **பைசாச** விவாஹம் (8). **ஆக—8.**

**சண்மதமாவன.**—வாயுமதம்—(1), சிவமதம்—(2), விஷ்ணுமதம்—(3), சாகமதம்—(4), கணபதிமதம்—(5), பானுமதம்—(6), **ஆக—6.**

**தேசமாவன,**—கோசலை, விசாலை, கலியாணி, சோழ தேசம், பாண்டிய தேசம் முதலானவை—56.

**உட்சமயமாவன.**—வயிரவம், வாமம், சைவம், மகாவிரதம், காளா முகம், பாசுபதம் **ஆக—6.**

**புறச்சமயமாவன.**—பாஞ்சராத்திரம், லோகாயதம், புத்தம், பாட்டா சாரியம், மீமாஞ்சை, சமணமதம் **ஆக—6.**

**ஐந்து நிலமாவன.**—மலைச்சார்பு நிலம்—குறிஞ்சி, காடுசார் நிலம்—முல்லை, நாடுசார் நிலம்—மருதம், வேனல்சார் நிலம்—பாலை, கடல்சார்பு நிலம்—நெய்தல், **ஆக நிலம்—5.** இவ்வளவும் பரத கண்டத்தல்லாது வேறொரு கண்டத்தில் இல்லை என்றவாறு. (70)

129. அலைகடல்சூழ் புவியினவ கண்டமதி
னெண்கண்டத் தமர்ந்து விண்ணுர்ந்
திலகுமணிப் பூணணிந்து அரம்பையர்கள்
போகமுற்று மிருப்போ ரெல்லாம்
உலகியற்கை கருமத்தான் ஞானத்தால்
வீடடைய வுளத்திற் புண்ணிய
தலம்நதிபி ரமாலயங்க ளுறுபரத
கண்டமதிற் சனிக்க வெண்ணும்.

என்றது, அலையையுடையதான சமுத்திரஞ் சூழ்ந்த பூமியிலிருக்கின்ற நவ கண்டத்திலே பரதகண்டம் நீங்கலாக மற்றை யெட்டுக் கண்டத்திலும் இருப் பவர்கள் எல்லோரும் தேவலோகத்திற் சென்று பிரகாசியாநின்ற ஆபரணங்களையுடைய தேவஸ்திரீகள் போக முற்றும் இருப்பவர் யாவரும் பூலோகத்தின் கண்ணேயிருக்கின்ற காமத்தினாலேயும் ஞானங்களினாலேயும் மோட்சத்தை யடைவதற்கு மனத்தில் நினைத்து, புண்ணிய ஸ்தலங்கள், விசேஷமான நதிகள், பிரமாலயங்கள் ஆகியவற்றையுடைய பரத கண்டத் திலே சனித்து, மோட்சத்தை யடையவேணும் என்று தியானிப்பார்கள் என்றவாறு. (71)

**இரண்டாவது**

**நவகண்ட முரைத்த வத்தியாய முற்றும்.**

## மூன்றாவது

## எழுகடலறுதீ வுரைத்த வத்தியாயம்.

130. பாருறு நவகண்டப் பரப்புங் கதிர்சுழல்
மேருவின் கணிதமும் விண்டன மேழு
வாரியு மதனுறு தீவு மன்னவர்
பேருமுட் சுற்றுமேற் பேசு வாமரோ.

என்றது, பாருறு சமுத்திரஞ் சூழ்ந்த பூமியின் கண்ணே இருக்கின்ற நவ கண்டத்தினுடைய பிரமாணமுஞ் சொன்னோம். இனிமேலாக, சப்த சமுத்திரமும் அதன் மத்தியிலிருக்கிற ஆறு தீவுகளும், அவற்றினுள் இருக்கின்ற ராசாக்கள், மலைகள், தீவுகள், நதிகள் மற்றுமுண்டாகியவற்றைச் சொல்லுவோம் என்றவாறு. (1)

(வேறு.)

131. மேரு நடுவாய்ப் புவியந்தம்
விளம்பய் யயுத மாம்வடவை
சாரு முவரிக் கடல்மீது
சசிம ணாளன் முன்னாளின்
வீர மலையின் சிறகரிய
வெகுண்டீ ராறு மலைபோந்து
சேரப் பவன னுதவியினாற்
றுயர்தீர்ந் தெழுந்து கடல்மீதே ;

என்றது, மகாமேரு பருவத முதல், தெற்கு பூமி யந்தம் வரைக்கும் ஐம்பதினாயிரம் யோசனை. அப்பால் பூமியைச் சூழ்ந்து வடவாமுகாக்கினி யிரா நின்ற உப்புக் கடலில் இந்திராணியினுடைய கணவனாகிய தேவேந்திரன் முன்னாளில் மலைகளைச் சிறகரியும் பொழுது அவற்றுட் சில மலைகள் பயந்து, வாயு பகவானுடைய சகாயத்தினாலே உயரவெழும்பிச் சமுத்திரத்தில்; (என்றவாறு). (2)

132. குணக்கின் தூம கிரிதுந்துமிக்
குவடு விடப கிரிமூன்றும்
பிணக்கும் பாசக ரன்றிசைலப்
பெருவ ராக மைநாகம்
அணைக்குஞ் சகத்ர கிரிமூன்று
மாறுங் குடபா லசோககிரி
பணைக்கு நந்த னக்குவடு
பருவ லாக கிரிமூன்றும்.

என்றது, கீழ்ச் சமுத்திரத்தில் தூமகிரி, துந்துமிகிரி, இடபகிரி இந்த மூன்றுஞ் சேர்ந்தன. வராககிரி, மைநாகம், சகத்திரகிரி இந்த மூன்றுந் தெற்குச் சமுத்திரம் சேர்ந்தன. அசோககிரி, நந்தனகிரி, வலாககிரி, இந்த மூன்றும் மேல் சமுத்திரஞ் சேர்ந்தன. (3)

133. வாரி வடக்கிற் சந்திரகிரி
துரோணங் கங்கை கிரிவடவை
சாருங் கடல்நீ ருறுமிலக்க்ந்
தான்சூ ழிலக்க மொன்பதுதென்
சேரு முததி சூழ்பிலக்கத்
தீவு மிலக்க மிரண்டாக
வாரு மசியிற் சோமகிரி
அமுத சந்த்ர கிரிதுந்துமி.

என்றது, சந்திரகிரி, துரோணகிரி, கங்கைகிரி இந்த மூன்று மலையும்வட சமுத்திரத்திற் சேர்ந்தன. அவற்றில் கங்கைகிரி மேல் இருக்கின்ற வடவா முகாக்கினியானது, பூலோகத்தில் இருக்கின்ற அளவற்ற நதிகள் பிரவாகிக் கின்ற சலத்திலே சமுத்திரம் மீறுமல் அந்தக் கடல்நீரைப் பானம் பண்ணிக் கொண்டிருக்கும். அந்தக் கடல் லட்சம் யோசனே. சுற்றளவு ஒன்பது லட்சம். அதனைச் சூழ்ந்த பிலக்கத் தீவு இரண்டு லட்சம். அந்தத் தீவில் சோமகிரி அமுத மூறப்படாநின்ற சந்திரகிரி துந்துமி இருக்கின்றன என்ற வாறு. (4)

(வேறு.)

134. நகமேழ்நா ரதக்குவடு சுமனகிரி
வைப்பிராச நகங்கோ மேதகஞ்
சுகைசிலம்பை கங்கைசிகா வமுதைவிபா
வைநதியுஞ் சுகிர்தை யேழார்
மகிபதிமே தாதிபெறு சாந்தபயன்
சிவன்றுருவன் மாலாங் கேமன்
பகருசுகோ தயனனந்தன் சிசிரனுக்கு
ஏழ்கூறுய்ப் பரிக்கும் பாரோ.

என்றது, முற்கவியிற் சொன்ன மூன்று மலையுடனே நாரதாத்திரி, சுமன கிரி, வைப்பிராசம், கோமேதகம் என்ற ஏழு மலையிலும் உற்பத்தியான சுகை நதி, சிலம்பை, கங்கை, சிகா நதி, அமுதை, விபாவை, சுகிர்தை யென்று சொல்லாநின்ற ஏழு நதியையுடைய பிலட்சத் தீவுக்கு ராசாவாகிய மேதாதி, அவன் பிள்ளை சாந்தன், அபயன், சிவன், துருவன், பெருமையை யுடைய கேமன், சுகோதயன், அனந்தன், சிசிரன் என்று சொல்லப்பட்ட ஏழு பிள்ளைகளுக்கு அந்தத் தீவை ஏழு பங்காகப் பிரித்துக் கொடுத்தான் என்றவாறு. (5)

135. இதவிக்கு ரதமருந்தி யைந்துசகத்
திரவருட மிருப்போர் தேயம்
ரதிபிரம ணத்தீவின் மறையோர்கள்
ஆரியர்மன் காண்கு ரார்ர்
விதச்சுவராம் வணிகர்பின்னோர் பவவியாரம்
பொற்பாறை மேவு மத்தி
அதனுயர நவ்வலொப்பா மிதனடியி
லுல்வாய்மூன் றக்கத் தோடு.

என்றது, அந்தத் தீவில் இருக்கின்றவர்களுடைய ஊண் கருப்பஞ்சாறு ; அவர்கள் ஐயாயிரம் வருஷமிருப்பார்கள். அவர்கள் வணங்குந் தெய்வம் சூரியனும் பிரமாவுமாம். அந்தத் தீவிலிருக்கின்ற மறையோர்களுக்குப் பிரதிநாமம் ஆரியரென்றும், க்ஷத்திரியருக்குக் குராரரென்றும், வைசியருக்கு விதச்சுவரென்றும், சூத்திரர்க்குப் பவவியரென்றும் பேராம். அந்தத் தீவில் ஒரு பொற்பாறையுண்டு. அதன் மேலிருக்கின்ற அத்திமரத்தின் உயரம் ஆயிரத்தொருநூறு யோசனை ; அதன் கொப்பு நூறு யோசனையாம். அதனடியில் மூன்றக்கத்துடனே ; (6)

136. பதினொருகை யிருபதமோர் கொம்புறுவி
நாயகனைப் பணியும் பாரின்
அதனுடைய சுற்றளவு மிருபத்தோ
ரிலக்கமதா யாற்றும் பார்மேல்
சுதையிக்குக் கடலிரண்டு லக்கமதாஞ்
சுற்றளவோ சொல்லு மான
மிதமுறமுப் பத்துமூன் றிலக்கமேல்
நான்கிலக்க மிலவுத் தீவின் ;

என்றது, பதினொருகையு மொருகொம்பு மிரண்டு பாதமுமுடைய விநாயகனிருப்பான். அந்தத் தீவின் சுற்றளவு இருபத்தொரு லட்சம் யோசனை. அதனைச் சூழ்ந்த இக்கு ரசக் கடல் இரண்டு லட்சம். அதன் சுற்றளவு முப்பத்து மூன்று லட்சமாம். அதனைச் சூழ்ந்துள்ளது இலவுத் தீவு என்றவாறு. (7)

137. புடவியின்வ லாக஗ிரி கங்கைகிரி
யுயர்கிரியும் புகழ்து ரோணம்
அடர்குமுத கிரிமயிடங் கருத்மகிரி
யேழாகு மலையார் தோயை
யுடனிவிர்த்தி யிந்திரைவி மோசனிசு
வேதைகிருஷ்ணை யூர்நி வர்த்தை
யிடமுறுபார் தனக்கரசன் வபுட்டுவமா
னவன்புதல்வ னியம்புஞ் சுவேதன்.

என்றது, அந்த இலவந்தீவு நாலிலக்கம். அதனுள் வலாக஗ிரி, கங்கைகிரி, உயர்கிரி, துரோணகிரி, குமுதகிரி, மயிடகிரி, கருத்துமகிரி [என்ற] ஏழு மலைகளையும், அவற்றினின்று பிரவாகமாய் வருகின்ற தோயை, நிவிர்த்தி, இந்திரை, விமோசனி, சுவேதை, கிருஷ்ணை, நிவர்த்தை என்னும் ஏழு நதிகளையுமுடைய தீவுக்கு ராசா வபுட்டுவமான் ; அவனுக்கு ஏழு பிள்ளைகள் சுவேதன் முதலானவர் என்றவாறு. (8)

138. அரிதனுலோ கிதன்விதுதன் சுப்பிரமன்
 மானதன் பின்னுஞ் சிமுதன்
பரவும்பா ரதனையெழு கூறுக்கிப்
 பாலிக்குந் தீவிற் பார்ப்பார்
தருகபிலர் வேந்தருணர் வணிகரும்பீ
 தருங்கிருஷ்ணர் தாமே பின்னோர்
உரையிவர்கட் கசனமது வாணுளை
 யாயிரத்தோர்க் குரிய தெய்வம்.

என்றது, ஏழுபேருடைய பேர் முன்சொன்ன சுவேதன், அரிதன், உலோகிதன், விதுதன், சுப்பிரபன், மானதன், சீமுதன். இந்த ஏழு பிள்ளைகளுக்கு அந்தத் தீவை ஏழு பங்கிட்டுக் கொடுத்தான். அந்தத் தீவிலிருக்கின்ற மறையோருக்குக் கபிலரென்றும், க்ஷத்திரியருக்கு அருணரென்றும், வணிகருக்குப் பீதகரென்றும், சூத்திரருக்குக் கிருஷ்ணரென்றுஞ் சொல்லுவார்கள். இவர்கட்கு அசனம், மது, மத்தியம். அவர்களுக்கு வயது ஐயாயிரம். வாயுபகவான் தெய்வம் என்றவாறு. (9)

139. செறிபவன ஞுஞ்சுற்றைம் பத்தேழா
 யிலக்கமது சிந்து நான்கு
பெறுமிலக்கஞ் சுற்றளவோ வெண்பத்தொன்
 றேயிலக்கம் பேசு மேலே
வுறுகுசத்தீ வுக்கிலக்க மெட்டாகும்
 பாரி னுயர்பிர வாளம்
நிறைபொன்மலை துதிமான்புட் பாவருத்த
 மெனுங்கிரியு நெடியோன் குன்றும்.

என்றது வாயு: அதன் சுற்றளவு ஐம்பத்தேழாயிரம். அதைச் சூழ்ந்த மதுக்கடல் நான்கு லக்கம். அதன் சுற்றளவு எண்பத்தொரு லக்கமாம். அதைச் சூழ்ந்த குசத்தீவு எட்டிலக்கம். பூமியில் இருக்கின்ற உயர்ந்த பவழமலை, பொன்மலை, துதிமான், புட்பாவிருத்தம், நெடியமலை என்றவாறு. (10)

140. குவடெனுங்கு சேசயமிந் திரம்வெற்பேழ்
 பாவகரை கோதில் பூர்ணை
பவித்திரைசி வாதூதர் பாபவிமா
 வித்துதம்பை படியும் பா......கோ
நுவல்சோதிட் டுமந்தன்சேய் திரிதியுற்பி
 தனிலம்ப னுண்வேய் மானுஞ்
சுவைவரதன் சுபாகரன்க பிலனெனுமேழ்
 பேர்க்கரசைத் தொகுத்தீந் தானே.

என்றது, குசேசயம் இந்திரம் என்னும் ஏழு மலைகளில் உற்பத்தியான நதி பாவகரை, குற்றமில்லாத பூரணை, பவித்திரை, சிவாதூதர், பாபவிமா, வித்துதம்பை....இந்த ஏழு நதிகளுடைய பூமிக்கு ராசா ஜோதிஷ்மந்தன் ;

அவன் பிள்ளையான திரிதி, உற்பிதன், இலம்பன், வேய்மான், சுவர்னன், சுவர்க்கன், கபிலனென்னும் ஏழுபேர்களுக்கு அத்தீவை ஏழு பங்காகப் பிரித்துக் கொடுத்தான் என்றவாறு. (11)

141. மறையவர்க்குத் தமியரென்று மன்னவர்க்குச்
சுட்டுமியர் வணிகர் நேசர்
உறுசதுர்த்தர் மந்தேகாள் முதலெவர்க்கு
மூணெய்யா வுறைவா ணோ
நிறையுமையா யிரம்வருடஞ் சிகிதெய்வம்
நவ்வலொப்பாய் நிற்கும் பொன்போல்
செறிதீவின் சுற்றிலக்க நூற்றிருபத்
தொன்பதெனச் செப்பு மேலே.

என்றது, பிராமணருக்குத் தமியரென்றும், சத்திரியருக்குச் சுட்டுமர், வைசியருக்கு நேசர், சூத்திரர்க்கு மந்தே[கர்] (காள்). மற்றெவருக்கும் ஊண் நெய்யாம். அவர்கள் வயது நாற்பத்தைந்தாயிரம் இருப்பார்கள். தெய்வம் அக்கினி பகவான். அந்தப் பொன்னிறமான குசையினுடைய உயரம் ஆயிரத்திருநூறு யோசனை. அதனுடைய இலை நூறு யோசனை நீளமாயிருக்கும். அந்தத் தீவினுடைய சுற்றளவு கோடியே யிருபத் தொன்பது லட்சம் என்றவாறு. (12)

142. ஆச்சியச்சிந் தெட்டிலக்கஞ் சுற்றுநூற்
றெழுபத்தே ழாமி லக்கம்
பூச்செறிகா வுறுகிரவுஞ்சத் தீவுபதி
ஞறிலக்கப் புடவி தன்னில்
வாய்த்ததொரு துந்துமியு மருத்தகா
ரகம்பதும வரைகி ரவுஞ்சம்
காச்செறிதி வாவிருக்கும் ரத்னகிரி
வாமனமேழ் காண்ம ஞேசை.

என்றது, முன்சொன்ன நெய்க்கடல் எட்டு லட்சம். அதன் சுற்றளவு கோடியே நூற்றெழுபத் தேழு லட்சமாம்; அக் கடலைச் சூழ்ந்த புட்பங்கள் நிறைந்திருக்கின்ற சோலையையுடைய கிரவுஞ்ச மலை, சோலை நெருங்கிய திவாவிருக்கும் மலை ரத்தினகிரி, வாமனகிரியில் உற்பத்தியான மஞேச நதி என்றவாறு. (13)

143. சுரக்குமிராத் திரைகவுரி சந்தியா
குமுதவதி பதுமை கியாதை
இருக்குநதி யேழுறுபார் மன்றுதிமந்
தன்சேயா மெனுமு னீந்திரன்
கரக்குசல னுகரனுட் டனனந்த
காரகன்பீ வரனேழ் துந்துமி
பரிக்கும்பார் சுருதியர்புட் கலர்மன்புட்
கரன்வைசியர் பண்பு தன்னியர்.

என்றது, பெருகாநின்ற இராத்திரை நதி, கவுரி நதி, சந்தியான நதி, குமுத்துவதி, பதுமை, கியாதை என்று ஏழு நதிகளையுடைய தீவுக்கு ராசா துதிமந்தன்; அவன் பிள்ளைகள் முனீந்திரன், கரக்குசலன், அனுகரன், உஷ்ணன், அந்தகாரகன், பீவரன், துந்துமி என்னும் ஏழுபேருக்கும் ஏழு பங்காகப் பிரித்துக் கொடுத்தான். அந்தப் பூமியிலிருக்கிற வேதியருக்குப் புட்கலரென்றும், க்ஷத்திரியருக்குப் புட்கரன் என்றும், வைசியருக்குத் தன்னியர் என்றும் பேர் என்றவாறு. (14)

144. பயில்பின்னோர்க் கேததீசி யோரவர்க்கு
ஊண்டதியாம் பகர்வா ணுளோ
வயதையா யிரம்வருடத் தோர்தெய்வ
முருத்திரனம் மகியின் சுற்றை
இயலிலக்க மாயிருநூற் றெழுபத்து
மூன்றெனவே யியம்பு மேலே
தயிர்க்கடல்பன் னூறுலக்க சுற்றுமுன்னூற்
றறுபத்தொன் பதுதான் மேலே.

என்றது, சூத்திரர்க்குத் ததீசியரென்று பேர். அத்தீவிலிருக்கின்ற பேர்களுக்கு அசனம் தயிர். அவர்களுக்கு வயது ஐயாயிரம். அவர்களுக்குத் தெய்வம் ஈசுவரன். அத்தீவின் சுற்றளவு இரண்டு கோடியே எழுபத்து மூன்று லட்சம். அந்தத் தீவைச் சுற்றிய தயிர்க்கடல் பதினாறு லட்சம். அதன் சுற்றளவு மூன்று கோடியே அறுபத்தொரு லட்சம் என்றவாறு. (15)

145. உலவுமெண்ணான் கிலக்கச்சா கத்தீவி
னுறுரம்மிய முதையஞ் சிங்கஞ்
சலதரம்போ கிரியிரே பதமம்பை
கிரிக்குவடு செறியு மேழாம்
அலகினுறு பாவகரை புண்ணியையேர்
குமரியும்வே யாறும் பங்கி
இலகுசுகு மாரிந ளினிநதியே
முறுமவனிக் கிறையா மவ்வியன்.

என்றது, இதன்மேல் சாகத்தீவு முப்பத்திரண்டு லட்சம் யோசனை; அந்தத் தீவில் ரம்மியகிரி, உதையகிரி, சிங்கமலை, சலதரம், அம்போகிரி, இரேபதம், அம்பைகிரி; இந்த ஏழில் உற்பத்தியான அளவில்லாத பாவகரை, புண்ணிய நதி, அழகுபொருந்திய குமரி நதி, வேத்திர நதி, பங்கி நதி, சுகுமாரி நதி, நளினி நதி ஆக ஏழுக்கும் இராசாவாகியவன் அவ்வியனும் என்றவாறு. (16)

146. குரைச்சிலம்பார் சேயுதகன் சுகுமாரன்
மோதகியுங் குசுமோ தாத்தன்
புரையறுமணிசகன்குமா ரனுமாயா
துருமனெனும் புதல்வர்க் கேழாய்
வரைந்தளித்த பாரின்முன்னோர் பூயிட்டர்
மன்மகதர் வணிக ராவோர்
இருதயர்பின் னோர்மந்தே காட்குமூண்
பயசுதெய்வ மிரவி யாமே.

என்றது, ஒலியாநின்ற நூபுரத்தையுடைய அவ்வியனுக்குப் பிள்ளையான உதகன், சுகுமாரன், மோதகி, குசுமோதாத்தன், குற்றமில்லாத மணிசகன், குமாரன் சிலேட்டுமான், துருமனென்னும் எழு பிள்ளைகளுக்கு எழு பங்கிட்டுக் கொடுத்தான். பூமியின் கண்ணே பூசுரருக்குப் பூயிட்டர், சத்திரியர்க்கு மகதர், வைசியர்க்கு இருதயர், சூத்திரர்க்கு மந்தேகர். அவர்கட்கு அசனம் பால்; தெய்வம்: சூரியன் என்றவாறு. (17)

147. தருசாக வுன்னதமு மாயிரத்து
நூறுகச் சாற்று சுற்றின்
வருமான மோவைஞ்ஞூற் றறுபத்தொன்
றுமிலக்கம் வழுத்த தன்மேற்
றிருமால்நித் திரைசெய்திருப் பாற்கடலின்
சுற்றளவு செப்புங் காலே
இருமான மெழுநூற்றைம் பத்துமூன்
றுமிலக்க மியம்பும் பின்னும்.

என்றது, விருட்ச ரூபமான சாகத்தீவு உன்னதம் ஆயிரத்துநூறு யோசனை; கொப்பு நூறுயோசனை; அதன் சுற்றளவு ஐந்து கோடியே இருபத்தொரு லட்சம் சொல்லும். அதனைச் சூழ்ந்திருக்கின்றதும் மஹாவிஷ்ணு நித்திரை செய்யாநின்றதுமான திருப்பாற்கடல் முப்பத்திரண்டு லட்சம். அதன் சுற்றளவு ஏழுகோடியே அறுபத்து மூன்று லட்சம் சொல்லுவாம் என்றவாறு. (18)

(வேறு.)

148. உடுத்திடும்பாற் கடலிலக்கம் எண்ணுண்கென வுரைப்பாரின்
நடுப்படுசுவே தத்தீவிலக்க மெட்டாமென நவிலுமூடே
அடுத்தநாரா யணபுரத்தினி னரைதிரை யற்றோர்கள்
இடுக்குநந்தா ழியுமவ்வய தொன்பதினுயிர மிருப்பாரே.

என்றது, அந்தத் திருப்பாற்கடல் முப்பத்திரண்டு லட்சத்தில், நடுவினதாகிய சுவேதத் தீவு; அதன் நடுவில் நாராயணபுரத்தினில் நரைதிரையற்றுச் சங்குசக்கரத்துடனே ஒன்பதினுயிரம் வருஷம் இருப்பார்கள் என்றவாறு. (19)

149. தேன்குலமார் மகரந்த மலர்ச்சினை செறிசோலை
கான்குலமார் திருமாளிகை மீதுநெய் கமழ்போதன்
மான்கையன் பாகவதர் துதிகூற மணிச்சேடன்
தாங்கணையிற் றுயிலுரண னன்பாற்க டலைச்சூழும்.

என்றது, வண்டுகள் மொய்த்து உண்ணுநின்ற புட்பசரங்களை யுடைத்தாகிய மலரோடுங் கூடிய கொப்புக்களாலே, நெருங்கியிருக்கின்ற சோலைகளிலே மேகங்களடைந்திருக்கின்ற திருமாளிகையின் மீது, மதுக்களைப் பெருக்காநின்ற தாமரைப்பூவின் மேல் ஜனித்த பிரமதேவன் மானைக் கையிற் றரியா நின்ற ஈச்வரன், பரமபாகவதர்கள் இவர்களாலே தோத்திரஞ்

செய்யப்பட்டுக் கொண்டு, நாகரத்தினத்தையுடைய ஆதிசேஷனுகிய மெத்தையில் நித்திரை செய்யாநின்ற நாராயணன் திருப்பாற்கடலைச் சூழும் என்றவாறு. (20)

(வேறு.)

150. ஊற்றெழுங்கட் கமலத்தீ வறுபத்து
நான்குலக்கத் தூடே மான
தோத்ரமிட மையயுத மவ்வுயர
மன்சவனன் சுதனி ரண்டிற்
காத்திருக்கும் பிற்பாகத் தரசபுரி
விதனமுற்பா கத்தைக் காக்கும்
பார்த்திபனே தாதகியா முற்பாகத்
தாலடியிற் பதும நண்ணும்.

என்றது, தேன்கள் பெருக்காநின்ற புட்கரத்தீவு அறுபத்து நான்கு லட்சம். அதனூடே மானதோத்திர பருவதம் இருககும். அதனுயரம் ஐம்பதினுயிரம் யோசனே, அந்தத் தீவுக்கு ராசா சவனன். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். பிற்பாகத்துக்கு ராசா வீதன். முற்பாகத்துக்கு ராசா தாதகி. அந்த முற்பாகத்திலிருக்கின்ற ஆலமரத்தின் கீழே பிரம தேவன் இருப்பான் என்றவாறு. (21)

151. அத்தீவி னிருப்பவர்கட் கூணமுத
நரைதிரையி லாயு ளாண்டு
பத்தாகு மாயிரமா மவ்வருண
மாச்சிரமு மற்றோர் பணிமுகுந்தன்
இத்தாலச் சுற்றிலக்க மாயிரத்து
நூற்றுமுப்பத் தேழி தன்மேற்
சுத்தோத கக்கடலு மெட்டெட்டே
விலக்கமெனச் சொல்லும் பின்னும்.

என்றது, அந்தத் தீவிலிருப்பவர்கட்கு, அசனம் அமுதம். அவர்கள் நரைதிரையின்றி பதினுயிரம் வயதிருப்பார்கள். அவர்களுக்கு வருணச்சிரமமில்லே. அவர்களுக்குத் தெய்வம் நாராயணமூர்த்தி. அந்தத் தீவின் சுற்றளவு பதிமேருகோடியே முப்பத்தோர் லட்சம். அத்தீவைச் சுற்றிய சுத்தோதகக் கடல் அறுபத்து நான்கு லட்சம் என்றவாறு. (22)

(வேறு.)

152. குரைத்தெறி திரையின் முத்தங் கொழித்திடு முததி யின்சுற்
றுரைக்குமா யிரத்தைஞ் ஞூறே டிருபத்தொன் றிலக்கத் தைச். [சூழ்
புரையில்லாச் செம்பொன் பூமி புகல்பத்துக் கோடி சுற்றோ
விருப்பது வெழுபத் தைந்து கோடியு மூவேழ் லக்கம்.

என்றது, ஒலிகளோடு கூடிய அலைகளினுலே முத்தங் கொழிக்கப்படா நின்ற உததியின் சுற்றளவு பதினைந்து கோடியே இருபத்தொரு லக்கம்.

அதனைச் சூழ்ந்த குற்றமில்லாத செம்பொன் பூமி பத்துக்கோடி. அதன் சுற்றளவு எழுபத்தைந்து கோடியே இருபத்தொரு லட்சமாம் என்றவாறு. (23)

153. அரியவெம் புவியை வெய்ய வரக்கர்தா னவரெ டாமற்
றிருமகள் கணவன் றண்டு செங்கைகொண் டங்கே நிற்குந்
தரணிசூழ் லோகா லோக மெனச்சொல்லுஞ் சக்ர வாளப்
பெருவரை யுயரம் லக்கம் பெறுமிட மயுத மாமே.

என்றது, சிரேட்டமான பொன் பூமியைக் கொடிதான அரக்கர், தானவர் திருடிக்கொண்டு போகாமல் லட்சுமிக்குப் பிராண நாயகராகிய நராயண மூர்த்தி கையிற்றண்டாயுதம் பிடித்துக்கொண்டு காத்திருப்பார். அந்தப் பொன்பூமியைச் சூழ்ந்து லோகா லோக மெனகின்ற சக்கரவாளப் பருவத மிருக்கும். அதன் உயரம் லட்சம் யோசனை. அதனுடைய அகலம் பதினாயிரம் யோசனையாம் என்றவாறு. (24)

154. உற்றவம் மலையின் மீதே வுறங்கிடாக் காவ லான
கர்த்தம விருடி யீன்ற காளையாஞ் சுதனு வாவும்
மற்றொரு சங்கு மானு மாவெனு மிரணிய ரோமா
நற்றவக் கேது மானு நாற்றிசை யிருப்பார் பின்னும்.

என்றது, அந்தச் சக்கரவாள பருவதத்தினுடைய வுச்சியில் அகோர ராத்திரி நித்திரையில்லாமற் காத்திருக்கின்ற கருத்தம விருடியினுடைய புத்திரனை சுதனுவாவும், பின்னுஞ் சங்குமானும், திருமாலுக்குச் சமானமான இரணிய ரோமாவும் நலமிகுந்த குற்றமற்ற கேதுமானுமாகிய இந்த நான்கு பேரும் நான்கு திக்கிலிருப்பார்கள் என்றவாறு. (25)

(வேறு.)

155. வச்சி ரப்படை வாசவ னனலெம னிருதி
பச்சி மஞ்சல நிதிபிர பஞ்சனன் சோமன்
மெச்சு மீசனும் விரிதலை யார்சக்ர வாளத்
துச்சி மீதினி லுறைகுவர் திருநக ரெட்டே.

என்றது, வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன், அக்கினி பகவான், எமன், நிருதி, வருணன், வாயு, சோமன், ஈசானன் இந்த எட்டுப் பேரும் விஸ்தாரமாயிருக்கின்ற சக்கரவாள பருவதத்தினுடைய உச்சியில் இராநின்ற எட்டு நகரத்திலிருப்பார்கள் என்றவாறு. (26)

156. துஞ்சுகார் சக்கர் வாளத்தின் சுற்றள வெனவே
பஞ்ச விம்சதி கோடியும் பகர்லக்க மேழுமேழும்,
அஞ்சு நான்கு சகத்திரத் தொகையறிந் ததனை
வஞ்ச மன்றிமும் மடங்கென வழுத்துமத் தொகையே.

என்றது, மேகங்கள் உறைந்திராநின்ற சக்கரவாளத்தின் சுற்றளவு இருபத்தஞ்சு கோடியே நாற்பத் தொன்பது லட்சத்து இருபதினாயிரத்

தொகையை யறிந்து, மும்மடங்கா யிருக்கின்ற தொகை எழுபத்தாறு கோடியே நாற்பத்தேழு லட்சத்து அறுபதினாயிரம் என்று சொல்லுவார் கள் என்றவாறு. (27)

(வேறு.)

157. சொன்னு ரப்பா விருட்சபூமி
தொகையு மையேழ் கோடியுடன்
பின்னூர் பத்தொன் பானிலக்கம்
பெறுமே ஐயெண் ணுயிரமேல்
அன்றே சுற்று விருநூற்றைம்
பத்தா றுகுங் கோடியுடன்
என்னு முப்பத் தெட்டிலக்கம்
இயம்பு மதைச்சூழ்ந் திருக்குநன்னீர்.

என்றது, சக்கரவாள கிரியைச் சூழ்ந்த இருட்பூமி முப்பத்தைந்து கோடியே பத்தொன்பது லட்சத்து நாற்பத்தைந்தாயிரம், அதன் சுற்றளவு நூற்று எண்பத்தாறு கோடியே பதினெட்டு லட்சம். அதனைச் சூழ்ந்தது நன்னீர்க் கடலாம் என்றவாறு. (28)

158. கடலுங் கோடி யுடனிருபத்
தேழா மிலக்கஞ் சுற்றளவின்
றடமோ நூற்று நாற்பத்தேழ்
கோடி யிரட்டி தானதைச்சூழ்ந்
தடரு மண்டச் சுவர்கோடி
ஆகப் பஞ்சா சதகோடி
இடநாற் றிசையின் புறச்சுற்றே
கோடி முன்னூற் றிருபதுவே.

என்றது, முன்சொன்ன நன்னீர்க்கடல் கோடியே இருபத்தேழு லட்சம் அதன் சுற்றளவு இருநூற்றுத் தொண்ணூற்று நான்கு கோடி. அதனைச் சூழ்ந்த அண்டச் சுவர் கனங்கோடி, ஆக மேரு பருவ முதல் அண்டச் சுவரந்தமான விஸ்தீரணம் பஞ்சாசத்தான ஐம்பது கோடியாம். இப்படிக்கு நான்கு பக்கத்திலுஞ் சுற்றளவு முன்னூற்றிருபது கோடியாம் என்ற வாறு. (29)

மூன்றாவது

எழுகடலறுதி வுரைத்த வத்தியாய முற்றும்.

## நான்காவது

# மேலுலக முரைத்த வத்தியாயம்.

159. நற்றலத் தொறுதிசை யளவே நாற்றிசை
பெற்றிடு மெனச்செகம் பேசு வார்கடல்
சுற்றிய வுலகுமேற் சொல்லு லோகமும்
அத்தலத் தோரையு மளவுஞ் சொல்லுவாம்.

என்றது, முன்சொன்ன மேருவுக்குத் தெண்திசையில் அளவின் பிரகாரம் நாற்றிசையு மிருக்கு மென்று உலகத்தில் சாஸ்திரஞ் சொல்லும். சமுத்திரஞ் சூழாநின்ற உலகத்தின்மேலான சொர்க்க லோகத்துக்கு முதலான ஏழு லோகமும், அதன்மேலான லோகத்தில் இருக்கிறவர்களுடைய நாம தேயங்களையுஞ் சொல்லுவோம் என்றவாறு. (1)

(வேறு.)

160. உரைத்திடும் புவியின் மேலா வுயர்ந்திடும் புவர்லோ கத்தின்
றரைக்குமேல் விதன னாதி சரிபிர சேத னன்கா
லிரைவதன் றுதனும் வச்சி ராங்கதன் பிரசே தக்கன்
விரைத்துரு வன்சங் காதன் வித்துவன் விசங்க னென்போன்.

என்றது, பூமியின் மேலான புவர்லோகத்தின் பூமிக்கு மேலாயிருக்கின்ற தசவாயுவினுடைய நாமதேயம் விதனன் முதலாய்ச் சஞ்சரிக்கப்பட்ட பிரசேதனன், ரைவதன், வச்சிராங்கதன், பிரசேதகன், துருவன், சங்காதன், வித்துதன், விசங்கன், துதன் எனத் தசவாயு என்றவாறு. (2)

(வேறு.)

161. பெருகு நாவகன் பிரவக கஞ்செகம்
விரியுஞ் சுங்க வன்விள் ளநுவகன்
பரிவக னென்னும் பாவகன் றுங்க
மருவிய விவக்கன் வாயு சக்ரமேழ்.

என்றது, வாயு சக்கரத்தின் பெயர் :—நாவகன், பிரவகன், சுங்கவன், அனுவகன், பரிவகன், பாவகன், இவக்கன் என்னும் வாயு சக்கரம் ஏழாம் என்றவாறு. (3)

## நவ மேகத்தின் பெயர்கள்.

(வேறு.)

162. மண்டல மயுதத் தின்மேல் வதிந்திடுந் துரோண மின்னல்
கொண்டபுட் கலமா வர்த்தங் குமுரிசங் காரி தம்நீர்
உண்டிடுங் காள மேக முயர்ந்திடு வருண மென்ன
விண்டிடு நீல மென்னும் வித்துதம் சம்வர்த் தங்கன்.

என்றது, முன்சொன்ன தச வாயுவுக்கும் வாயுசக்கர மேமுக்கும் பூமிமுதல் பதினுயிரம் யோசனே. அதன்மேலான துரோணமேகம், மின்னலே யுடைத் தான புட்கலே மேகம், ஆவர்த்த மேகம் ; இரைச்சலே யுடைத்தான சங்காரித மேகம் ; நீரைப் பருகாநின்ற காளமேகம் ; நீலமேகம் ; வித்துதம் ; சமா வர்த்தம் ; ஆக மேகம் ஒன்பதாம் என்றவாறு. (4)

(வேறு.)

163. கதிரினெழு கிரணத்தா லெழுமேக
மூலகமுய்யக் காமன் சொல்லால்
உததியின்க ணேபடிந்து நீர்பருகி
விண்பரந்து வொன்றோ டொன்று
எதிர்பொருத விற்றீயே மின்னலதன்
பொறிவிழுத லிடியே நீரைச்
சிதறுமொலி கர்ச்சிதமாய்ப் பெரியோர்க
ளுலகதனில் செப்பும் பின்னும்.

என்றது, சூரிய கிரணங்களினுலே ஒன்பது மேகத்தில் எழு மேகங்கள் லோகங்களெல்லாம் பிழைக்கும் பொருட்டாகத் தேவேந்திரனுடைய ஆக்கினையினுலே சமுத்திரத்திலே படிந்து நீரை உண்டு ஆகாயத்திலே எழும்பிப் போகின்றபோது, ஒன்றோடொன்று உரசுதலில் எழும்பிய தீயே மின்னல். அதன் பொறிசிதறல் இடி. நீரைச்சிதறவெழுங்கால் எழும்பிய சத்தம் கர்ச்சிதம் என்று பெரியோர்கள் லோகத்திலே சொல்லுவார்கள் என்ற வாறு (5)

(வேறு.)

164. ஆண்டினுக் கொருமே கங்கள் அவனியிற் பொழியுங் காலே
வேண்டும்யோ சனேயோ தூம்பிரம் விசாலமோ வறுப தாகும்
பூண்டிடு முயர நூறுட் புக்குநீ ரிருபான் பங்கின்
நீண்டவா ரியிற்பத் தாறு நேமலே பூமி நான்கே.

என்றது, இந்த எழு மேகங்களும் வருஷத்துக்கொரு மேகமாக லோகத்தில் மழை பொழியும். அந்த மரக்கால் பிரமாணம் அந்தந்த வருஷத்துக்கு எத்தனே மரக்காலோ, அதனே இருபது பங்கு வைத்துப் பத்துப்பங்கு சமுத்திரத்திலேயும், ஆறுபங்கு மலேயிலும் காட்டிலும் நான்குபங்கு பூமியிலேயும் பொழியும் என்றவாறு. (6)

165. மணிமலே மாரி பொன்னும் மண்கய லனலென் றேழும்
தணிவிலா திறைக்கு மாண்டு காவலா மயுதத் தின்மேல்
கணிதர்விஞ் சையர்பூ தத்தோர் கருடபி ரேதர் சித்தர்
அணியெக்கர் பெயர ரக்கர்க் கயுதமென் றென்று மேலே.

என்றது, அந்த எழு மேகங்களும் பொழிகின்றது; மணி, முத்து, கல்மாரி, பொன்மாரி, மண்மாரி, நெருப்பு மழை நீர்மாரியாக உலகில் வருஷிக்கும். இரண்டு மேகங்கள் காவலாயிருக்கும். அந்த மேரு மண்டலம் பதினுயிரம்

யோசனை உன்னதம். அதன்மேற் கணிதர், விஞ்சையர், பூதர், அரககா, இரேதர், சித்தர், எக்கர், பேய் இந்த ஏழு பேரில் ஒவ்வொருவர்க்குப் பதி ணுயிரம் யோசனையாம் என்றவாறு. (7)

(வேறு.)

166. அபசவியன் றென்முகத்த னபயிடின்ச
கோத்தி ரத்தன் சுரநீல
வபுவுடலன் ருனையிருள் பர்ப்பரதே
சன்புலி வாக னத்தோன்
........கு புயமதிமன் பகழிதனு சிம்மிகைசேய்
வண்டுநிறக் குதிரை யாருந்
தபதிசெய்மா நிறத்தேரின் முறம்போலுந்
தவிசுறுவி ராகு வுக்கும்.

என்றது, இராகுமண்டலம். மேருவைச் சூரியன் முதலான ஏழு பேரும் வலஞ்சுற்றி வருவார்கள். ராகு கேது இரண்டுபேரும் இடஞ்சுற்றி வருவார்கள். ராகுவுக்கு அபசவியன். கேது தட்சிணுபிமுகம். பயிடினச கோத்திரத்தன், சாதா அசுரன். நீலமான தேகம். அவனுக்கு வஸ்திரங் கறுப்பு. அவனுக்குப் பர்பரதேசம். வாகனம் புலி. நான்கு கையில் வில்லும் அம்பு முடைத்தானவன். சிம்மிகையினுடைய புத்திரன். வண்டு நிறத்தையுடைய ஆறு குதிரைகள் பூண்ட அசுரத்தச்சனுலே செய்யப்பட்ட மாநிறத் தேரின் சளகுபோலும் இருக்கின்ற சிம்மாசனத்தில் இராகு விருப்பான் என்றவாறு. (8)

167. செயமுனிகோத் திரனடுவின் றேசத்தன்
கழுகூர்தி தென்மு கத்தன்
புயமிரண்டிற் கேயூரங் கதைதரித்தோன்
உடல்சிவப்பன் புரவி யாறு
சியவைபுகை நிறமசுரன் விகுருதிமுகத்
தோனிடமாய் வருவோன் சிற்ப
மயனருடேர் மிசைத்துவசத் தவிசுசிக்கு
மயுதம்வ குக்கு மேலே.

என்றது, கேதுவுக்குப் பெயர் செயமுனி கோத்திரன்; மத்திய தேச அதிகாரத்தை யுடையவன். வாகனம் கழுகு; தென்முகம்; இரண்டுபுயம்; அவற்றில் கேயூரம் கதையை உடைத்தானவன். தேகஞ் சிவப்பை யுடையான். வைக்கல் புகை போலும் இருக்கிற ஆறு குதிரைகளை யுடைத்தான மயனுலே செய்யப்பட்ட தேரின்மீதே டக்கையம் போலு மிருக்கின்ற சிம்மாசனத்தில் கேது விருப்பான். அவன் சாதி அசுரன். விகுருதி முகமாயிருப்பான். அப்படி யிருக்கிற ராகுவுக்குப் பதினுயிரம் யோசனை உன்னதமாம் என்றவாறு. (9)

(வேறு.)

168. இந்தமண் டலமேற் பானு வியைந்திடுங் கீழ்மு கத்தன்
றந்தைகா சிபகோத் திரத்தான் சத்திரியன் காசி பர்க்கு
மைந்தனுங் கலிங்க தேச மன்னவ னிரண்டு கையன்
முந்துசத் துவகு ணத்தன் மூர்த்தஞ்செம் பதும மன்னே.

என்றது, சூரியமண்டலம். சூரியன் காசிபருடைய புத்திரன். காசிபகோத்திரத்தன். சத்திரியன். பூருவாபி முகன். இரண்டு கையன். சத்துவகுண்முடையவன். கலிங்க தேசாதிபதி. அவனுடைய தேகஞ் செந்தாமரைப் புட்பம் போன்ற நிறத்தையுடைத்து என்றவாறு. (10)

## [இனி] சூரிய பகவானுடைய செய்தியைச் சொல்லுவார்.

169. திலச்செக்குப் போல மேரு மத்தியின் சிகர மென்னும்
உலக்கைபோல் மரந்தே ரச்சு வுறுநகஞ் சிற்றச் சாறுந்
தலைக்குமற் றுடற்கு மேற்றத் தாழ்விஞற் சுற்று மானஞ்
சொலத்தகா திந்த வாறுஞ் சடத்தொகை மற்றுஞ் சொல்வோம்.

என்றது, எள்ளுச் செக்குப் போன்ற மேருவினுடைய மத்தியிலிருக்கின்ற கொடுமுடியாகிற வுலக்கையும், போல்மரமுந் தேரும் அச்சும் நகமும் சிற்றச்சும் இந்த ஆறினுடைய தலைமுதல் பாதம் வரையிலிருக்கின்ற கொடுமுடியாகின்ற உடலுக்கு ஏற்றத் தாழ்வாயிருக்கிறதனாலே சுற்றளவு சொலத்தகாது. இந்த ஆறினுடைய வுடற்றொகை நீளமட்டுஞ் சொன்னோம் என்றவாறு. (11)

170. ஆதவன் றேர்க்கா தார மானபே ரச்சின் சென்னி
கோதறு மான தோத்திரக் குவடுறு மடியோ செம்பொன்
மேதகு மேரு மத்தி மேகலை மேலா யாருந்
தீதில்பே ரச்சின் மூலம் சேரடை கட்டை நீளம்.

என்றது, சூரியனுடைய ரதத்துக்கு ஆதாரமாகிய பெரிய அச்சினுடைய நுனி குற்றமில்லாத மானதோத்திரப் பருவத்திலேயும், அடி மகாமேரு, பருவத்தினுடைய நடுமேகலை மத்தியின் ஆர்ந்துநிற்கும். குற்றமில்லாத பெரிய அச்சினுடைய அடியில் சேர்ந்திருக்கின்ற அடைகட்டைப் பிரமாணம் நீளஞ் சொல்வாம் என்றவாறு. (12)

171. ஆயிர முப்ப தாகும் ஆமத னுயர மெட்டாம்
ஆயிர மகல மோரேழ் ஆயிரம் யோச னைப்பண்
பாயபே ரச்சின் நீள மறைகுவங் கோடி யும்பின்
பாயவைம் பத்தேழ் லக்கத் தைம்பதி னாயி ரஞ்சொல்.

என்றது, அடைகட்டையினுடைய நீளம் முப்பதாயிரம் யோசனை; உயரம் இருபத்து நாலாயிரம்; அகலம் ஏழாயிரம். அழகுபொருந்திய பேரச்சினுடைய நீளம் கோடியே ஐம்பத்தேழு லட்சத்து ஐம்பதாயிரம் ஆகும் என்றவாறு. (13)

172. பெற்றச்சு வுயர மூவெட் டாயிரம் பேசும் பின்னும்
முற்றத னகல நாலே ழாயிர முரைக்குங் கொக்கி
சிற்றச்சு முப்பத் தொன்ப திலக்கமுஞ் சேரு மேனுற்
பத்தியே ழாயி ரத்தைஞ் னூறெனப் பகரு மன்றோ.

என்றது, பெரிய அச்சினுடைய வுயரம் இருபத்து நாலாயிரம். அந்த அச்சினுடைய அகலம் இருபத்தெட்டாயிரம். அதற்குக் கொக்கியாகிய சிற்றச்சு நீளம் முப்பத்தொன்பது லட்சத்து நாற்பத் தேழாயிரத்து ஐந்நூறு யோசனையெனச் சொல்லுவர் என்றவாறு. (14)

173. இனியபே ரச்சின் மீது இடுதுளை தனிலே யூன்றிக்
கனகமா வெற்பின் மத்திக் கொடுமுடி யுலக்கை மானம்
புனையுமா யிரமீ ரெட்டா முயரஞ்சொல் புனிதன் கையாற்
குனியுமவ் வுச்சி மீது கொக்கியாய் மாட்டி நிற்கும்.

என்றது, முன் சொன்ன அச்சைப் பெரிய அச்சியினுடைய மத்தியிலிருக்கின்ற துவாரத்தில் ஊன்றி, மகா மேருவினுடைய மத்தியிலே யிருக்கின்ற கொடுமுடி யாகிற உலக்கை உயரம் பதினாயிரம். ஈச்வரன் கையினாலே வில்லாக வளைக்கப்பட்ட அந்த வுலக்கை உச்சியிலே கொக்கியாக மாட்டி நிற்கும் என்றவாறு, (15)

(வேறு.)

174. சக்கரத்தி னுயரம்லக்கஞ் சுற்றளவு
மூன்றிலக்கத் தயுதம் ரெண்டாஞ்
சக்கரத்தின் கனமூவா யிரத்தைஞ்னூற்
றெழுபத்தொன் றரையாய்ச் சாற்றும்
பக்கமுறும் வட்டகையு மாருகு
மாரக்கால் பனிரண் டாமீர்
பக்கமே யிருவயன நாடியொரு
மூன்றுகப் பகரு மன்றே.

என்றது, பேரச்சினுடைய வண்டி நுனியில் சேர்த்திருக்கின்ற வண்டிலுயரம் லட்சம். அதன் புறச்சுற்று அளவு மூன்று லட்சத்து இருபத்தொன்பதாயிரம். அந்த வண்டலக்கனம் மூவாயிரத்தைநூற்று எழுபத்தொன்றரையாம். அந்த வண்டிலுடைய வட்டகையாலும் ஆரக்கால் பன்னிரண்டு ; குடத்தினுடைய இருபக்கமும் இரண்டயனம். நாபி மூன்றுகப் பகரும் என்றவாறு. (16)

175. ஒக்கும்வண்டில் போன்மரமு மூவொன்ப
தாயிரமா முரைக்கு நீளந்
தக்கநுக மிருசகஸ்திரத் திருநூற்றைம்
பதுவாகுஞ் சந்தச் சேழு
மிக்கபச்சைப் பரியேழ்சே ரிரதமொன்ப
தாயிரமாய் மேலே நோக்கி
நிற்குமத னுள்ளகல மானமூவா
யிரமாக நிகழ்த்துந் தேரின்.

என்றது, அந்த வண்டிலுடைய போல்மரம் இருபத்தேழாயிரம் யோசனை. அதிற் சேர்ந்திருக்கின்ற நுகம் இரண்டாயிரத்திரு நூற்றைம்பது யோசனை

உள்ள நுகத்திற் கட்டியிருக்கின்ற எழுச் சந்தச்சு என்ற பெயரையுடைய சிலாக்கியமான பச்சைக் குதிரை பூண்டிருக்கின்ற இரத வுன்னதம் ஒன்பதா யிரம். அந்த ரதத்தின் உள்ளகலம் மூவாயிரமாம் என்றவாறு. (17)

(வேறு.)

176. மகம்புரி முனிவ ரேழ்கிரா மணியுமேழ் வடமே சேர்த்துக்
ககனமீ துற்ற சூரிய மண்டல விலக்கந் தேரின்
சுகம்பெற விரைந்து சுற்றுங் காலையிற் சோதி தன்னைப்
பகறன விருளை நீரிற் பண்கதி ரிரவித் தீயில்.

என்றது, அந்தச் சூரியனுடைய ரதத்தின் பேரில் யாகஞ் செய்யாநின்ற முனிவர் எழுவர் எழு கிராமணிகளுடனே அந்தச் சூரியனுடைய ரதத்தில் எழுவடஞ் சேர்த்து ஆகாசத்தை யளாவிய சூரிய மண்டலம் லட்சம். தேரின் மேல் ஏறிச் சவுக்கியமாக விருந்து ஜாக்கிரதையாய் மகாமேருவைச் சுற் றும் போது, அவனுடைய கிரணங்களை மத்தியானத்தில் இருளை சலத்திலே யும், ராத்திரி காலத்தில் தன்னுடைய கிரணங்களை அக்கினியிலேயும் வைப் பான் என்றவாறு. (18)

177. இதம்பெற வைத்து வெற்பைச் சுழலுவான் மறைவ தில்லை
உதயமு மத்த மான முச்சியும் பகலி ராவாய்
நிதநிதம் வருமோ வென்று நிச்சய முணரக் கூடாக்
கதிரவன் விண்மேற் சுற்றுங் கனகவெற் பதின்ம றைத்தல்.

என்றது, இப்படிக்குக் கிரணங்களை வைத்து மகாமேருவைச் சுற்றி வருவதே யல்லாமல் மறைவதில்லை. உதயமென்றும் மத்தியானமென்றும் அஸ்த மனமென்றும் தினசரி வருமென்று நிச்சயம் பண்ணக்கூடாது. சூரியன் ஆகாசத்தில் வரும்போது, மேருவினுடைய நிழற் சாயையன்றி மறைத்த தில்லையாம் என்றவாறு. (19)

(வேறு.)

178. முதலைவாய் மேருவுச்சி வால்துருவ
மண்டலத்தின் முட்டி நிற்க
இதமுறுகா லக்கயிறு கொண்மேநவக்
கோளின்குதி ரைலக மீர்க்குங்காலைக்
கதிரவனும் வடவயனம் லகுவாகிற்
றெக்கயனங் கழறும் பின்னும்
வதிதிரைய மதிலொன்பான் வீதியெனும்
பேரதனை வழுத்து வாரே.

என்றது, சிம்சுமாரத்தினுடைய வாய் மேருவினுடைய வுச்சியிலேயும் வால் துருவமண்டலத்திலேயும் தலை கீழாய் முட்டி நிற்கும். அதில் வாயு பாசங் களினுலே ஒன்பது கிரகங்களுடைய குதிரைக் கடிவாளங்களை சிம்சுமாரத் தின் வாலின் மேலே யிருக்கிற துருவன் முன் சொன்ன குதிரை லகங்களைப்

பிடித்திழுக்கும் போது, சூரியனுக்கு உத்தராயணமாம். இலகுவாக விடுங் காலையில் தட்சிணயனமாம். மறுபடியும் மானதோத்திர பருவதத்தில் மூன்று வீதி. அதில் ஒரு வீதிக்கு மூன்று வீதி வீதம் ஒன்பது வீதியினுடைய பேரைச் சொல்லுவோம் என்றவாறு. (20)

179. வடபாலி னுகமொடு அசமயிரா
பதவீதி மத்திய வீதி
யடருமா ரிடபகே விசாரகே
வியுமூன்று வாற்றுந் தெற்கில்
படருமச மிருகவீதி வைச்சுவா
னரவீதி பகரு மொன்பா
னுடன்வீதிக் காதிபரி நாள்முதலாய்
நவக்கோளு முறுவ பின்னும்.

என்றது, முன் சொன்ன மூன்று வீதியில், வடபாலில் நாகவீதி, கசவீதி, அயிராவத வீதி மூன்றும், மத்திம வீதியில் இடப வீதி, கெவிவீதி, சாரகேவிவீதி, மூன்றுமூன்றுகச் செல்லும். தெற்கில் அசவீதி, மிருகவீதி, வைச்சுவானர வீதியென்று வீதி ஆக ஒன்பது வீதிக்கும். ஆதி அசுபதி முதல் ஒன்பது கிரகமும் ஒத்து நடப்பார்கள் என்றவாறு. (21)

180. காலசக்ரந் தனக்குரிய வொன்பதுகோள்
நடத்தைசரிக் கட்டா தேபி
பீலிகையள் சக்கிரசக் கரத்திலுற்ற
தொக்குமெனப் பெறுமீன் ராசி
மேலுறவே நடப்பதற்கு வேறொருரூ
பங்கொண்டு வேக மாகச்
சாலிநடப் பார்கால சக்கரஞ்
சோதிசக்ரஞ் சரியா மன்றே.

என்றது, காலசக்கரங்களுக் குரித்தான ஒன்பது கிரகங்களுக்கும் ஒன்றுக்கொன்று கட்டாதாகையால், எறும்பு குலாலனுடைய எந்திரத்தை ஒத்ததொருமெனச்சொல்லு மீனராசி மேலுறவே நடப்பதற்கு ஒவ்வொரு ரூபங்கொண்டு வேகமாக மிகவோடி நடப்பான். ஆகையால் கால சக்கரமுஞ் சோதி சக்கரமுஞ் சரியாம் என்றவாறு. (22)

181. ஆயிரஞ்செங் கதிர்கடனி லெழுகதிரின்
கங்கியமு மசுரம் ரெண்டும்
சேய்குசன் றனைவிளக்குஞ் சுவராட்டுச்
சனிவிளக்குஞ் செம்பொன் றன்னை
மேயஅறு வாசுவே விளக்கும் வெள்ளி
தனைவிளக்கும் விசுவை பின்னும்
தூயபுதன் றனைவிளக்குஞ் சுகமுனையு
பியலரியுஞ் சொல்லு மன்றே

என்றது, சூரியனுடைய ஆயிரங்கிரணங்களில் எழுகதிர்கள் கிரணத்தின் கங்கியம், அசுரம் என்னும் இரண்டு கிரணமும் செவ்வாயைப் பிரகாசிப்பி

விக்கும். சுவராட்டு என்கிற கிரணம் சனியைப் பிரகாசிப்பிவிக்கும். சுக்கிரனை விசுவை யென்னுங் கிரணம் பிரகாசிப்பிவிக்கும். புதனை சுசுமுனையும் இயலரியும் பிரகாசம் பண்ணும் என்றவாறு, (23)

182. இரதமதி லபிமுகமா யாறயுத
வாலகில்ய ரேத்த வட்ட
வரியணையிற் சாயைசயிக் கினையுடனே
தேரதனை யருண னூர
ஒருதினமொன் பான்கோடி யுடனைம்பத்
தொன்றிலக்க மோடி மேரு
வரையதனைத் திலசக்ரம் போற்சுழலுங்
கதிர்க்கெல்லை வகுக்கும் லக்கம்.

என்றது, சூரியனுடைய ரதத்தில் அபிமுகமாயிருந்து, அறுபதினாயிரம் பாலகில்லியர்களும் தோத்திரஞ் செய்ய ஒரு நாளில் ஒன்பது கோடியே ஐம்பத்தொரு லட்சம் யோசனை மேரு பருவதத்தைச் சக்கரம் போலச் சுற்றி வருகிற சூரியனுக்கு லட்சம் யோசனை உயரமென்றவாறு. (24)

(வேறு.)

183. வசந்தங் கபிலம் பொன்கிரிட்டு
மாறு வருடம் வெண்ணிறமற்
பசிகார்த் திகையும் பாண்டுநிறம்
பகரே மந்தந் தாம்பிரமாம்
சிசியி னிருது சோணிதமாய்ச்
செப்புங் கதிரா யிரத்தின்பனி
நிசிமுன் னூறு மழையஃதே
நிகழ்த்தும் வெயிலு நானூறே.

என்றது, சூரியனுக்கு ஆறு ருதுவில் நிறங் கூறியது. சித்திரை, வைகாசி, மாதங்களிரண்டும் கபில நிறம். ஆனியும், ஆடியும் பொன்னிறம். ஆவணியும், புரட்டாசியும் வெள்ளி நிறம். ஐப்பசியுங் கார்த்திகையும் பாண்டு நிறம். மார்கழியுந் தையும் தாமிர நிறமாம். அந்தச் சூரியனுடைய கிரணம் ஆயிரத்தில் முன்னூறு கிரணம் பனிபெய்யும். முன்னூறு கிரணம் மழை பெய்யும். நானூறு கிரணம் வெயிலெறிக்கும் என்றவாறு. (25)

184. சண்டன் யமுனை தனையளித்த
சயிக்கினை கதிரோ னுடற்கஞ்சிக்
கொண்ட கணவன் றனைப்பரியக்
குறித்துச் சாயைப் பெண்படைத்துத்
தொண்டு கலவி புரிதியெனச்
சுதையைச் சுதனைக் காவென்று
விண்டு கணவ னறியாமல்
விரைந்து தாதை யிடஞ்செலவே.

என்றது, எமதரும ராசாவையும் எமுனா நதியையுஞ் சனிப்பித்த சயிக்கினையானவள் சூரியகிரணத்தினுடைய தாபத்துக்கஞ்சிப் புருஷனை யறியாமற் பிதாவினுடைய கிரகத்துக்குப் போவதைக் குறித்துச் சாயை யென்கின்ற பெண்ணைப் படைத்து அந்தச் சூரியனுக்கு என்னைப் போல கலவி முதலான இன்பங்களைப் புரிந்து என்னுடைய பெண்ணாகிற யமுனா தேவியையும், என் பிள்ளையாகிற தர்மராசாவையும் ரட்சித்துக் கொள் ளென்று, புருஷனை யறியாமற் சாக்கிரதையாகப் பிதாவினுடைய தொட்டா கிரகத்துக்குப் போனாள் என்றவாறு. (26)

185. தாதை சுதையை நோக்கியென்னோ
தனியே வருத லெனக்கதிர்மேற்
கோது புகல மறமுடன்கான்
குதிரை யுருவாய்த் திரிதியென்றான்
மாது சாயை வயிற்றுதித்த
மகவாஞ் சனியைச் சாவர்னியைத்
தீதில் புரந்தாள் சக்களத்தி
சிசுக்க டன்மையே கடிந்தனளால்.

என்றது, அந்தச் சயிக்கினையுடைய பிதாவான துவட்டாவானவன் தன் னுடைய பெண்ணைப் பார்த்துத் தனியே வரவேண்டிய காரணமென்ன வென்றுகேட்கப் பெண்ணான சயிக்கினை சொல்லுவாள். என் பர்த்தாவான சூரியனுடைய தேகம் கரடு முரடாய் இருப்பதால், அவரிடத்தில் இராமல் உங்களிடம் வந்தேனென்று சொல்ல, அப்போது துவட்டாவுக்குக் கோபம் வந்து, தனியே வருதலாலே நீ காட்டுக் குதிரையாய்ப் போகக் கடவாய் என்று சபித்தான். அவளுங் காட்டுக் குதிரையாய்ப் போனாள். அந்தச் சயிக் கினையைப் படைத்த சாயை வயிற்றிற் பிறந்த சனிபகவானையுஞ் சாவர்னிய மனுவையும் இரட்சித்தாள். சக்களத்தியான சயிக்கினை வயிற்றிற் பிறந்த இரண்டு குழந்தைகள் பேரிலும் பிரியமில்லாமல் இருந்தாள் என்றவாறு. (27)

(வேறு.)

186. அவ்வா றறிபா னுவம்மா மனிடஞ்
சொல்வா னதுகேட் டலும்மா றுவட்டா
ஒவ்வா மணவா ளனுயர்ச் சிபெறச்
செவ்வாய்க் கடைந்தான் கிறுசா ணையினால்.

என்றது, சூரிய பகவானானவன் இந்த நடத்தையறிந்து, துவட்டாவாகிய மாமனாரிடத்திற்போய், இந்த நடத்தைகளைச் சொல்ல, துவட்டாவானவர் தேக விகிருதியாயிருக்கின்ற மாப்பிள்ளையைப் பார்த்துச் சிலாக்கியமாகும் பொருட்டுச் சூரிய பகவானைச் சாணையில் வைத்துக் கடைந்தான் என்ற வாறு. (28)

187. மதனஞ் செயச்சோ திவளர்ந் திடலும்
அதில்வந் ததுவா தசவா தவரும்
கதிகொண் டொருதிங் களுக்கோ ரொருவர்
துதிகொண் டிடுமே ருவைச்சூழ் குவரால்.

என்றது, துவட்டாவானவன் சாணையை வைத்துக் கடைய அந்தச் சூரிய னுடைய தேகத்திலிருந்து சோதி எழும்பிப் பன்னிரண்டுபொறி யுதிர்ந்தது. அந்தப் பொறியிலிருந்து பன்னிரண்டு சூரிய ருண்டாயினர். அவர்கள் தாம் துவாதசாதித்தியர் [எனப்படுவர்]. இந்தப் பன்னிரண்டு பேரும் எங்களுக்கு நடக்கவேண்டிய காரிய மென்னவென்று கேட்க, நான் தவசுக்குப் போகிறேன். நீங்கள் (பன்னிரண்டு மாசம்) மாசம் ஓருவராகப் பன்னி ரண்டு மாசத்துக்கும் என்னைப் போல் ஜகத்தைப் பிரகாசிவிப்பித்துக் கொண்டு இருங்கள் என்று சொல்லிவிட்டுக் காட்டுக் குதிரையாய்ப் போன சயிக்கினையைத் தேடிப் போனார் என்றவாறு. (29)

188. காடார் பரிசயிக் கினைகாண் கதிரோன்
கோடார் வுருக்கொண் டுபுணர்ந் திடலும்
தாடாண் மையினா சத்தியத சசிரனுஞ்
சோடா விருநா சியிற்றோன் றினரே.

என்றது, முன்சொன்ன சூரியபகவானானவன், தன் பாரியான குதிரை ரூபமாயிருக்கிற சயிக்கினையைக் கண்டு, அவள் பேரில் இச்சையாகித் தானுங் குதிரை ரூபங்கொண்டு புணர்ந்தான். அப்போது மகாபலசாலியாயிருக்கிற நாசத்தியனும் தசசிரனும் ஆகிய இரண்டு பேரும் பெண் குதிரையினுடைய மூக்கிலிருந்து பிறந்தார்கள். அவர்களே அசுவினி தேவதைகளானார்கள் என்றவாறு. (30)

(வேறு.)

189. தாதா புலத்தியன் வாசுகி கிருதஸ்தலை
தருகிரா மணிதும்புரு
எதியெனு மெழுவருஞ் சித்திரைத் திங்களாம்
இகலரிய மாபுலகனும்
கோதில்புஞ் சிகைமாது பிரகே கச்சவி
கூருவை ரதனிரதச
ஞேதுமிட் பத்திங்க ளெழுவரா மானிக்கி
யுரைசெய்மித் திரனரக்கன் .

என்றது, முன்சொன்ன பன்னிரண்டு சூரியரும், பன்னிரண்டு மாசத்தில் வருகிற பேர்கள் நடத்தைகளைச் சொல்லும். சித்திரை மாசத்தில் மேருவைச் சுற்றிவருகிற சூரியனுடைய நாமதேயம் தாதா. அவனுடனே (கூட) வருகின்ற ரிஷி புலஸ்தியர்; பாம்பு வாசுகி; தேவஸ்த்ரீ கிருதஸ்தலை; தருவென்கிற கிராமணி. தும்புரு, கந்தருவன்; எதிராட்சதன். ஆக ஏழு பேரும் வருவார்கள். வைகாசிக்கு அரியமா—சூரியன் 1, புலகன்—

ரிஷி 2 ; குற்றமில்லாத புஞ்சிகையாகிற தேவஸ்த்ரீ—3, பிரகேதியாகிற கிராமணி—4, கச்சவியாகிற பாம்பு—5, வயிரதனாகிற கந்தருவன்—6, இரதசனாகிற ராட்சதன்—7 ; ஆக ஏழு பேருடனே வருவான் ; ஆனி மாசத்துக்கு மித்திரன் சூரியன் என்றவாறு. (31)

190. அத்திரி மேனகை பவுருட (?)
 னாகாவுட னெழுவராம்
உற்றகட கந்தன்னில் வருணனுஞ் சகசென்னிய
 னாகூணப னாரதரதச
சித்திரன் வசிட்டனே மூாவணிக் கிந்திரன்
 சோங்கி ராவெலாத
பத்திரை சுரோதைவிசு வாவசு வுடனிடு
 சர்ப்பம்பிர மலோசையேழே.

என்றது, முன்சொன்ன ஆனி மாசத்துக்கு மித்திரன் சூரியன் ; அத்திரி—ரிஷி, மேனகை யென்கிற தேவஸ்த்ரீ, பவுருட னென்கின்ற ராட்சதன் ; தக்கனாகின்ற பாம்பு ; ஆகாவாகின்ற கந்தருவன், இந்த ஏழுபேரும் வருவார்கள். ஆடி மாசத்துக்கு வருணனாகிற சூரியன் ; வசிட்டராகிய ரிஷி, ஊகூ கந்தருவன் ; சகசென்னியை தேவஸ்த்ரீ ; பனாகிற கிராமணி, ரதாதனாகிய ராட்சதன், சித்திரனாகிய பாம்பு, ஆக ஏழுபேருங் கூடி வருவார்கள். ஆவணிக்கு இந்திரனாகிற சூரியன் ; அங்கிரசரிஷி ; எலாதபத்திரை தேவஸ்த்ரீ ; சுரோதையாகிற கிராமணி ; விசுவாவசு வென்கின்ற கந்தருவன் ; பிரமலோசை யாகின்ற ராட்சதன் ; சர்ப்பனாகிற பாம்பு ; ஆக ஏழு பேர் என்றவாறு. (32)

191. ஒளிதரு விவச்சுவா னும்புலோ மிசைபிருகு
 வுக்கிரசே னன்பூரணை
வளியுறுஞ் சங்குபா லன்புரட் டாசிக்கு
 மற்றும்வி யாக்கிரனேழ்
களிகொளைப் பசிபுடா வாதன் றனஞ்சயன்
 கவுதமன் சுருதிபாதந்
தெளிவுற நடஞ்செய் கிருதாசி யுடனேசேர்
 சுசேணனேழ் கார்த்திகையினே.

என்றது, புரட்டாசிக்கு விசுவாவசுவாகிய சூரியன் ; புலோமிசை—தேவஸ்த்ரீ ; பிருகு—ரிஷி; உக்கிரசேனன்—கிராமணி ; கந்தருவன்—பூரணன்; பாம்பு—சங்குபாலன் ; ராட்சதன்—வியாக்கிரன் ; ஆக ஏழுபேரும் வருவார்கள். அற்பசிக்குப் புஷா— சூரியன் ; ரிஷி—கவுதமன் ; தனஞ்சயன்—ராட்சதன் ; கந்தருவன்—சுருசி ; கிருதாசி—தேவஸ்த்ரீ ; சுஷேணன்—கிராமணி; வாதனென்கிற பாம்பு ; ஆக ஏழுபேரும்—கார்த்திகைக்கு என்றவாறு. (33)

192. வீசுவிசு வாவசு துவானவி சுவாசி
யைரா வதன்பாரத்து
வாசனுஞ் சனசித்து பரசென்னிய னெழுவரா
மார்கழிக் கம்சுமானுங்
காசிபன் ரூர்க்கியனுரு வசிசித்ர சேனனுங்
கார்வித்து தன்பதுமனேழ்
நேசகிரு தாசியும் பூர்ச்சகனு மாரிட்ட
நேமிகார்க் கோடகனனே.

என்றது, முன்சொன்ன கார்த்திகைக்கு விசுவாவசு சூரியன் ; துவரன் ; கிராமணி ; விசுவாவஸி—தேவஸ்த்ரீ ; ஐராவதன்—இராட்சதன் ; பரத் துவாசன்—இருடி ; சனசித்து—கந்தருவன் ; பாசசென்னியன்—பாம்பு ; ஆக எழுபேர். தைமாசத்துக்குப் பகன்—சூரியன் ; கிருதாசி—தேவஸ்த்ரீ ; பூர்ச்சகன்—ரிஷி ; அரிட்டன்—ராட்சதன் ; நேமி—கிராமணி, பூருவ சித்தி—கந்தருவன் ; கார்க்கோடகன் பாம்பு என்றவாறு. (34)

193. பேசுபூ ருவசித்தி தைநப னெழுவராம்
பின்றுட்டா பிரமோபேதன்
பூசுரன் சமதக்கினி யதசித் திலோத்தமை
புகழ்த்திருத ராட்டிரனேழ்
மாசிபின் கூனிக்கு சிடனு வரம்பைவிசு
வாமித்ரன் சத்யசித்து
பாசயஞ் ஞோபேதன் சுவைரத னரக்கனும்
பகரெழுவ ராகுமன்றே.

என்றது, முற்கவிதையிற் சொன்ன எழுவரில், முற்கவியில் ஐந்துபேர்போக மீதம் பூருவசித்தியாகிற கந்தருவனும், நபன் என்கிற சூரியனும் (ஆக) எழுவராம். மாசிக்குத் துவட்டா-சூரியன் ; சமதக்கினி, ரிஷி ; பிரமோபேதன் கந்தருவன் ; பூசுரன் கிராமணி ; யதசித்து-பாம்பு ; திலோத்தமை-தேவஸ்த்ரீ ; திருதராட்டிரன்-ராட்சதன் ; ஆக எழுவராம். பங்(கூ)குனிக்குச் சூரியன் சிஷ்ணு ; விசுவாமித்திரன்-ரிஷி ; அரம்பை-தேவஸ்த்ரீ ; யதசித்து-கந்தருவன் ; பாசயஞ்ஞோபேதன்-பாம்பு ; சுவைரதன்-கிராமணி ; அரக்கன்-ராட்சதன் ; ஆக எழுவராம் என்றவாறு. (35)

(வேறு.)

194. பனிமொழி யரம்பை யாடப் பண்புகந் தருவர் பாட
முனிதுதி கூறப் பாம்பு முதுகிடைத் தாங்க வேவல்
நனிகிரா மணிகள் செய்ய நட்பிலா வரக்க ரோடு
மினிதின்பொற் றேரி னேறி யிரவிபொன் மலையைச் சுற்றும்.

என்றது, முன்சொன்ன சூரியனுடனே வருகின்ற ஆறுபேர்களில் குளிர்ந்த வசனத்தை யுடைய தேவஸ்த்ரீ நடனஞ் செய்யக் கந்தருவர் கீதம் பாட முனிகள் தோத்திரஞ் செய்யக் கிராமணிகள் [சூரியனுக்கு] ஏவல் செய்யச்

சர்ப்ப ராசாக்கள் இரதத்தை முதுகிலே தாங்கப் பகைவரான ராட்சதர் தன்னுடனே கூடி, விசுத்தியாயிருக்கின்ற பொற்றேரின் மீதிலேறி, மகா மேருவைச் சூரியன் சுற்றிவருவான் என்றவாறு. (36)

(வேறு)

195. பன்னிரு ராசியிற் பரிதிசெல் லுங்காற்
றுன்னிய மேடமுந் துலேயுஞ் சமமதாம்
பின்னிட பம்முதற் பெருகும் பகற்கன்னல்
மன்னிய தேள்முதல் வளருமி ராக்கன்னல்.

என்றது, சூரியனுனவன் பன்னிரண்டு ராசியிலும் பிரவேசிக்கையில் சித்திரையும் ஐப்பசியும் இராத்திரி பகல் நாழிகை சமமாயிருக்கும். வைகாசி மாத முதல் புரட்டாசி வரைக்கும் மத்தியானம் நாழிகை அதிகமாக விருக்கும். இந்த ஐந்து மாசத்துக்கும், கார்த்திகை மாசம் முதல் பங்குனி மாசம் வரை இந்த ஐந்து மாசமும் இராத்திரி நாழிகை அதிகமாயிருக்கும் என்றவாறு. (37)

(வேறு)

196. திங்களுக் கொருநா மங்கள் செப்புவர் பின்னும் வேருேர்
அங்கமு மவனே தேரு மாழியும் பரியு மொன்ருய்த்
துங்கவிண் டெனும்பு ராணஞ் சொல்லுது முலக மெல்லாந்
தங்கிய மூவ ரொன்ருய்ச் சமைந்தவ னொருவன் ருனே.

என்றது, பன்னிரண்டு மாசத்திலும் வருகிற சூரியர்களுக்குப் பன்னிரண்டு நாமதேயஞ் சொல்லுவார்கள். பின்னும் வெவ்வேருன அங்கமும் அவனே. தேரும் வண்டிலுங் குதிரையும் ஒன்றேயாகச் சிலாக்கியமான விண்டு புராணஞ் சொல்லும். அவர்கள் லோகமெல்லாஞ் சமமாயிருக்கின்ற பிரமா விஷ்ணு உருத்திரன் இந்த மூன்று பேறும் ஒரே ரூபமாக வந்த சூரியனும் என்றவாறு. (38)

197. அத்தியன் யவன மன்மேற் கானன னுத்தி ரேயன்
அத்திரி மகனி ரண்டு அத்தத்தன் கதைத ரித்தோன்
சத்துவ குணத்தன் வெள்ளைத் தானைய னமுத தேகன்
சத்திரிய னுற்காற் பீடத் தன்னிரு ணிசியின் வேந்தன்.

என்றது, சந்திரனுனவன் சமுத்திரத்தில் ஜனித்தவன். ஆத்திரேய கோத்திரம். அவன் யவன தேசத்துக்கு ராசா. மேற்கே நோக்கின முகத்தன். இரண்டு கையை யுடையவன். கதாயுத முடையவன். சத்துவ குணத்தன், வெள்ளை வஸ்திரந் தரித்தவன். அமுத தேகன். சாதியில் க்ஷத்திரியன், நாற்காற் பீடத்தன். இருளையுடைய இராத்திரிக்கு இராசாவாக இருப்பான் என்றவாறு. (39)

198. அழலினன் விசுவ தேவன் அரிவரு ணன்கு பேரன்
பழிநமன் வேத னேக பாதன்கா லுமைபி திர்க்கள்
மழைமுகி லூர்தி யீசன் வரவரப் பன்னம் பேரும்
செழுமதிக் கலையி னூறல் தினமன்றே னுண்ட செட்டி.

என்றது, அக்கினி-1, சூரியன்-2, விசுவதேவன்-3, அரி-4, வருணன்-5, குபேரன்-6, பழிநமன்-7, பிரமதேவன்-8, ஏகபாதன்-9, வாயு-10, உமை-11, பிதிர்க்கள்-12, மழை-13, முகிலூர்தி-14, ஈசன்-15; இந்தப் பதினைந்துபேரும் மிகுந்த கலைகளோடு கூடிய சந்திரமண்டலத்தில் உண்டாகின்ற அமுதத்தைப் பதினைந்து பேரும் நிதம் ஒருவராக வுண்டு மீதம் என்றவாறு. (40)

199. ஒருகலை யாம மாவி லூர்கதி ரோன்கால் சோர்ந்து
வரினமா வாசி யென்று வழங்கும்பின் னமுத மூறி
நிரம்புமிக் கலைக ளொன்றுய் நிறைத்திடப் பூர்ண மாவா
யுரைத்திடு மான மில்லா னுறைந்திடுங் களங்க னன்றே.

என்றது, ஒருகலை யமாவென்னும் பதினாருங்கலையில் சூரியனுடைய கிரணஞ் சேர்ந்துள்ளளவில் அமாவாசி யென்று பேராயிற்று. பின் அந்தச் சந்திரனில் அமுதம் நிதம் ஊறி நிறைந்த கலைகள் ஒன்றுய் நிறைந்திடப் பூர்ணமாவாசி யென்று சொல்லும். இந்த இரண்டு வகையினுலேயும் களங்கனென்று பேராம் என்றவாறு. (41)

200. அம்புலி பரம்பெண் பத்தெண் ணுயிரம் யோச னைமூ
வொன்பதா யிரம்வி சால மூர்விமா னத்தி னெல்லை
பம்புமூ வாழி சேர்த்துப் பரியுஞ்சேர்த் துரோணி யோடுஞ்
செம்பொன்மால் வரைக்கு மேலாய்த் திரிகுவான் பின்னுஞ்
[செப்பும்.

எனறது, சந்திர மண்டலம் விஸ்தாரம் : எண்பத்தெண்ணுயிரம் யோசனை விஸ்தீரணம், இருபத்தேழாயிரம் யோசனை அகலமான விமானத்தோடுற்ற வண்டில் மூன்று, வெள்ளைக் குதிரை பத்துப் பூட்டி, விமானத்தின்மேல் ரோகிணி முதலான இருபத்தேழு ஸ்த்ரீகளுடனே மகாமேருவைச் சுற்றி வருவான். அவன் நடத்தைகளை இன்னுஞ் சொல்லுவாம் என்றவாறு. (42)

**(வேறு)**

201. கும்பமதின் முழுமதியோர் மகநான்கின்
வடக்காகிற் குறுகும் பைங்கூழ்
அம்பிதிரின் றெற்காகிற் கால்பிரமன்
மேற்கேகில் அரையாம் பைங்கூழ்
உம்பர்கட்குத் தெற்காகில் முக்காலா
மிராக்கதற்குந் தெற்கே யோடில்
நம்புசெக முழுவதுமோ பூரணமாய்ப்
பலிப்பதற்கு நடப்பான் லக்கம்.

என்றது, மாசி மாதத்தில் பூரணமாவாசை தினத்தில் ராத்திரியில் நட்சத்திரம் மகம் நான்கு; அதில் பிதிர்-1, பிரமன்-2, உம்பரான தேவதை-3, ராட்சதன்-4, இந்த நான்கு நட்சத்திரமும் வடக்கே நிற்க சந்திரன் தெற்கே யோடில் கால் வெள்ளாண்மை; பிரமனென்கின்ற நட்சத்திரத்துக்குத் தெற்கேயோடில் அரைவெள்ளாண்மை; உம்பரென்கின்ற நட்சத்திரத்துக்குத் தெற்கேயோடினல் (சந்திரன்) முக்கால் வெள்ளாண்மை; ராட்சதன் என்கின்ற நட்சத்திரத்துக்குச் சந்திரன் தெற்கே ஓடில் உலகமெல்லாம் பூர்த்தியாய் விளையும்படி நடப்பிவிக்கிற சந்திரனுக்கு லட்சம் யோசனையாம் என்றவாறு. (43)

(வே.று.,

202. ஆரு மதன்மேற் றரகைமண்
டலமோ லக்க மதன்மேலே
சாரு மாத்ரேய கோத்திரத்தன்
றரையார் மகத தேசத்தன்
ஊரு மதிசேய் மரகதம்போல்
உடலன் பூரு வாபிமுகன்
மேரு வனைய புயநான்கின்
வில்லும் பகழி தூணிதரன்.

என்றது, முன்சொன்ன சந்திர மண்டலத்தின் மேலான நட்சத்திர மண்டலம் லட்சம்; அதன்மேலே புதமண்டலம். அந்த புதன் சந்திரனுடைய புத்திரன்; ஆத்திரேய கோத்திரன்; மகத தேசத்துக் கதிபதி. மரகத நிறத்தையுடையவன்; பூருவாபிமுகன்; மேருவுக்குச் சமானமாயிருக்கின்ற நாலுகையிலும் வில்லும் அம்பும் அம்பருத் தூணியும் அபயத்தையுமுடைத்தானவன் என்றவாறு. (44)

203. சாதி வணிக னும்ராச
சகுணன் சிங்க வாகனத்தன்
வாத கதியார் துரங்கமெட்டு
வதியு மிரதம் பொன்னிறமாம்
பீத நிறவா டையன்பகழி
பீடத் திருப்பான் கால்விளைப்போர்க்
கோது மிருநூ றுயிரமா
வுரைக்கும் புதமண் டலமேலே.

என்றது, அந்தப் புதனானவன் சாதியில் செட்டி; ராசச குணத்தையுடையவன்; சிங்கவாகனத்தன்; வாயுகதியையுடைய எட்டுக்குதிரை பூண்ட பொன்னிறமாகிய ரதத்தையுடையவன்; அம்புபோலே யிருக்கின்ற பீடத்தையுடையவன். வாயுவை எத்தேச காலமும் உண்டுபண்ணுவிப்பான். அப்படிக் கொத்த புதமண்டலம் இரண்டு லட்சம் யோசனை உன்னதமாம் என்றவாறு. (45)

204. குணக்கா னனத்தன் பார்க்கவகோத்
திரத்தன் பிருகு முனிபுதல்வன்
இணக்கு காம்போ சத்திறைவன்
பூர்வாபி முகன்ராச சகுணத்தன்
கணிக்கும் புயநான் கதிலேயக்
கந்தண் டுடனே கமண்டலமும்
பிணக்குந் தானே யுடல்வெளுப்பாம்
பீத நிறமாம் அயம்பத்தே.

என்றது, அதன்மேலே சுக்கிரனுடைய மண்டலம்; பிருகு முனியினுடைய புத்திரன்; பூருவாபி முகன்; காம்போச தேசத்தையுடையவன்; இராஜஸ குணத்தை யுடையவன்; நான்கு கையிலும் ருத்திராட்சத்தையுந் தண்டு கமண்டலத்தையுமுடையவன். அவன், தேகமும் வஸ்திரமும் வெளுப்பை யுடையவன்; பீதநிறமான பத்துக் குதிரைகளையுடையவன் என்றவாறு. (46)

205. ஊருந் தேரோ பொன்னிறமாய்
உறுமே பஞ்ச கோணமதி
ஞரு மழைக்கோட் சுங்கனுக்கு
இரண்டா மிலக்க மதன்மேலே
பாரும் பாண்டி யவந்திமன்னன்
பாரத் துவாச கோத்திரனே
நேரு மிகலார் சத்திரியன்
சகலதேச ஞேயன் செந்நிறத்தன்.

என்றது, அந்தப் பத்துக்குதிரை பூண்ட பொன்னிறமான தேரிலேறிப் பஞ்ச கோண பீடத்திலிருந்து மழையை விளைவிக்கப்படாநின்ற சுக்கிரமண்டலம் உன்னதம் இரண்டுலட்சம் யோசனை. அதன்மேற் செவ்வாய் மண்டலம். அந்தச் செவ்வாய் பூமியினுடைய புத்திரன். பரத்துவாச கோத்திரன்; பாண்டிய தேசத்துக்கும் அவந்தி தேசத்துக்கும் ராசாவானவன்; சாதி சத்திரியன்; சிவப்பு நிறத்தையுடையவன்; எத்தேச காலமும் பிணியுண்டு பண்ணுகிறவன் என்றவாறு. (47)

206. எமனூர் முகத்தன் செம்மறியே
யிசைவா கனத்தன் புயநான்கின்
அமர்விற் றூணி வாள்கதையு
மணிவோ னுடையுஞ் சோணிதமாந்
தமதா மசமார் குணனங்கி
தனிலே யுதிக்குந் துரகமெண்ப
துமரா கத்தேர் மேவுதனி
சேர்முக் கோணஞ் செவ்வாய்க்கே.

என்றது, தட்சணபிமுகன்; வாகனஞ் செம்மறிக் கடாய்களையுடையவன். நான்கு கையிலும் வில், துணி, வாள் கதையையுடையவன். சிவந்த வஸ்

திரத்தை யுடைத்தானவன் ; தாமச குணத்தன் ; அக்கினியிலேயுண்டான எட்டுக்குதிரை பூண்ட பதுமராகத் தேரின்மேலே முக்கோண பீடத்தி லிருக்கின்ற செவ்வாய்க்கு இரண்டு லக்கம் என்றவாறு. (48)

207. இரண்டா மிலக்க மதன்மேலே
இருக்கும் வடபா லபிமுகத்தன்
பொருந்தாங் கிரச கோத்திரத்தன்
புகழ்சேர் சிந்து தேசத்தன்
அருந்தா தாச்சேய் மறையோனு
மருள்வா னலமே சத்வகுணன்
தரும்பொன் னிறத்தோ னூற்கரத்திற்
றரிப்பா னக்க மாலையன்னே.

என்றது, முன்சொன்ன செவ்வாய்க்கு மேலேயிருக்கின்ற குருமண்டலம் ; வியாழன் பிரமகுமாரன் ; ஆங்கிரச கோத்திரத்தன், கீர்த்தியையுடைய சிந்து தேசத்தன் ; வடபாலபிமுகன் ; சாதி–பிராமணன் ; எத்தேச காலமும் நலஞ்செய்யாநின்ற சத்துவ குணத்தையுடையவன் ; அவனுடைய தேகம் பொன்னிறம் ; நான்கு கையிலேயும் அழகுபொருந்திய கமண்டலம், அக்கமாலையை யுடையவன் என்றவாறு. (49)

208. பாண்டு நிறமாந் துரகமெட்டுப்
பரித்த விரதங் காஞ்சனமாம்
நீண்ட சதுக்கோ ணத்தினிடை
நெடிய பீதாம் பரமுந்நூல்
பூண்ட குருவுக் கிரண்டுலக்கம்
புகலு மதன்மேற் பொன்னுலகம்
மாண்டை யடைப்போன் மேன்முகத்தன்
வளையுஞ் சிலைபொற் பீடத்தன்.

என்றது, பாண்டு நிறமான எட்டுக்குதிரை பூண்ட சொர்னமயமான இரதத்தின்பேரில் நீட்சியையுடைய சதுக்கோண பீடத்தில், பீதாம்பரம் முந்நூல் பூண்ட குருவுக்கிரண்டு லக்கம். சொர்க்கத்துக்குப் போகின்ற வழியை யடைப்பான் ; மேற்கு முகத்தன் ; சிலைபோலும் பீடத்தன் என்றவாறு. (50)

209. தாலஞ் சவுராட் டிரதேயன்
றகுங்கா சிபகோத் திரன்பிரதி
கூலங் குணமோ தாமதமாங்
குலஞ்சண் டாளன் நான்குபுயன்
நீலன் குரம்பை கோசிகமு
நீலன் றண்ட தரன்றேரும்
ஏலும் பரியும் பன்னிறமா
விருக்குங் கதிர்சேய்க் கிரண்டிலக்கம்.

என்றது, சனிமண்டலம். அவனுக்கு நாமதேயம் சூரியபுத்திரன் ; காசிப கோத்திரத்தன் ; சௌராட்டிர தேசத்துக்கு ராசாவானவன் ; துரிதஞ் செய்யாநின்றவன் ; தாமசக் குணமுடையவன் ; சண்டாளகுலத்திற் சனித்தவன் ; நான்கு கையன் ; நீல வஸ்திரம் ; நீலநிறத்தை யுடைத்தானவன் ; தண்டாயுதத்தை யுடையவன் ; பலபரிபூண்ட தேரின்மீது விளங்காநின்ற சூரிய புத்திரனை சனிக்கு இரண்டு லட்சமாம் என்றவாறு. (51)

(வேறு.)

210. சந்திரமண் டலமதற்குப் பதினாறி
லொருபங்கு சாற்றுஞ் சுக்ரன்
வந்துபுகர் மண்டலத்தின் முக்காலே
யரைக்காலா வுரைக்கும் பார்ப்பான்
வந்தகுரு மண்டலமதின் முக்காலாஞ்
சனிசேயு மந்தன் சேய்க்குப்
புந்திகாற் கூறுகு மன்னோர்க்கு
முன்பின்னாய்ப் புகலும் பர்மேல்.

என்றது, சந்திர மண்டலத்துக்குப் பதினாறிலொருபங்கு சுக்கிர மண்டலம். சுக்கிர மண்டலத்துக்கு முக்காலேயரைக்கால் வியாழமண்டலம். வியாழ மண்டலத்துக்கு முக்கால்பங்கு சனி செவ்வாய் மண்டலங்கள். சனி செவ்வாய் மண்டலங்களுக்குக் காற்பங்கு புத மண்டலம். அந்தப் புத மண்டலத்துக்கு மேலே முன்பின்னாக ஆகாசமிருக்கும் என்றவாறு. (52)

211. இவனுடைய மண்டலத்தின் கீழ்பதினா
யிரத்தின்பா லிருக்கும் ராகு
தனுவலகு பதின்மூவா யிரமாகுங்
கதிருடலைச் சாற்றும் பத்தாய்
முனிவிதுவோ பன்னிரண்டா மானதனாற்
பாம்பிரண்டும் பருவ காலம்
தனில்முன்னம் வரத்தாலே படமெடுத்து
வரக்கண்ட மயித்தி யாரி.

என்றது, ராகு கேது கிரணவகை ; முன் சொன்ன சூரிய மண்டலத்தின் கீழே பதினாயிரம் யோசனைக்குங் கீழான ராகு கேதுவினுடைய உடல் பதின்மூன்றாயிரம் யோசனை. சூரியனுடைய சரீரம் பதினாயிரம். சந்திரனுடைய சரீரம் பன்னிரண்டாயிரம். அதனால், ராகு கேது இரண்டுபேரும் பருவகாலங்களில் முற்பகையினாலே படமெடுத்து இவர்கள்பேரில் வரக்கண்ட மாத்திரத்தில் என்றவாறு. (53)

212. சக்கிரமேல் வரக்கண்ட பாம்புமதி
மயங்கியுடல் தளர்ந்து வாடி
நிற்கிறகா லத்தளவே யாங்கிரண
மிவளவென்று நிகழ்த்து பாம்பு
வக்கிரமா யூருங்கா லதுவலய
கிரணமென வழுத்தும் பூவின்
சொற்கரிய மானிடருக் கலாதுவிண்ணோர்க்
கில்லையெனச் சொல்லு நாவே.

என்றது, தயித்தியாரியாகிற மகாவிஷ்ணுவினுடைய சக்கராயுதம் வரக்கண்ட மாத்திரத்திலே இரண்டு பாம்புகளும் மதிமயங்கி, நிரம்பவுந் தளர்ந்து நிற்கிற காலத்தில் கிரண மிவ்வளவென்று நிகழ்த்துவார்கள். அந்தப் பாம்புகள் வக்கிரமாய் நடக்குங்காலத்தில் வலய கிரகணமென்றுஞ் சொல்லுவார்கள். பூமியிலே யிருக்கின்ற மனுஷ்யர்களுக்கேயன்றித் தேவதைகளுக் கில்லையென்று சொல்லுவார்கள் என்றவாறு. (54)

213. கணக்கனும்பார்ப் பான்பிருகு காரிசெவ்வா
யைங்கோளுங் கதிரோ னீசன்
வணக்குஞ்சிலை தனைச்சுழல்கா னன்றேருஞ்
செலுமளவில் மறைவ தல்லால்
குணக்கினுமேற் றிசைதனிலு மத்தமன
முதயமில்லைக் குமுத நேசன்
பணைக்கதிரோன் றனில்மறைவா னன்னோனு
மறைவனராப் பணத்தி னாலே.

என்றது, புதன் வியாழன் வெள்ளி சனி செவ்வாய் இந்த ஐந்துபேரும் சூரியனானவன் ஈசுவரனாலே வளைக்கப்பட்ட மகாமேருவைச் சுற்றிவருங் காலத்தில் ஐந்துபேருங்கூட மேருவைச் சுற்றிவருமளவில், அந்தச் சூரிய கிரணத்தினால் மறைவதல்லாமல், கிழக்கிலு மேற்கிலு முதயாஸ்தமன மில்லை. சந்திரனானவன் ஆயிரங் கிரணத்தோடுங் கூடிய சூரியனில் மறைவான். அந்தச் சூரியனு மந்தச் சந்திரனும் ராகு கேதுக்களினுடைய படத்தினாலே மறைவார்கள் என்றவாறு. (55)

(வேறு.)

இதன்மேற் சப்தரிஷி மண்டலம்.

214. அருந்தவ விசுவா மித்ர னங்கிரா புலத்தி யன்சீர்
திருந்திய கும்ப யோனி தேசிக வசிட்ட யோகம்
புரிந்தகா சிபனே யத்ரி புகழுறு முனிவ ரேழ்பேர்
இருந்தமண் டலமே லக்கம் இயைந்தமண் டலங்கள் வீய்க்கும்.

என்றது, அரிய தவத்தையுடைய விசுவாமித்திரன், அங்கிரா, புலத்தியன், கார்கஸ்தம் பொருந்திய அகஸ்தியன், யோகாப்பியாசத்தையுடைய காசிபன், அத்திரி ஏழுபேருக்கும் இசைந்த லட்சம் யோசனை. இந்த மண்டலங்களெல்லாம் வாயுபாரித்தைச் சேர்ந்திருக்கும் என்றவாறு. (56)

## சிம்சுமார லட்சணம்.

215. உரியதோர் சிம்சு மார முயரம்பன் மூன்றி லக்கம்
சிரமதன் றருமங் கன்னஞ் சேருமுத் தான பாதன்
கிருதுவ தாத்தின் மார்பிற் கேசவன் வருட மிலங்கம்
அரியமித் திரன பானன் அரியமா வருண னூரு.

என்றது, சிம்சுமாரமாகிய முதலையினுடைய பிரமாணம்—13 லட்சம். அந்த சிம்சுமாரத்தினுடைய சிரசில்—தருமன்; கன்னத்தில்—உத்தானபாதன்; அதரத்தில்—எக்ஞபுருஷன்; மார்பில்—கேசவன்; வருஷமிலங்கம்—சூரியன்; மித்திரன்; அபானன், வருணன் துடையில் என்றவாறு. (57)

216. அசுவினீ தேவர் பாதத் தமர்ந்தவன் றலைகீழ் வால்மேல்
சுசிமகேந் திரன்கா சீபன் றுருவமண் டலமோ லக்கந்
திசைதொறு முடுக்கள் போலச் சுழல்கிலன் றிரமாய் நிற்பன்
இசைபுவர் லோக மூவைந் திலக்கமா யுரைக்கு மேலே.

என்றது, பாதத்தில் அசுவினீ தேவர். இப்படிக்குத் தலை கீழாயும் வால் மேலாயும் நிற்பன். அக்கினி, மகேந்திரன், காசிபன், துருவன் இந்த நால்வரு மிருக்கின்ற துருவ மண்டலமோர் லக்கம். திக்குக்கள் தோறும் நட்சத்திரங்கள்போல் மேருவைச் சுற்றி வாராமல் அசையாமல் நிற்பார்கள். புவர்லோகம் பதினைந்து லட்சமாம் என்றவாறு. (58)

217. அந்தமண் டலமேற் கூறு மசைசினை யரும்ப லர்ந்து
கந்தம்விண் டொழுகுந் தேனுற் கற்பகத் தருவுந் தேனும்
பந்தமற் றியாழ்வல் லோரும் பாடமற் றரம்பை யாடச்
செந்தழ றனில்நெய் தூவிச் செறிமகம் புரிந்தோர் தேவர்.

என்றது, முன்சொன்ன புவர்லோகத்துக்கு மேலான தேவலோகத்தின் கண்ணே அசையாநின்ற கொப்புக்களிலே மலர்ந்து, வாசனை பொருந்தித் தேனொழுகாநின்ற கற்பகத்தருவுங் காமதேனுவும் ஆசாபாச மில்லாத நாரதர் முதலாகிய கந்தருவர் கானஞ் செய்ய, அரம்பையர்கள் நடனஞ் செய்ய இருப்பவர்கள் தேவர்கள் என்றவாறு. (59)

218. விற்பிடித் தரசர் முன்னம் வேண்டியே செருவின் மாண்டோர்
கற்புட னிறக்கு மாதர் கங்கையி னாடி னோர்கள்
சொற்பிற ழாம னின்றோர் சூழரி யாச னத்திற்
பொற்புட னிருக்கு மிந்தர புரமெண்பத் தஞ்சு லக்கம்.

என்றது, ராசாக்களிடத்தில் அன்னம் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு உயுத்தகளத்தில் முன்வைத்தகால் பின்வையாமல் யுத்தத்திலே மரணமடைந்தவர்களும், கற்பு மங்கையர்களும், கங்கையாடினவர்களும், ஒருசொல் வாசகனுஞ் சூழச் சிம்மாசனத்திலிருக்கும் இந்திரலோகம் எண்பத்தைந்து லட்சமாம் என்றவாறு. (60)

(வேறு.)

219. மீறு மனத்தோ கவிவேந் தர்நிதம்
மாறு வயதாந் தவமார்க் கண்டனும்
பேறுர் தவயோ கமேபெற் றியவர்
கூறு மகலோ கமோவிரு கோடி.

என்றது, இதன்மேல் மகாலோகம். சாத்துவிக குணத்தோர்களும், வித்துவாம்சர்களும் சிரஞ்சீவியாகிய மார்க்கண்டனுந் தவஞ்செய்யாநின்ற சுக யோகிகளுடைய பக்கமான மகாலோக மிரண்டு கோடியாம் என்றவாறு. (61)

220. அருத்தங் கிரசோ டரியம ணர்களும்
பெருத்தக் கினிசுவா ததர்பிதிர் சோமன்
மருத்தக் கினிகவ் வியவா கனரும்
இருக்குஞ் சனலோ கமெண்கோ டியின்மேல்.

என்றது, அரிதாயிருக்கின்ற ஆங்கிரசன், அரியமணர்கள், பெரிதாயிருக்கின்ற அக்கினி, சுவாததர்கள், பிதிர்தேவதைகள், சோமன், அக்கினி கவ்விய வாகனரும் இராநின்ற சனலோகம் அநேக கோடியாம் என்றவாறு. (62)

221. சனகா தியரெழு வர்கடவ மாரும்
முனிவோர் சிவயோ கியர்மூ தறிவே
கனிநா ரதர்சித் தர்கரந் துறையும்
இனிதாந் தவலோ கம்பனிரு கோடி.

என்றது, சனக சனந்தனர் எழுவரும், தவத்தையுடைய முனிவர்களும் சிவ யோகிகளும், பூர்வஞானந் தெரிந்தோராகிய நாரதர், சித்தர்களும் நிறைந்து இனிதிருக்கின்ற தவலோகம் பன்னிருகோடியாம் என்றவாறு. (63)

(வேறு.)

222. சாருமதன் சத்திய லோகந் தனிலம்
போருகமா மண்டபத்திற் புண்டரீக வாணியுடன்
ஆருஞ்சர சுவதிகாயத் திரிசா வித்திரியும்
சேருமவை சூழவயன் சிம்மாச னத்திருப்பான்.

என்றது, தபோலோகத்துக்கு மேலே யிருக்கின்ற சத்தியலோகத்திலே தாமரைப் புட்ப மண்டபத்தில் வாணியாகின்ற சரசுவதியுங் காயத்திரியுஞ் சாவித்திரியும் உடனிருப்பப் பிரமதேவன் சிம்மாசனத்திருப்பார் என்றவாறு. (64)

223. கமல யோனி கீழ்முகத்தின் கரிய ரிக்கு வேதமும்
அமல மான யசுருவேத மாருந் தென்மு கத்தினில்
விமல புட்ப ராகமேனி சாம வேதம் வடமுகம்
குமுத மாம தர்வணம் குளிர்மு கம்பிர தீசியாம்.

என்றது, பிரமதேவனுக்கு நான்கு முகம். அவற்றுள் கீழ் முகத்தில் கறுப்பாயிருக்கின்ற இருக்கும் வேதமும், தென் முகத்தில் நிர்மலமா

யிருக்கின்ற எசுர்வேதமும், வடமுகத்தில் புட்பராகம் போல விருக்கின்ற சாம வேதமும், மேல் முகத்தில் நீலோற்பலம் போலேயிருக்கின்ற அதர்வண வேதமும் சனித்தனவாம் என்றவாறு. (65)

(வேறு.)

224. விதியுலகீ ரெண்கோடி விண்மானச சரசின்
முதியவன்சூ லுதிர்த்தமுத் தைமுட்டை யென்றிறகின்
ஒதுக்கி யடைகாக்கு மோதிமமார் கங்கை
நதிக்கரையி லேமுனிவர் நற்றவங்கள் செய்வாரே.

என்றது, பிரமலோகம் பதினறுகோடி. அதனுள் இருக்கின்ற மானச சரசில் உற்பத்தியான சங்குகள் சூலாகியுதிர்ந்த முட்டைகளை அன்னங்களா னவை தம்முட்டைகள் என்று இறகுகளிலே யொதுக்கி அடைகாத்திரா நின்ற, ஆகாச கங்கைக் கரையில் முனிவர்கள் தவஞ்செய்வார்கள் என்ற வாறு. (66)

225. பூவுலகி லசுரனைப் போற்றித் தவம்புரிந்தோர்
காவிலுறை முனிவோர் கங்கைநதி யிற்படிவோர்
தேவர் பரவாசு தேவர்விர சாநதியும்
மேவும்வை குந்தமென விள்ளுவர்கள் மேதினியில்.

என்றது, பூவுலகத்தில் ஈசுவரனைப் பூசைபண்ணிப் பணிந்தோர்களும், வனத் திலேயிருந்து தவசு செய்வோர்களுங் கங்காஸ்நானஞ் செய்வோர்களுந் தேவர்களும், பரமமாய்ச் சிலாக்கியமாயிருக்கிற வாசுதேவரும் மேவியிருக்கப் படாநின்ற வைகுந்தமென்று பூலோகத்திற் சொல்லுவார்கள் என்ற வாறு. (67)

226. அவ்வுலகு மேலாக வாழிநந்து வாழ்கதையுங்
கொவ்வையிதழ் முத்தெயிற்றுக் கோகனக மாதுடனே
செவ்விதழ் கௌத்துபமுடி சேர்ந்திலங்க மார்பகங்கை
யவ்வியமால் விண்டுலகு வானதொரு நாற்கோடி.

என்றது, சத்திய லோகத்துக்கு மேலான விஷ்ணு லோகத்தில் சங்கு சக்கரம் வாள் கதையும், நான்கு கையிலுந் தரித்துக் கொவ்வைப்பழம் போல சிவந்த இதழும் முத்துப்போலத் தந்த பத்தியையுமுடையவாகி லட்சுமி சமேதராக வும், கவுஸ்துவ மாலையுமாக விஸ்தரித்து இலங்காநின்ற ஒருநாளும் அழிவில்லாத விஷ்ணுலோகம் நான்கு கோடியாம் என்றவாறு. (68)

(வேறு.)

227. ஆர மாழை மணிகு யின்ற றண்பொதிந்த மேடையின்
வீர பாகு தேவர் சூழ மேகநாதன் மகள்குற
நாரி யோடு கூடு சாமி நாதன் வல்லி வசுரரைப்
போரில்வெல் மயூர கந்த புரமி ரண்டு கோடியே.

என்றது, முத்துக்கள் நவரத்தினங்களினுலேயும் சொர்ணங்களினுலேயும் பொதிந்த கோட்டைகள் சூழ்ந்த மேடாமேடை யுப்பரிகையில் வீரபாகு முதலான ஒன்பது பேர்களுந் தேவர்களுஞ் சூழ, இந்திரன் மகளான தெய்வயானையும் வள்ளியும் சமேதராகி வலிமைபொருந்திய அசுரரைப் போர் செய்து வென்ற மயூரத்தையுடைய கந்தபுரமிரண்டு கோடியாம் என்றவாறு. (69)

(வேறு.)

228. தூவு மகரந்த நறைச்சோலை சூழுநீபக்
காவின்மணி மண்டபத்திற் காக்குமணி மாதியர்கள்
ஆவலுடன் றெண்டுசெய வம்பொ னரியணைமேல்
மேவுங் கவுரிபுரம் விள்ளுமிரு கோடியின்மேல்.

என்றது, கவுரிபுரம். புட்பரசங்கள் இறைக்கப்பட்ட சோலை சூழ்ந்த மணி மண்டபத்தில் இராநின்ற அட்டசத்திகள் பிரீதியுடனே ஏவல்செய்யச் சொர்ன மயமான அரியாசனத்திலிருக்கின்ற கவுரிபுரம் இரண்டு கோடியாம் என்றவாறு. (70)

(வேறு.)

229. ஏம மாற்றண்ட முட்டு கோபுர மாடமா ளிகையின்
மீது யாழ்முனி யிசைகள் பாடவே
தேம லார்முலை மாத ராடவே வேதன் மால்விபு
தாதி சூழவே செயசெ யாவென
வாமி சீருமா தேவி சானுவி யோடு மாலரி
யாச னத்தின்மேல் வளரு மீசனும்
ஆம காசிவ லோக மோவிரு கோடி யண்டமுக
டோசொல் கோடியாய்ப் பகரு வாரரோ.

என்றது, மகாசிவலோகம். சொர்னமயமான கோட்டையோடுங் கூடிய கோபுரம் மாடமாளிகைகளில் தும்புரு நாரதர் முதலான கந்தருவர் கானஞ் செய்ய, தேமல் முலையையுடைய தேவஸ்திரீகள் நடனஞ்செய்ய, பிரமதேவன் மால் தேவதைகள் சூழ்ந்துநின்று செயசெயாவென்று துதிக்க, ஈசுவரனுடைய இடது பக்கத்திலிராநின்ற உமாதேவி, கங்கை யோடுஞ் சூழ, அழகுபொருந்திய சிம்மாசனத்தில் இராநின்ற ஈசுவர னுடைய மகாசிவலோகம் இரண்டுகோடி மேல் அண்டமுகடு கோடியாம் என்று சொல்வார்கள் என்றவாறு. (71)

(வேறு.)

230. விரிவா யண்டத் தொகையதனை
விளம்பு நூறு கோடியதால்
அரிகால் வருணன் நிருதியெமன்
அங்கி சோம னீசானன்
பரிவாய்க் கீழ்மே லாங்காட்டை
பத்தின் பத்தாய்ப் பத்திநிற்குஞ்
சரியா மண்டப் புறத்தினுள்ளுஞ்
சாரும் புவன நூற்றெட்டே.

என்றது, முன்சொன்ன அண்டங்களினுடைய பிரமாணத்தைச் சொன்னோம். அதன் மேலான புவனங்கள் இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, சோமன், ஈசான்ன் ஆகத் திக்கு எட்டும் அண்டத்தினுடைய கீழாகப் பத்தும் மேலாகப் பத்தும் ஆகப் பத்துத்திக்கும் புவனங்கள் நூறும், முன்சொன்ன அண்டத்தினுடைய புவனங்களெட்டும் ஆக நூற்றெட்டுப் புவனங்கள் என்றவாறு. (72)

231. கருது புவனத் துறுபூத
கணங்கள் பரவிப் பணிந்தேத்த
அருண மழுவும் வரதமுட
னபயந் தருங்கை நான்கும்விட
மருவு மிடற்றின் முக்கண்ணும்
வனப்பு மரியா சனத்தினருள்
புரியும் புவனேசு வரியுடனே
புவன நாத ரிருப்பாரே.

என்றது, சொல்லாநின்ற புவனத்திலிருக்கின்ற பூதகணங்களெல்லாந் தோத்திரஞ் செய்து நமஸ்கரிக்க, மான்மழுவும் அபயமும் (உடைத்தாயும்), விஷத்தையுடைய கண்டமும், முக்கண்ணும் இவை முதலான அழகையுடைய புவனநாதன் புவனேசுவரியுடனே சிம்மாசனத்திலிருப்பர் என்றவாறு. (73)

(வேறு.)

232. உலகுறு மானவர்க் காண்டுவிண்
டேவருக் கொருநாளாம்
அலகில்முப் பான்செலி லோர்திங்க
ளாமென வத்திங்கள்
இலகுற்றீ ராறுகொண் டாலொரு
வாண்டெனு மெமனூரில்
குலவிய பிதிர்களுக் கெண்கண்டத்
தோருக்குங் குறித்தாரே.

என்றது, உலகத்தின் மனிதர்களுக்கு ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாள். அப்படி முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம். அப்படிப் பனிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். இந்தப் பிரகாரம் பிதிர் தேவதை களுக்கும், மற்ற எட்டுக் கண்டத்திலிருக்கின்ற பேர்களுக்கும் வயதாம் என்ற வாறு. (74)

233. அவ்வாண் டிருவா ருயிரங் கொண்டா லதுதானே
இவ்வார் சதுர்யுக மாகுமவ் வுகமே குறையாமல்
ஒவ்வோர்க் கெழுபத் தொன்றே மனுக்களுக் குறுவாணாள்
இவ்வா றியம்புது மறைநூ லுலகினி லுறுவோர்க்கே.

என்றது, முன்சொன்ன பிரகாரம் பன்னீராயிரம் வருஷங்கொண்டது ஒரு சதுர்யுகம். அப்படி எழுபத்தொரு சதுர்யுகங் கொண்டது மனுக்களுக்கு வாணாளென்றும், இந்தப் பிரகாரம் வேதங்கள் உலகினில் சொல்லும் என்ற வாறு. (75)

234. இருவா யிரஞ்ச துர்யுக மோர்தின மெனுமந்நாள்
பரவுமுப் பானோர் திங்களத் திங்கள் பனிரண்டாம்
வருடமவ் வருடம் நூறும் பிரமன் வாணாளத்
துருகிண னுங்கோடி யழிந்திடிற் கண்ணன் றுயில்வானே.

என்றது, இரண்டாயிரஞ் சதுர்யுகம் பிரமாவுக்கு ஒரு தினம். அந்நாள் முப்பது கொண்டது ஒருமாதம். அப்படிப் பனிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம். அப்படி நூறு வருஷங்கள் கொண்டது பிரமாவுக்கு வாணாள். அந்தப் பிரமதேவன் கோடியாவர்த்தி பிறந்து இறந்தகாலம் விஷ்ணுவான வர் பாற்கடலில் நித்திரை செய்வார் என்றவாறு. (76)

235. சிலைப்புயச் சுவயம்பு மனுசுவா ரோசிட்டன் செகம்யாவும்
வெலுத்தமன் றுபதன் ரைவதன் சக்குசன் விரைப்போது
இலக்குமி யார்வைவச் சுதனும்மச் சாவர்னி யிகல்வேந்தைக்
கலக்கிய வேற்றக் கசாவர் னியமனுக் கடலேழும்.

என்றது, மலைக்குச் சமமான புசத்தையுடைய சுவ (ா) யம்புமனு-1 ; சுவாரோ சிட்ட மனு-2, சகமுழுதும் வெல்லா நின்ற உத்தமன்-3, தாபதன்-4, ரைவதன்-5, சக்குசன்-6, வாசத்துடனே கூடிய தாமரைக் கமலத்திலிருக்கிற இலட்சுமி கடாட்சம் பொருந்திய வைவச்சுத மனு-7, சாவர்னிய மனு-8, சத்துராதிகளைச் சயம் பண்ணுநின்ற கசாவர்னிய மனு-9, என்றவாறு. (77)

236. வளைந்திடும் புவிபரி பிரமசா வர்னியன் மடியாசை
களைந்திடுந் தரும சாவர் னியன்மனங் கலங்காத
உளஞ்செறி சாவர்னியு முரோசிட் டமனு வுலகெல்லாம்
அளந்தவ னுமெனப் பவுமிய னீரே ழுறைவாரின்.

என்றது, சமுத்திரஞ் சூழப்படா நின்ற பூமியை யாளுகின்ற பிரம சாவர் ணியமனு-10, ஆசாபாசங்களைப் போக்காநின்ற தரும சாவர்ணிய மனு-11, ஒருபோது மனங்கலங்காத பலத்தையுடைய சாவர்ணி மனு-12, சுவாரோ சிட்டன்-13, பூமியெல்லா மளந்த மகா விஷ்ணுவுக்குச் சமானமான பவுமிய மனு-14, ஆக இப்படிக்கு மனுக்கள் என்றவாறு. (78)

(வேறு.)

237. நித்தியப் பிரளயம் மனுவிறத்தல்
நிகழ்த்து நைமித் தியன்பிரளயம்
உற்ற பிரமன் பகலொழிந்து
உறங்க லேபிரா கிருதப்பிரளயம்
பெற்றிக் கமலா சனனிறப்பாய்ப்
பேசு மாத்யந் தப்பிரளயம்
கத்து கடல்சூழ் பாரண்டங்
களுமே வுடைந்து[illegible]லாகும்.

என்றது, நித்தியப் பிரளயமாவது பூமியின் கண்ணே யிருக்கின்ற மனிதர் கள் இறத்தல். நைமித்தியப் பிரளயமாவது, பிரமதேவன் பகலொழிந்து இராத்திரி நித்திரை செய்தல். பிராகிருதப் பிரளயமாவது பிரமதேவன் இறந்து பிறப்பான். ஆத்யந்தப் பிரளயமாவது; ஒலியாநின்ற கடல் சூழ்ந்த பாரண்டங்கள் முழுவதும் உடைந்துசெலப் பிரளயமாம் என்ற வாறு. (79)

(வேறு.)

238. இப்பொழுதே ழாமனுவை வச்சுவதன்
வாணாளோ வெழுபத் தொன்றாய்ச்
செப்புசதுர் யுகமதிலே வெழுநான்காங்
கலியுகத்திற் செல்லு மாண்டோ
தப்பறவைந் தாயிரத்துக் கறுபத்தி
ரண்டுகுறை தான்ச காத்தம்
ஒப்பறுமா யிரத்தெழுநூற் றிருபத்தொன்
பான்வருட மியம்பக் கேண்மின்.

என்றது, முன்சொன்ன பதினான்கு மனுக்களில் இப்போது ராச்சியம் பண்ணு கிற ஏழாவது மனு வைச்சுதன். அவனுக்கு வயசு எழுபத்தொரு சதுர்யுகம். அவற்றுள் செல்லு இருபத்தேழு சதுர்யுகம் போக, இருபத்தெட்டாஞ் சதுர் யுகம். கலியுகத்திற் செல்லு ஐயாயிரத்துக்கு அறுபத்திரண்டு வருஷங் குறை சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து எழுநூற்று இருபத்தொன்பது (1729) ஆகின்ற வருஷத்தில்—மேல் சொல்வோம் என்றவாறு. (80)

மேலுலக முரைத்த வத்தியாயம்

239. மீகாக்கு மிந்திரனை முனிவர்களை
யலர்மாதை விண்ணோர் தம்மைப்
பாகார்மொழி சசியென்னு மரம்பையரைச்
சிறைசெய்து பகலோன் றன்னூர்க்
கேகாமல் விலக்கினவ னூரெரித்த
வன்[1]வருட மானே[2] றிங்கள்
வாகான மணித்தேதி மாலண்ட
கோளமதை வகுத்தல் செய்தாம்.

என்றது, சுவர்க்க லோகத்தில் இராநின்ற முனிவர்களையுஞ் சீதாதேவியை யும் வாங் மாதுரியத்தையுடைய தேவஸ்திரீகளையுஞ் சிறைசெய்து, சூரியனைத் தன்னூரிற் போகவொட்டாமல் விலக்கின ராவணனுடைய இலங்காபுரியை எரித்தவன் பேரையுடைய வருஷம், பரமேஸ்சுவரன் வாகனமாகிய மாசம், நவமணியான தேதியில் பெருமை பொருந்திய அண்ட கோளத்தை உரைத்தோம் என்றவாறு. (81)

(வேறு.)

240. உரைசெயு மண்ட கோளத் துண்மையை யுலகத் தோர்கள்
புரையற வுணர ஞான முறுமிகு புகழு முண்டாய்த்
தரையுறு கவிவல் லோர்கள் சற்சனர் துதிக்கச செய்ய
மரைமக ளருள்பெற் றுப்பின் வான்றுய்த்து வீடு சேர்வார்.

என்றது, சொல்லா நின்ற அண்ட கோளத்தினுடைய நிச்சயத்தை உலகத் தோர்கள் குற்றமற அறிய, ஞானமும் மிகுந்த புகழுமுடைத்தாய், பூமி யிலிராநின்ற சற்சனர் வித்துவான்கள் துதிக்கத் தக்கதாயும், செந்தா மரை [மலர்] மேல் எழுந்தருளிய இலட்சுமீ கடாட்சம் பெற்று மோட்சத்தை யடைவார்கள் என்றவாறு. (82)

(வேறு.)

241. அத்தன் வெண்கம லத்தன் மானுறு
மண்ட கோளவி லாசமோ
கத்து வெண்டிரை யமுதெ னக்கவி
ராச பண்டித னனுவயன்
மெத்த வெண்டயி ருண்ட சுந்தர
ராசன் வேம்பத்தூர் வேதியன்
முத்து வேங்கட சுப்பை யன்சொலு
முத்த மிழ்களும் வாழியே.

---

[1] பிலவங்க வருஷம். [2] வைகாசி மாதம்.

என்றது பிரம்மா, விஷ்ணு ருத்திர ஸ்வரூபமா யிராநின்ற **அண்டகோள லட்சணத்தை** சப்தியாநின்றிருக்கின்ற (கீ) [கூீ] ராப்தியி லுண்டான அமுதம் போல விருக்கின்ற **கவிராச பண்டிதருடைய** வம்சஸ்தனுகவும், **ஆயர்பாடி** யில் மிகவும் பால் தயிர் அருந்தாநின்ற **சுந்தரசாசப் பெருமாள்** கிருபை தங்கிய **வேம்பத்தூரிலிராநின்ற முத்துவேங்கட சுப்பையினுலே செய்யப்** பட்ட முத்தமிழ்களும் வாழியாம் என்றவாறு. (83)

**நான்காவது**

**மேலுலக முரைத்த வத்தியாய முற்றும்.**

**அண்டகோள விலாசமும் உரையு முற்றும்.**

R THE SALE OF MADRAS
T PUBLICATIONS.

ADRAS CITY.

ras.

RKS PUBLISHING SOCIETY, Madras-1.

ras-1.

dras-14.
NIC CO-OPERATIVE STORES, LIMITED, Madras.

MUFASSAL.

R.S. Puram) Coimbatore.
district.
Krishna district.
da, Krishna district.
ayavada, Krishna district.
adurai district.
Malabar district.
ar district.
district.
ct.
Kanara district.
Kanara district.
iruchirappalli district.

i district.

STATES.

TE SALE OF SRI BHARATHIAR'S
ONS.